உ
சிவமயம்



# அமரர் இரத்தினம் சீனித்தம்பி

(முன்னாள் காகிதஆலை உத்தியோகத்தர்)

அவர்களின்

## 31ம் நாள் நினைவு மலர்

21.08.2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எங்கள் வாழ்வுக்கும், வளர்ச்சிக்கும்,

உறுதுணையாக இருந்த

எங்கள் அன்புத் தெய்வம்

**அமரர்**

**இரத்தினம் சீனித்தம்பி**

அவர்களின் இனிய நினைவுகளை

எங்கள் உதிரங்களிலும்,

உணர்வுகளிலும் சுமந்த வண்ணம்

இம்மலரை அவரின்

பொற்பாதங்களுக்கு

காணிக்கையாக்குகின்றோம்.

**மனைவி, பிள்ளைகள்,**

**மருமக்கள்,**

**உறவுகள்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# அமரர் இரத்தினம் சீனித்தம்பி

மலர்வு
22.04.1926

உதிர்வு
21.07.2014

## திதி வெண்பா

மண்ணில் நல்ல வண்ணம் மாண்புற வாழ்ந்து
எண்ணிய கருமங்களை – பண்புறப்
பண்ணிச் சீனித்தம்பி தசமிப் பொழுதில்
நண்ணினார் காண் ஈசன் கழல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்



## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலு மெயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

# பஞ்ச புராணம்

## தேவாரம்

தந்தையார் தாயார் உடன்பிறந்தார்
தாரமார் புத்திரரார் தாந்தா மாரே
வந்தவா றெங்ஙனே போமா றேதோ
மாயமா மிதற்கேதும் மகிழ வேண்டா
சிந்தையீர் உமக்கொன்று சொல்லக் கேண்மின்
திகழ்மதியும் வாளரவும் திளைக்குஞ் சென்னி
எந்தையார் திருநாமம் நமச்சி வாய
என்றெழுவார்க் கிருவிசும்பி லிருக்க லாமே.

- அப்பர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்
பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய் செய்தபறிதான்
தாழ்(து) அறஞ் செய்மின் தடங்கண்ணான் மலரோனும்
கீழ்மேல் உறநின்றான் திருக்கேதாரம் எனீரே.

# திருவாசகம்

பாவநா சாஉன் பாதமே அல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
தேவர்தந் தேவே சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
மூவுல குருவ இருவர்கீழ் மேலாய்
முழங்கழ லாய்நிமிர்ந் தானே
மாவுரியானே வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே.

திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிசைப்பா

இவ்வரும் பிறவிப் பௌவநீர் நீந்தும்
ஏழையேற் கென்னுடன் பிறந்த
ஐவரும் பகையே யார்துணை யென்றால்
அஞ்சலென் றருள்செய்வான் கோயில்
கைவரும் பழனங் குழைத்தசெஞ் சாலிக்
கடைசியர் களைதரு நீலஞ்
செய்வரம் பரும்பு பெரும் பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே.

திருச்சிற்றம்பலம்

# திருப்பல்லாண்டு

எந்தை யெந்தாய் சுற்றமுற்று மெமக்கமு
தாமெம் பிரானென்றென்று
சிந்தை செய்யுஞ் சிவன் சீரடியா
ரடிநாய் செப்புறை
அந்தமி லானந்தச் சேந்த னெனைப்புகந்
தாண்டுகொண் டாருயிர்மேற்
பந்தம் பிரியப் பரிந்தவ னேயென்று
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரிய புராணம்

திருச்சிற்றம்பலம்

தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்றன்
திருநடம் குப்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே எனக்கு
வலிதாம் இன்ப ஆம் என்று
கண்ணில் ஆனந்த அருவி நீர் சொரியக்
கைம்மலர் உச்சிமேற் குவித்துப்
பண்ணினால் நீடி அறிவரும் பதிகம்
பாடிநார் பரவினார் பணிந்தார்

திருச்சிற்றம்பலம்

- சேக்கிழார் -

# மரணக்கிரியை வேளைக்குப் பொருத்தமான பிரார்த்தனைப் பாடல்கள்

மனித வாழ்வின் அந்தமான மரணாவஸ்தையின் போது சீவன் பதைக்கும், அந்த நேரத்தில் நிலையற்ற இந்த உடம்பைப் பற்றியும் வாழ்க்கையைப் பற்றியும் புகழ்ந்து பேசிக்கொண்டிருக்காமல் இயம உபாதையைக் குறைக்கவும், பதைக்கின்ற சீவனுக்கு தெய்வ உணர்வை ஊட்டுவதற்காகவும் கீழ்வரும் பஞ்சபுராணப் பாக்களை நெஞ்சுருக இசையோடு பாடலாம். இதனால், இறை உணர்வு ஏற்பட்டு சீவன் பிரியும் போது நற்கதியடையும். அத்தோடு அச்சீவன் உடலை விட்டு நீங்கி உடலை சுடுகாட்டில் சமர்ப்பிக்க முன்பும் மேலுள்ள பஞ்சபுராணத்தை ஓதலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாழ்வின் தன்மையை மக்களுக்கு எடுத்துக்காட்டும் வகையில் மரண கிரியை வேளை பாடுவதற்கு உகந்தது.**

# பட்டினத்தார் பாடல்கள்

முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரு முடிவிலொரு
பிடிசாம்பலாய் வெந்து மண்ணாவதுங்கண்டு பின்னுமிந்தப்
படிசார்ந்த வாழ்வை நினைப்பதல்லாற் பொன்னினம்பலவர்
அடிசார்ந்து நாமுய்ய வேண்டுமென்றேயறிவாரில்லையே.

ஐயுந் தொடர்ந்து விழியுஞ்செருகி யறி வழிந்து
மெய்யும் பொய்யாகி விடுகின்ற போதொன்று வேண்டுவன்யான்
செய்யும் திருவொற்றியூருடையீர் திருநீறு மிட்டுக்
கையுந் தொழப் பண்ணியைந் தொழுத்தோதவுங் கற்பியுமே.

பத்தும் புகுந்து பிறந்து வளர்ந்து பட்டாடை சுற்றி
முத்தும் பவளமும் பூண்டோடி ஆடி முடிந்த பின்பு
செத்துக் கிடக்கும் பிணத்தருகேயினிச் சாம்பிணங்கள்
கத்துங் கணக்கென்ன காண்கயிலாபுரிக் காளத்தியே.

அத்தமும் வாழ்வும் மகத்துமட் டேவிழி யம் பொழுக
மெத்திய மாதரும் வீதி மட்டே விம்மி விம்மியிரு
கைத்தலம் மேல் வைத்தழுமைந்த ருஞ் சுடுகாடு மட்டே
பற்றித் தொடருமிருவினைப் புண்ணிய பாவமுமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் பெற்ற தாயாருமென்னைப் பிணமென்றிகழ்ந்து விட்டார்
பொன்பெற்ற மாதரும் போவென்று சொல்லிப் புலம்பிவிட்டார்
கொன்பெற்ற மைந்தரும் பின்வலம் வந்து குடமுடைத்தார்,
உன் பற்றொழியவொரு பற்றுமில்லை யுடையவனே.

நாப்பிளக்கப் பொய்யுரைத்து நவநிதியந்தேடி
நலமொன்று மறியாத நாரியரைக் கூடிப்
பூப்பிளக்க வருகின்ற புற்றீசற் போலப்
புலபுலெனக் கலகலெனப் புதல்வர்களைப் பெறுவீர்

காப்பதற்கும் வழியறியீர் கைவிடவு மாட்டீர்
கவர் பிறந்த மரத்துளையிற் கானுழைத்துக் கொண்டே
ஆப்பதனையசைத்துவிட்ட குரங்கதனைப் போல
அகப்பட்டீர் கிடந்துழல அகப்பட்டீரே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாயாருக்கு தகனக் கிரியை செய்கையிற் பாடிய வெண்பா

# பட்டினத்தார் பாடல்

**(தாயாரை எரிக்கும்போது இப்பாடல்களைப் பாடல் உத்தமம்)**

ஐயிரண்டு திங்களா யங்கமெலாம் நொந்துபெற்றுப்
பையலென்ற போதெ பரிந்தெடுத்துச் - செய்யவிரு
கைப்புறத்தி லேந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பிற் காண்பே னினி? 1

முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாட்சுமந்தே
அந்திபக லாய்ச்சிவனை யாதரித்துத் - தொந்தி
சரியச் சுமந்து பெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல்மூட்டு வேன்? 2

வட்டிலிலுந் தொட்டிலிலு மார்மேலுந் தோள்மேலும்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து - முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டுந் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீ மூட்டுவேன்? 3

நொந்து சுமந்து பெற்று நோவாம லேந்திமுலை
தந்து வளர்த்தெடுத்துத் தாழாமே - அந்தி பகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றுந்தாய் தனக்கோ
மெய்யிலே தீ மூட்டுவேன்? 4

அரிசியோ நானிடுவேன் ஆத்தாள் தனக்கு
வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல் - உருசியுள்ள
தேனே யமிர்தமே செல்வமே திரவியப்பூ
மானே யெனவழைத்த வாய்க்கு 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அள்ளி யிடுவ தரிசியோ தாய்தலைமேற்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல் - மெள்ள
முகம் மேல் முகம் வைத்து முத்தாடி யென்றன்
மகனே யெனவழைத்த வாய்க்கு 6

## கலிவிருத்தம்

முன்னை யிட்டதீ முப்புரத்திலே
பின்னை யிட்டதீ தென்னிலங்கையில்
அன்னை யிட்டதீ அடிவயிற்றிலே
யானு மிட்டதீ மூள்க மூள்கவே. 7

## நேரிசை வெண்பா

வேகுதே தீயதனில் வெந்து பொடிசாம்பல்
ஆகுதே பாவியே னையகோ - மாகக்
குருவி பறவாமல் கோதாட்டி யென்னைக்
கருதி வளர்த்தெடுத்த கை. 8

வெந்தாளோ சோணகிரி வித்தகா நின்பதத்தில்
வந்தாளோ வென்னை மறந்தாளோ - சந்ததமும்
உன்னையே நோக்கி யுகந்து வரங்கிடந்தென்
றன்னையே யீன்றெடுத்த தாய் 9

வீற்றிருந்தா ளன்னை வீதி தனிலிருந்தாள்
நேற்றிருந்தா ளின்றுவெந்து நீறானாள் - பாற்றெளிக்க
எல்லீரும் வாருங்கள் ஏதென் றிரங்காமல்
எல்லாஞ் சிவமயமே யாம். 10


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவமயத்துள் வைத்துக்கார்

**( தந்தையின் பிரிவெண்ணும் பாமாலை )**

**ஆக்கம்: சிவயோகச் செல்வர். சாம்பசிவம் சிவாச்சாரியார்**

01. வாழ்நாள் முழுதும் வியர்வை சிந்தி வைய
ஊழ் முறைகள் மாறாது வளர்த்தெடுத்து
ஏழ்பவமும் எண்ணும் படி ஏற்றமீந்த
காழ்ப்பு நெஞ்சனை எக்காலம் காண்பேன் இனி

02. பல்லாண்டென் உடற்கருவை பக்குவமாய்
பாதுகாத் தன்னையிடமீந்து – நிதமது
நல்முறையில் வாழ வைத்த அப்பாவை நான்
ஏதுலகில் காண்பேனோ ஐயே

03. பூமீது யான் வாழ பொழுது பல பாராது
பூமான் இலட்சணமாய் பரிவோடு வளர்த்த
சாமி நீதானே தந்தையே சம்மியத்துவ
கோமானாய் சென்றாய் குழறுவது நாமன்றோ

04. மடியினிலும் தோள் மேலும் மார் மேலுமாட்டி
பிடி விலகா கையேந்தி பக்குவமாய் வளர்த்து
அடியாது அன்போடரவணைத்த அப்பாக்கு
பிடி மணல் போடவோ பிள்ளையாய் பிறந்தேன் யான்

05. குடிக்கும் பாலறிந்து என்பால் அன்பால்
கடின உழைப்பினால் வாங்கி – பொடி
உடல் வளர்த்தனையீந்த அப்பாவின்
சடலத்தை மண்ணுண்ண வைத்தேனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. கண்மணியென்று காலமெலாம் முத்தமீற்று
நண்ணும் போது நாடி தடவி – நண்ணாரற்று
பண்போடு வாழென்று சொன்ன அப்பாக்கோயான்
சுண்ணமிடித்து வைக்கலாச்சே

07. குற்றமெது செயினும் குணங்கொண்டு
நற்தவமே செல்வமேயென் – கொற்றவா
என்றுரைத்த அப்பா உடல், தனிலே
இன்றரிசி இடலாச்சுதே

08. வஞ்சமற்ற நெஞ்சனாய் வையகத்தில் வாழென்று
துஞ்சும் பொழுதுரைத்து – கொஞ்சியே
பிஞ்சுக் கரம் பற்றி பணம் தந்த தந்தைக்கோ
மஞ்சளரிசிக் காசிது

09. வேண்டும் பொருள் கேட்டு வேடிக்கை பேசியே
தூண்டும் நல்லறக் கதை சொல்லும் தந்தையே
நீண்டமா கட்டைக்குள் உடற்கட்டை வைத்து
ஆண்மகன் யானென்றக்கினி மூட்டலாச்சே

10. மனம் புண்ணாகி வேகாமல் மகவென்னை
சினம் கொண்டு சீறாமலே – தினம் கணம்
நனவிலும் கனவிலும் வளர்த்த தாதைக்கோ
அனல் மூட்டி எரிப்பன்யான்

11. தட்டிப் பிறர் நகைக்காமல் தங்கமாயென்னை
கட்டி அணைத்தன்பாகவே – முட்டி முகச்
சிரிப்பேற்று வளர்த்த அப்பாக்கோ சிதையில்
எரிய தணல் இட்டனன் யான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. என் மனம் அறிந்து உடுக்குமுடையீந்து
என்னணிவு கண்டுடனே தன் – கன்னமதில்
சொடுக்குப் போட்டு சிரிக்கும் அப்பாக்கு சேயேன்
கொடுக்கும் பரிசு கண்ணீரோ

13. இடுப்பிற் சுமந்து தோளிற் சுமந்தறிவு
கொடுக்க பள்ளி வாசல் வரை – நடந்தவுன்
உடம்பை மண்ணுக்கோ தீக்கோ இடுவனப்பா
நடப் பாரறிவார் நடேசா

14. படுத்திருந்தாரப்பா பாயினில் நேற்றிருந்தார்
விடுப்புரைத்தவரின்று – ஒடுங்கினார்
எடுத்த வாழ்விதில் நடப்பதாரறிவாரெல்லாம்
எடுத்தாடும் பாதன் ஆட்டம்

15. அப்பாவை எனக்கீந்த ஆண்டவனே
தெப்பமாயிருந்தென்னை – இப்பாரில்
அவலமின்றி கரைசேர்த்த தந்தையை
சிவமயத்துள் வைத்துக்கார்

குறிப்பு :– இப்பாமாலையில் உள்ள 06ம், 09ம், 10ம், 11ம் பாடல்கள் தந்தையின் சடலம் எரிக்கப்பட்டால் மாத்திரமே பாட வேண்டும். ஏனையவை புதைக்கப்படும் போதும் எரிக்கப் படும் போதும் தந்தையின் சடலத்துக்காக பாடப்படுபவை ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண வீடுகளில் பிரிந்த ஆன்மாவுக்காக இறைவனை வேண்டி பாடுவது

## மோட்ச மாலை

### விநாயகர் வேண்டுதல்

அரியானைக் கணபதியே அரனார் சேயே
ஐங்கரனே மாதுமையாள் கண்ணின் மணியே
கரிமுகனே கற்பகமே கசடறுத்து
இங்கிதமாக இவ்வுலகில் வாழ வைத்தாய்
பிரிவுற்ற ஆத்மா பாழுடம்பை விட்ட கன்று
தங்குதற்கான மோட்ச வீடு தேடுதையா
தெரியாச் சீவனப்பா புரியாப் பிள்ளையப்பா
சங்கு சக்கரன் தாள் சேரத்துணை செய்யப்பா.....

அஞ்செழுத்தான் மைந்தனே அமரரோடு இந்த
அடியானது ஆத்மாவை இணையச் செய்வாயே
அஞ்சத்தான் எழுத்தாற்றி மோட்சமடையும் படி
விடிவு நெறி சீவனுக்கு வழங்கு மையா
தஞ்சமென்பான் பிழைபொறுப்பாய் தந்தி முகனே
நெடுமாலே இவன் வைகுந்த வழியில் நின்று
அஞ்சவத்தை யகன்று இந்திரபதிப் பாதை
அடுத்தல் கொள கிருபை புரி ஐங்கரனே....

போற்றி எம் ஜெக கணநாதா போற்றி....! போற்றி.....!
நின் மலர்தாழ் இணையடிகள் போற்றி போற்றி
ஏற்றலிலாதிச் சீவன் அலையாத வண்ணம்
கன்னல் பிரியா கடையேற்றி அமரவாழ்வாம்
தேற்றல் மிகு வைகுந்தம் சேர் பாதை காட்டப்பா
நன்னெறி நில்லாத நலிவுற்ற சீவனுக்கு
நற்காப்பு நீயே தான் நண்ணி வந்தாளுமப்பா
அன்பே சிவமான கயிலாயப் பேறருள்.....!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிவபெருமான் வேண்டுதல்

அர்த்தனே அரனே ஆதி முதல்வனே உமையாள் பங்கா
பித்தனே பிரானே தில்லைப்பெருக் கூத்தானே – சிவனே
சுத்த வெண்ணீறு பூசி சுடலையில் ஆடும் சோதி
கர்த்தனே கைலை வாசா எம் கடவுளே நமசிவாய........!

கற்பனை கடந்த சோதி கதிருடல் விட்டுச்சீவன் – தன்னை
சொற்படி இயமதூதர் சுருக்கிட்டு கொண்டு வந்தார் – உன்பதிக்கு
சித்தமாய் அருள் சுரந்து இச்சீவன் நரகில் புகுக்கா வண்ணம்
நற்பதி மோட்சவீடு நல்குவாய் நமசிவாய

சங்கரா சம்போ தேவா சதாசிவா நீலகண்டா
சக்தியை இடப்பாம் கொண்ட பரம்பொருளே.....!
இச்சீவனை தங்கு தடைகளின்றி தேவகணங்கள் கொண்டு
சிவப்பேறு என்னும் பேரின்பத்தை வழங்குவாய் நமசிவாய

# அம்மன் வேண்டுதல்



அம்பிகையே உமையே ருத்திரன் துணையாளே
எம்பிரான் தேவியே நீலி ஈஸ்வரி கௌரி மாரித்தாயே
கொம்புடை மகிடா சூரன் தன்னை கூர்ப்பலி இட்டகாளி
மோட்சம் என்னும் சிவபதியை தாயே நீயே காட்டுவாயே......!

சாம்பவி துர்க்கை வாலைச்சாத்தகி மயானகாளி
பாம்பணி பராபரத்தி பகைவரை அழித்த சூலி
நாராயணி வாராகி தேவி நலமருள் ருத்திராணி
புவனை அபிராமி இவ்வுயிர்க்கு மோட்சப்புகுவழி நீயே காட்டுவாயே

ஓம் சக்தி உலகமாதா உன்னடி தஞ்சம்மா
வாமன தேவ நீல வண்ணரின் பதியை நாடி
ஊனுடல் விட்டுச்சீவன் பதிவழிசேர வந்ததம்மா
கானெடு காளித்தாயே காட்டுவாய் வைகுந்தம் நீயே.....!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாராயணன் வேண்டுதல்



ஹரி ஹரி ராமராமா அச்சுதா யசோதை புத்திரா
ஸ்ரீ நமோ கிருஸ்ண தேவா மூவடி அளந்த பாதா
கருமுகில் மேகவண்ணா கருட வாகனேனே கண்ணா
முரஹரி முகுந்தா இச்சீவனுக்கு வைகுந்த முத்தி அளித்திடுவாயே
மாதவா வேங்கடேசா மாயோனே வைகுந்த வாசா
கேசவா இவரின் ஆத்மா அடைக்கலம் உமது தாழில்
சீலனே நீலவண்ணா திருமாலே இச்சீவனுக்கு
வைகுந்த மோட்சபதி தன்னை நீயே வழங்குவாயே

பூதகி முலைப்பாலுண்ட புருசோத்தமனே தேவதேவா
பூதேவி சிறிதேவி சமேத சிறிரங்கநாதா
மாவலிக்கு அருள் சுரந்த மாயவனே வைகுந்த வாசா
இச்சீவனுக்கு முத்தியென்றும் வைகுந்த நிலை
நற்பதியை நீயே வழங்குவாயே

# முருகப் பெருமான் வேண்டுதல்

தேவர்கள் இடுக்கண் தீர்த்த செந்தியம் பதியின் வாழ்வே
தாமதமின்றிச் சீவன் தனிவழி வருகுதையா
வித்தகவேலவனே மோட்சமெனும் பதியைக் காட்டி
காலனின் கொடுமையில் இருந்து ஆன்மாவை கந்தனே ரட்சிப்பாயே

சரணமே சரணம் செவ்வேள் சரபணபவனே ஐயா
பிரணவ ஒலியினோடு இச்சீவன் பிரமனின் படைப்பை விட்டு
அரகரா முருகா வந்துன் அடைக்கலம் சேரவைப்பாய்
வரவருள் வடிவேலோனே முத்தி என்னும் வைகுந்தம் அருள்
– செவ்குவாயே.....!

அழகனே குமரா ஆண்டி அறுபடை உறையும் ஞானப்
பழம் பெரும் கனியே மோட்சப் பதியினை நாடும் இச்சீவன்
உன் கழலடி பணிந்து நிலையான பேரின்பம் பெற
துணையாக உன் திருவருள் வழங்கி அருள் செய்குவாயே....!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூமாதேவி வேண்டுதல்



பூமிமா தேவியம்மா உன் பொன்னடி சரணம் தாயே!
தாமதமின்றிச் சடலத்தை உன்னுடன் சேர்த்திடம்மா
பூவுலகில் இவ்உடல் ஆற்றிய தீவினைகளை நீங்கி
புண்ணிய நற்பேறை இவ் உடலுக்கு வழங்குவாயே!

அடைக்கலம் அடைக்கலம் காண் அம்மையே பூமிமாதா
இப்பூதவுடல் உனை அடைய இதன் ஆன்மா மோட்சமடைய
திருவருள் என்னும் கடாட்சம் நல்கி
இவ்உடலுக்கு உன் புனிதத் தன்மையை நல்குவாயே

அடைக்கலம் உனக்கேயம்மா ஆணவம் நீங்கிய மனதுடனே
படைத்தனன் பிரம்மதேவன் தனு, கரண, புவன போகம் வழங்கி
சீவனும் சிவனாக பரணமிக்க சித்தமாகி
சிவபதி முத்திபெற நீயும் திருவருள் சிந்திப்பாயே

முப்போதும் அன்னம் புசிக்கவும் மோகத்தினால்
செப்போதினமுலையாருடன் சேரவும் சீவன் விடும்
அப்போது கண்கலங்கப் படவும் அமைத்தாயையனே
எப்போதும் காணவல்லேன் திருக்காளத்தீச்சரத்தானே
(பட்டினத்தார்)

எத்தனை பிறப்போ எத்தனை இறப்போ
எளியனேற் கிதுவரை அமைந்த (து)
அத்தனை எல்லாம் அறிந்து நீ அறிவை
அறிவில அறிகிலேன் அந்தோ
சித்தமும் வாக்கும் தேகமும் நினைவே
சென்மமும் இனியெனால் ஆற்றா
வைத்திடிங் கென்னை நின்னடிக்குடியா
மறைமுடி இருந்த வான் பொருளோ
(தாயுமான சுவாமிகள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர். இரத்தினம் சீனித்தம்பி அவர்களின் வாழ்க்கை வரலாறு

இந்து சமுத்திரத்தின் முத்தாம் இலங்கையின் கிழக்கில் அமைந்த மீன்பாடும் தேனாடாம் மட்டக்களப்பில் வந்தாரையும் வாழவைக்கும் கிராமம் என்றழைக்கப்பட்ட வாழைச்சேனைக் கிராமத்தில் உயர் சைவ வேளாளர் குலத்தில் பூசாரி குடியில் அமரர்களான இரத்தினம் இராசம்மா தம்பதியினரின் தலைமகனாக 1926ம் ஆண்டு சித்திரைத் திங்கள் 22ம் நாள் அமரர். சீனித்தம்பி இப்பூவுலகை வந்தடைந்தார்.

அமரர். சீனித்தம்பி அவர்கள் அருமைச் சகோதர, சகோதரிகளான பாக்கியம், கிரேஷ் செல்லமுத்து, காலஞ்சென்றவர்களான காளிக்குட்டி, வேலுப்பிள்ளை, கணபதிப்பிள்ளை, சுப்பிரமணியம், சிவலிங்கம், கண்ணகை ஆகியோருடன் தனது சித்தப்பா மகன் செல்லத்தம்பியையும் இணைத்து பாசத்திற்கொரு அண்ணாவாக வாழ்ந்தார். தனது தந்தையின் இறப்பின் பின் சகோதர, சகோதரிகளை பாசத்துடன் வளர்த்து அவர்களின் திருமணங்களையும் முன்னின்று நடாத்தி உயிருக்குயிராக பாசம் பற்றிட வாழ்ந்தார்.

அவரின் சகோதர, சகோதரிகள் பலர் அவருக்கு முன்னர் இறைவன் திருவடி சேர்ந்தபோது மூத்தவர் நானிருக்க நீங்கள் போகின்றீர்களெனக் கூறி அவர் அழும் காட்சி அவர் எவ்விதம் சகோதர, சகோதரிகள்மீது பாசம் வைத்திருந்தார் என்பது தெளிவாக விளங்கும். இரங்கிய உள்ளத்துடன் அன்பாகவும், பண்பாகவும், உற்றார் உறவினர், அயலவர், நண்பர்கள் அனைவருடனும் வாழ்ந்தார். இவரின் நற்பண்பின் காரணமாக இவரை அனைவரும் செல்லமாக "சீனி" என்றே அழைப்பர்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை வாழைச்சேனை மகா வித்தியாலயத்தில் கற்று, தந்தையின் இறப்பின் பின் மேற்கொண்டு கல்வியை கற்க முடியாத காரணத்தால் 5ம் வகுப்புடன் தனது கல்வி வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்தார். குடும்பத்தினரின் வாழ்க்கையை செழிப்படையச் செய்வதற்காக சிறு வயதிலேயே கூலி வேலைக்குச் சென்று வருமானத்தையீட்டியதுடன், நில்லாமல் தனக்கொரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிரந்தரத் தொழிலைக் கைக்கொள்ள எண்ணி மேசன் தொழிலைப் பழகி அத்தொழிலில் திறமையும் பெற்றார்.

வாழைச்சேனையில் காகித ஆலை நிர்மாணிக்கும்போது மேசனாக சேர்ந்து தனக்கொரு நிரந்தரத் தொழிலைத் தேடிக் கொண்டார். காகித ஆலையில் மேல் அதிகாரிகளின் பணிப்பின் பிரகாரம் தன் பணியைச் செய்து, அதிகாரிகளின் அன்பையும், பாராட்டினையும் பெற்றார். இவர் இக்கால கட்டத்தில் க. இராசசிங்கம், வ. சுப்பிரமணியம், ஆறுமுகம் போன்ற சிறந்த நண்பர்களையும் பெற்றார். இவர்களுடன் இணைந்து வொயிலர் ஹவுஸ் கட்டட வேலை செய்தார். வொயிலர் ஹவுஸ் வேலையைத் திறம்பட செய்தமைக்காக அதன் பொறியியலாளர் இவரையும், இவரின் நண்பர்களான, அமரர்களான முறக்கொட்டான்சேனை ஆறுமுகம், க. இராசலிங்கம் அவர்களையும் பாராட்டி நற்சான்றிதழ்கள் வழங்கி கௌரவித்தனர். இது இவரின் தொழில் திறமையின் சிறப்பை எடுத்துக்காட்டுகிறது.

காகித ஆலையில் மேசனாக சேர்ந்து திறமையாக அத்தொழிலைச் செய்து பாராட்டினைப் பெற்ற இவர் பின் வைக்கோல் வெட்டும் இயந்திரத்தின் (பல்ப்மில்) இயக்குனராகக் கடமையேற்று திறம்பட செய்து அங்கும் மேல் அதிகாரிகளின் பாராட்டுதலைப் பெற்று கடமைக் காலம் முடியும் வரை இயக்குனராக கடமையாற்றினார். (இவரின் தொழில் அடையாள அட்டை இலக்கம் 317)

இவர் காகித ஆலையில் வேலை செய்து கொண்டிருந்த காலத்தில் தனது ஓய்வு நேரத்தில் தனது நண்பர்களுடன் இணைந்து மேசன் தொழிலைச் செய்ததோடு, விவசாயத்திலும் ஈடுபட்டார். நெற்செய்கையில் வரம்பு கட்டுதல் முதல் சூடு அடித்தல் வரையிலான சகல பணிகளிலும் திறமை பெற்றிருந்ததுடன். மற்றவர்களுக்கும் இதன் நுணுக்கங்களையும் பழக்கினார். பல ஏக்கர் கணக்கில் கமச் செய்கையை மேற்கொண்டு வந்தார். ஆலங்குளத்திலும் ஓமடியாமடுவிலும் கமச்செய்கை மேற்கொண்டார். அத்தோடு தற்போதைய ஓமடியாமடுவில் இவருக்கு 1972ம் ஆண்டு கமச்செய்கைக்கு காணி அரசால் வழங்கப்பட்டிருந்ததை பலரும் அறிவர்.

இவர் தனது சொந்த மைத்துணியான உயர் சைவ வேளாளர் குலப் பரம்பரையின் அமரர்களான இளையதம்பி நல்லம்மா தம்பதியினரின் புத்திரியாகிய நாகரெத்தினம் என்பவரை 1950ம் ஆண்டு தை மாதம் 14ம் திகதி திருமணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிந்து, வள்ளுவரின் வாக்கிற்கு அமைய வாழ்ந்து, பெறுதற்கரிய பேறாக அமரர். பூமணிதேவி, மகேஸ்வரி (இலிகிதர், முன்னாள் காகித ஆலை ஊழியர்), லோகேஸ்வரி (தவிசாளர், மத்தியஸ்தசபை வாழைச்சேனை, ஆசிரிய ஆலோசகர், கல்குடா கல்வி வலயம்), காளிதாசன் (அதிபர், காயான்கேணி சரஸ்வதி வித்தியாலயம்), யோகேஸ்வரன் (பாராளுமன்ற உறுப்பினர், தலைவர், மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை), நாகராசா (ஆசிரியர், வாழைச்சேனை இந்துக் கல்லூரி), சந்திரவதனி (ஆசிரியை, மட்டக்களப்பு வின்சன்ற் மகளிர் உயர்தர தேசிய பாடசாலை) ஆகிய ஏழு பிள்ளைகளைப் பெற்றெடுத்து அவர்களின் கல்வி மேன்மை கருதி அவர்களை புதுக்குடியிருப்பு வாணி வித்தியாலயத்தில் கற்பதற்கு அனுமதித்து, பின் வாழைச்சேனை இந்துக்கல்லூரியில் உயர் கல்வி கற்க அனுமதித்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தினார்.

பின்பு தனது பிள்ளைகளுக்கு சிறந்த வாழ்க்கைத் துணைவர், துணைவி என்ற வகையில் மகள் பூமணிதேவிக்கு வே. சதாசிவம் (முன்னாள் தபால் ஊழியர்) அவர்களையும், மகள் மகேஸ்வரிக்கு ச. சிவநேசன் (நீர்ப்பாசன திணைக்கள ஊழியர்) அவர்களையும், மகன் நாகராசாவுக்கு ஞானவதி அவர்களையும், மகள் சந்திரவதனிக்கு எஸ். பாக்கியராசா (பிரதி அதிபர், பள்ளிக்குடியிருப்பு இந்துக்கல்லூரி) அவர்களையும் தேர்ந்தெடுத்து அவர்களின் திருமண நிகழ்வை சிறப்பாக நடாத்தி பேரப்பிள்ளைகளான பூவேந்திரன், விக்னேஸ்வரி (ஆசிரியை), நகுலராஜா, ஜீவானந்தம், கௌரி, ஷந்துஜா, ஷர்மிலன், தஸ்நிஜன், கிதர்ஜிதன் ஆகியோரின் மழலைப் பேச்சையும் கேட்டு மகிழ்ந்தார்.

இவர் தனது உடன் பிறப்புகளோடு வாழ்ந்து அவர்களின் வாழ்க்கைத் துணைவர், துணைவிகளாக பாக்கியத்திற்கு காளிக்குட்டி அவர்களையும், வேலுப்பிள்ளைக்கு பாக்கியம் அவர்களையும், கணபதிப்பிள்ளைக்கு நேசம் அவர்களையும், சுப்பிரமணியத்துக்கு விமலேஸ்வரி அவர்களையும், கிரேஸ் செல்லமுத்துவுக்கு சத்தியநாதன் அவர்களையும், சிவலிங்கத்திற்கு பரமேஸ்வரி அவர்களையும் தேர்ந்தெடுத்து அவர்களின் திருமண நிகழ்வை நடாத்தியதுடன், தனது மனைவியின் சகோதரர்களான விநாயகம், சின்னையா ஆகியோரையும் பாசமுடன் அரவணைத்து அவர்களையும் வளர்த்து அனைவருடனும் சந்தோசமாக வாழ்ந்தார். அத்தோடு தனது பேத்தியான விக்கினேஸ்வரியை யோகானந்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சமூர்த்தி உத்தியோகத்தர்) அவர்களுக்கு திருமணம் செய்து வைத்து பெருமகிழ்வு கொண்டார்.

இவர் தனது குடும்பத்தினரின் மீது பற்று, பாசம் கொண்டு வாழ்ந்து அவர்களின் வாழ்க்கை சிறப்பாக அமைய வழி செய்தாரோ, அதை போன்று தனது தாய் நாட்டின் மீதும், தாய் மொழியின் மீதும், சமூகத்தின் மீதும் பற்றும், பாசமும் கொண்டும் வாழ்ந்தார் என்பதனை எவராலும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது என்பது உண்மையாகும்.

அன்னார் தாய் நாட்டின் மீதும், தாய் மொழியின் மீதும் வைத்திருந்த பற்றுதலுக்கு அவரின் அரசியல் வாழ்க்கை சான்றுகளாகும். தந்தை செல்வநாயகத்தின் தலைமையில் செயல்பட்டு வந்த இலங்கை தமிழரசுக் கட்சியில் உறுப்பினராக இருந்து பின் பெயர் மாற்றம் செய்யப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியிலும் உறுப்பினராக இருந்து பாடுபட்டார். பல சத்தியாக்கிரக நிகழ்விலும் பங்கு பற்றி "குண்டாம் தடி, முருங்கைத் தடி" எனக் கோஷமிட்டார்.

இதன் காரணமாக தனது குடும்பம், பிள்ளைகள் அரசியல் பழிவாங்கப்பட்டும், அதனைக் கண்டு அஞ்சாமல் இன்றுவரை பற்றுதலுடன் வாழ்ந்து தனது மகன் யோகேஸ்வரன் அவர்களை தமிழ் மக்களுக்காகவும், தாய் மொழிக்குமாகவும், பாடுபடும் படியாக அரசியலில் பிரவேசிக்கச் செய்து ஒரு பாராளுமன்ற உறுப்பினராக்கியும் உள்ளார். (இவரது 84வது பிறந்த தினத்தன்று 2010.04.22ந் திகதி மகன் யோகேஸ்வரன் பாராளுமன்ற உறுப்பினராக சத்தியப் பிரமாணம் செய்தார். இந்நிகழ்வில் கலந்து களரியில் இருந்து கொண்டு மகன் சத்தியப் பிரமாணம் செய்வதைக் கண்டு மகிழ்ந்தார்.) தான் இறைவன் திருவடி சேரும் வரை அதற்காகவே உழைத்தார்.

வாழைச்சேனையில் 1952ம் ஆண்டு காலப்பகுதியில் ஐக்கிய நாணயச் சங்கம் சிறப்பாக இயங்கி மக்களுக்கு சேவையாற்றி வந்தது. இச்சங்கத்தில் இவர் பொருளாளராக இருந்து கடமையாற்றினார். இச்சங்கத்தில் அங்கம் வகித்த பலர் சொந்தக் காணி இல்லாமல் பிறர் காணியில் குடியிருந்தனர். இதனை கண்ணுற்ற அமரர். சீனித்தம்பி வாழைச்சேனை கிராமத்திற்கு அண்மையில் அரச காணி இருப்பதை அறிந்து காணி அற்றிருந்த பலரையும் ஒன்றிணைத்து அரச அதிகாரிகளுக்கு ஒரு விண்ணப்பம் தயாரித்து அனுப்பினார். இதன் பிரகாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1954ம் ஆண்டு தை மாதம் காணி அற்றோருக்கு காணி வழங்கப்பட்டது.

இந்தவகையில் வ. கந்தையா குடும்பம், கந்தப்பர் குடும்பம், இளையதம்பி நல்லம்மா குடும்பம், இரத்தினம் சீனித்தம்பி குடும்பம், சேதுராசா குடும்பம், பொடியாப்போடியார் குடும்பம், சின்னக்கண்டு குடும்பம், மாரிமுத்து குடும்பம், சாமித்தம்பி குடும்பம், இராசசிங்கம் குடும்பம், இரத்தினம் வள்ளியம்மை குடும்பம், வெள்ளச்சி குடும்பம், மா. நல்லதம்பி குடும்பம், குயிலர் குடும்பம் என 14 குடும்பங்கள் ஆரம்பத்தில் குடியேறினர். அவர்களைத் தொடர்ந்து மு. கந்தசாமி, நா. சீனித்தம்பி, வேலன், செல்ல மாணிக்கம், தங்கப்பிள்ளை அழகம்மா அழகையா, காளிக்குட்டி, வ. சுப்பிரமணியம் ஆகிய குடும்பங்களும் குடியேற தொடங்கினர்.

மிருகங்களினதும், பறவைகளினதும் இடமாக இருந்த காட்டுப் பிரதேசம் அமரர். இரத்தினம் சீனித்தம்பியின் முயற்சியின் காரணமாக கோறளைப்பற்று பிரதேசத்தில் புதிதாக "புதுக்குடியிருப்பு கிராமமாக" உதயமாகியது. ஆரம்ப காலத்தில் இப்பகுதி "வாழைச்சேனை வெம்பு" என அழைக்கப்பட்டது.

"கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்." என்ற வாக்கியத்திற்கு அமைவாக காளி அம்பாள் பக்தரான இவர் புதுக்குடியிருப்பில் ஒரு காளி அம்பாள் ஆலயம் உருவாக்க விரும்பினார். இவரின் விருப்பத்திற்கு காசுபதி கனகரெத்தினம், செல்லையா (தூக்குமரத்து செல்லையா), கந்தப்பர், கந்தையா இராசலிங்கம் ஆகியோர் அனுசரணை வழங்கினார்கள்.

இவர்கள் அனைவரும் கண்ணகி அம்மன் ஆலய இறுதி நாள் பூசையன்று பொங்கல் செய்வதற்கு ஆலயம் சென்று கட்டை நாட்டி விட்டு காளி அம்மன் ஆலயம் அமைக்க இடம் பார்க்க வந்தபோது அமரர். சீனித்தம்பி அவர்கள் கொக்கட்டி மரம் இருந்த காட்டுப் பகுதியில் திடீரென அம்மன் உரு வந்து ஆடியபோது அவர்கள் இவ்விடத்திற்கு அருகாமையில் "கொக்கட்டி மரம்" இருப்பதைக் கண்டு சந்தோஷமடைந்து கண்ணகி அம்மன் ஆலய உற்சவம் முடிந்த பிற்பாடு இவ்விடத்தை துப்பரவு செய்து இவர்கள் ஐவரின் பணத்தில் திரு. டானியல் அண்ணன் அவர்களின் கொல்லன் கம்மாலையில் ஐம்பது ரூபாய் செலவில் சூலம் அடித்து வாழைச்சேனையில் வசித்து வந்த பூசகர் திரு. காசுபதி (அனுமான் காசுபதி) அவர்களின் வீட்டில் இருந்த பூசைப் பொருட்கள் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து முறைப்படி கொக்கட்டி மரத்திற்கு அருகில் சூலம் நாட்டி 1954ம் ஆண்டு ஆனி மாதம் முதல் உற்சவம் செய்தார்கள். இவ்வாலயத்தில் தலைவராக ஐவரும் சேர்ந்து அமரர். இரத்தினம் சீனித்தம்பி அவர்களையே நியமித்தனர்.

திரு. காசுபதி அவர்களே முதல் பூசகர் ஆவார். தொடர்ந்து இரண்டு ஆண்டுகள் இந்த ஐந்து பேரும் உற்சவத்தை நடாத்தினர். மூன்றாம் வருடம் இவ்வாலயத்தை ஊர்மக்களுக்கு வழங்க அமரர். இ. சீனித்தம்பி அவர்கள் விரும்பி ஏனைய நால்வரிடம் அபிப்பிராயம் கேட்டபோது செல்லையா அவர்கள் மறுப்புத் தெரிவித்து ஐந்து பேரினதும் குடும்பங்களின் ஆலயமாகவே இருக்க வேண்டும் எனக் கூறினார். மற்றவர்கள் இதற்கு ஒத்துழைப்பு வழங்காத காரணத்தினால் செல்லையா அவர்கள் வெளியேறி விட்டார். ஆலயம் கிராம மக்களிடம் கையளிக்கப்பட்டது. ஆலயம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து இவர் தெய்வம் ஆடும் பக்தராக செயற்பட்டதுடன், தமக்கு பொறுப்பு அதிகம் என்பதனால் 04வது வருடம் தலைவர் பதவியை ஏனைய 03 பேருடனும் ஆலோசித்து நா. சீனித்தம்பி என்பவரிடம் வழங்கினார்.

அமரர். சீனித்தம்பி அவர்கள் பிற்காலத்தில் இவ்வாலயத்தின் தலைவராக மீண்டும் கடமை புரிந்ததுடன், இதன் கணக்குப்பிள்ளையாகவும் இருந்துள்ளார். மேலும் வாழைச்சேனை கைலாயப் பிள்ளையார் ஆலயத்தில் உப தலைவராகவும். கண்ணகி புரம் நாகதம்பிரான் ஆலயத்தின் தலைவராகவும் கடமையாற்றியதோடு, மாரியம்மன், பேச்சியம்மன், கண்ணகி அம்மன் ஆலயங்களின் வருடாந்த உற்சவ காலங்களில் பூசகருக்கு உதவியாக இருந்து கடமையாற்றினார். இவர் மாந்திரீகம் மூலம் நோய்களை குணமாக்குதல் போன்ற நற்பணிகளையும் செய்ததுடன், வீடுகளில் நடைபெறும் அம்மன் சடங்கு, வைரவர் சடங்குகளையும் மேற்கொண்டார். அதுமட்டுமன்றி மரண வீட்டில் நடைபெறும் கருமங்களிலும் கலந்து செயலாற்றினார்.

புதுக்குடியிருப்பு கிராமப் பிள்ளைகள் அனைவரும் வாழைச்சேனை பாடசாலைக்கு சென்று கல்வி கற்றனர். இப்பிள்ளைகள் வெயிலில் வரும்போது அவர்கள் படும் துன்பத்தினைக் கண்ணுற்ற இவர் கிராமத்தில் இணைந்து வாழ்ந்த வயிரமுத்து சுப்பிரமணியம் (லோயர் மணியம்), கந்தையா இராசலிங்கம், முருகப்பர் கந்தசாமி அனைவரையும் இணைத்து இக்கிராமத்தில் வசித்து வந்த குஞ்சுத்தம்பி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாமித்தம்பி (குசா) ஆசிரியர் அவர்களின் ஆசோசனைப்படி உரிய அதிகாரிகளைச் சந்தித்து விண்ணப்பம் வழங்கியதன் பயனாக தற்போதைய "வாணி வித்தியாலயம்" (அ. த. க. பாடசாலை) 1958ல் உருவாகியது.

இதேபோன்று இவரின் முயற்சியினால் மாதர் முன்னேற்றச் சங்கம் 1962ல் உருவாகியது. மாதர் முன்னேற்றச் சங்கத்தின் முதலாவது தலைவராக இவரின் மனைவி நாகரெத்தினம் அவர்களையே எல்லா மக்களும் தெரிந்தெடுத்தனர். செயலாளராக திருமதி. பிள்ளையம்மா இராசலிங்கம் அவர்களைத் தெரிவு செய்தனர். இவர்களின் முயற்சியினால் தும்புத் தொழிற்சாலை, மட்பாண்ட தொழிற்சாலை இக்கிராமத்தில் உதயமாயிற்று. இவர்கள் காலத்தில் கலைவாணி கலா மன்றத்துக்கு காணியும் ஒழுங்கு செய்து வழங்கப்பட்டது.

இவர் எல்லோருக்கும் முன்னுதாரணமாக வாழ்ந்து காட்டியதுடன், எல்லோருக்கும் வழிகாட்டியாகவும், நல்லவராகவும், தமிழரின் பண்பாட்டிற்கு அமைய விருந்தோம்பலையும் கடைப்பிடித்து எல்லாச் சிறப்புடனும் வாழ்ந்தார். இவ்வேளை இவரின் மூத்த மகளான பூமணிதேவி இவ்வருடம் மார்ச் மாதம் திடீரென மரணமடைந்தது இவரது மனதை பெரிதும் பாதித்தது. இவ்வாறான நிலையில் அமரர். சீனித்தம்பி அவர்கள் எதிர்பாராத விதமாக நோய்வாய்ப்பட்டு வாழைச்சேனை வைத்தியசாலையில் சில தினங்களுக்கு முன் அனுமதிக்கப்பட்டு காளி அம்பாள் ஆலயத்தின் இரண்டாவது கும்பாபிஷேகம் நடைபெற்று முதலாவது பிரமோற்சவ கொடியேற்றம் நடாத்தப்பட்டு சில மணித்தியாலங்களின் பின் 2014. 07. 21ம் திகதி திங்கள் கிழமை தசமி திதியில் கார்த்திகை நட்சத்திரத்தில் பிற்பகல் 4 மணி 35 நிமிடமளவில் வைத்தியசாலையில் இவரது ஆன்மா இறைவன் திருவடி சேர்ந்தது தாய் நாட்டையும், மக்களையும், தாய் மொழியையும், நேசித்து, எல்லோருக்கும் நல்லவராகவும், சமூகத் தொண்டராகவும், சமயத் தொண்டராகவும் வாழ்ந்து பெருமை கண்ட அமரரின் ஆத்மா சாந்தியடைய எல்லோரும் பிரார்த்திப்போமாக......!

"ஓம் சாந்தி.....! சாந்தி....! சாந்தி....!"



தகவல்

**இ. சின்னையா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தசமிப் பொழுதில் நண்ணினார் காண் ஈசன் கழல்

## (அனுதாப மொழிகள்)

**(முத்தமிழரசு. சிவயோகச் செல்வர் சாம்பசிவம் சிவாச்சாரியார் பிரதமகுரு, காயத்திரி பீடம், மட்டக்களப்பு)**

*வாழைச்சேனை புதுக்குடியிருப்பிலே*
*உழைத்தலால் உயர்வடைந்து - உழைதல்*
*கண்டு உழைத்ததையீந்த கர்ம வீரன்*
*விண்செல் நாள் இறைதாள் பெறுவார்*

என்பதை அகத்தியர் (ஈசன் அருள் பெற, மாசிவா ஞானம் மேவ வாசம் மோட்சமதாக தசமித்திதி நல்விதியளிக்கும்). கால நிர்ணயகோவையில் கூறியுள்ளது நினைவு கொள்ளத் தக்கது.

மட்டுநகர் பாராளுமன்ற உறுப்பினர் சைவத்திரு. சீ. யோகேஸ்வரன் அவர்களை பெருமையுற பெற்ற தந்தை சீனித்தம்பி ஐயாவின் தேக வியோகநாள் ஆத்மா ஈடேறக் கிடைத்ததற்கரிய தசமி நன்னாளாம்.

அச்சமில்லை, அழுக்குதலில்லை, நடுக்குதலில்லை. நாணுதலில்லை, பாவமில்லை, பதுங்குதலில்லை, ஏதுநேரினும் இடர்ப்பட மாட்டோம் அண்டஞ் சிதறினால் அஞ்சமாட்டோம். கடல் பொங்கிட கலங்கமாட்டோம். யாருக்கு மஞ்சோம், எதற்கு மஞ்சோம், எங்கும் அஞ்சோம், எப்பொழுதும் அஞ்சோம், வானமுண்டு, மாரியுண்டு, ஞாயிறும் காற்றும் நல்ல நீரும், தீயும் மண்ணும் திங்களும் மீன்களும், உடலும், அறிவும், உயிருமுளவே தின்பைப் பொரும் சேர்ந்திடப் பெண் கேட்கப் பாட்டும் காண நல் உலகமும் களித்துரை செய்யக் காளி பெயரும், என்றுமிங்குளவாம் சலித்திடாய் ~ ஏழை நெஞ்சே வாழி நேர்மையுடன் வாழி வஞ்சகக் கவலைக் கிடங்கொடேல் மன்னோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற பாரதியார் அகவல் வரிகளை தன் அகத்தே கொண்டு அகவை எண்பத்தெட்டையும் நிறைவாக வாழ்ந்தவர் பெரியார் சீனித்தம்பி அவர்கள். எண்ணங்களை முடிவுகளை தனது குருதேவ பத்தாசிக்குள் நிலையாய் நின்று வாழ்வில் இன்புற்றார். காளி, கண்ணகை, நாகதம்பிரான் ஆலயங்களின் உதவிப் பூசகராகவும் இறைபணி செய்த இவர் சிறந்தரண சிசிக்சை வைத்தியராகவும், சிறப்பான பணியை வேதனம் இன்றி சமூகப் பணியாக பூரணமாக செய்துள்ளார்.

பழகும் போதும், சேவைகளின் போதும், எவ்விடத்திலும், எந்தச் சமயத்திலும், பண்பால், நடத்தையால், பரத, இலக்மணர் போன்ற தம்பியாகவே வாழ்ந்து யாவர்க்கு இனிப்பான வார்த்தைகளை கூறி இன்பம் அடைந்தவர். இல்லற தர்மத்தை,

*ஒற்றைக் குடும்பம் தனிலே - பொருள்*
*ஓங்கி வளர்ப்பவன் தந்தை*
*மற்றைக் கருமங்கள் செய்தே - மனை*
*வாழ்ந்திடச் செய்பவள் அன்னை*
*ஏவல்கள் செய்பவர் மக்கள் - இவர்*
*யாவரும் ஓர் குலம் அன்றோ*
*மேவி அனைவரும் ஒன்றாய் - நலில*
*வீடு நடத்துதல் காண்போமென*

பாரதியாரின் குடும்ப கும்மியை வாழ்வியலில் பயன்படுத்தியவர். நல்லருங்குண மனைவியையும் 03 ஆண், 04 பெண் மக்கள் செல்வத்தை பெற்று அனைவரது மனம் பொங்க இங்கிதமாக பேரப்பிள்ளைகளையும் கொஞ்சி மகிழ்ந்தார்.

தேசிய கடதாசி ஆலையில் நாற்பது வருடங்கள் இயந்திர இயக்குனராக பணி புரிந்த இவர் மிகச் சிறந்த மேஸ்திரி என்பதற்கு தன் மக்களுக்காக அமைத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்து மனைகளும், கடதாசி ஆலை பிள்ளையாராலய மண்டபமும் சாட்சிகளாகி மிளிர்கின்றன.

மண்ணுலகின் மீதினிலே எக்காலும் அமரரைப்போல் மடிவில்லாமல் திண்ணமுற வாழ்த்திடலாம் என்ற மனதிடனாக புதுக்குடியிருப்பை உருவாக்கினார். ஊர்பணிகளோடு தன் குடும்பப் பணிகளையும், கோயிற் பணிகளையும், திருமணப் பணிகளையும், பல கிராம ஐக்கிய முன்னேற்ற செயற்பாடுகளை சளைக்காமல், சினவாமல் தம்பட்டமடித்து சொல்லாமல் செய்தவர் சீனித்தம்பி ஐயா அவர்கள். சத்திய மணலிலே விதைத்த அவரது அடக்கயோக வித்தானது யோகேஸ்வரனாக முளைத்து சீனித்தம்பி அவர்களது தொண்டிற்கு பெருமை சேர்த்து நிற்கிறது.

*சீனித்தம்பிதன் சென்ம நாளதனில்*
*மானிலம் போற்றும் நல் மைந்தன் - தனித்தன்மை*
*பேராளன் யோகேஸ்வரன் சிவத்தமிழனாய்*
*பாராளுமன்றம் சென்றான் பார்*

*தகப்பனாரின் பிறந்த நாளில் பாராளுமன்றம் சென்ற போது*
*தனயன் தந்தையையும் அழைத்து சென்று*
*இவன் தந்தை என்னோற்றான் என்ற வள்ளுவத்தை*
*அள்ளி பருகச் செய்தான் யோகேஸ்*
*நண்ணி எல்லாப் பொருளினிலும் உட் பொருளாய்*

செய்கையெல்லாம் நடத்தும் வீறு கொண்ட வீரனாக, திண்ணிய நல்லறிவாளியாக திகழுமொரு பரம் பொருளை அகத்தில் சேர்த்து செய்கையெல்லாம் அதன் செய்கை நினைவெல்லாம் அதன் நினைவு தெய்வமே நாம். உய்கையுற நாமாகி நமக்குள்ளே ஒளிர்வதென உறுதி கொண்டு பொய், கயமை, சினம். சோம்பல், கவலை, மயல், வீண் விருப்பு, புழுக்கம், அச்சம், ஐயமெனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேயையெலாம் ஞானமெனும் வாளாலே அறுத்துத்தள்ளி எப்போதும் ஆனந்தச் சுடர் நிலையில் வாழ்ந்து உயிர்கட்கு இனிது செய்வோர். தப்பாதே இவ்வுலகில் அமர நிலை பெற்றிடுவர் என அன்று கூறிய பாரதியின் பாவரிகளை இல்லாக கொண்டு கிராமத்தின் கலங்கரை விளக்காக ஒளி வீசி துலங்கிய நல்லாத்மா இன்று நம் அருகில் இல்லையே.

இந்த சூட்சும சரீரமானது வெளியே சென்று வேண்டுவன புசித்துத் திரும்பி வந்து திரியும் அது எஞ்ஞான்றும் அழிவு படாதது ஆகும். தூல சரீரமின்றி சூட்சும சரீரம் இல்லை. தூல சரீரம் வெளிப்படையாக இயங்கும். சூட்சும சரீரம் அந்தர் முகமாகக் காரியங்களை முடிக்கும் இதனை ஔவைக் குறள்.

*சென்றுண்டு உவந்து திரிதரும் உள்ளுடம்பு*
*என்றும் கெடாதது இது.*

என இயம்பினார் மேலும் தூல உடம்பு புண்ணியத்தையும், பாவத்தையும் அடைந்து திரிந்து கொண்டிருக்கும். சூக்கும உடம்பானது ஞான கர்மத்துக்கு விதையாக நிற்கும், செய்யும் இரு வினைகள் எல்லாவற்றிற்கும் சூக்கும தேகமே வித்தாகும் என்பதால் தூல சரீரத்தினால் பயனில்லை என்பதாகும். இரண்டிற்கும் காரணம் உள்ளுடம்பேயாகும். உடம்பின் பயனாலே உண்டாகிய பிராண வாயுவினால் ஆயுளின் முடிவு ஏற்பட்டிருக்கின்றது. சூக்கும தேகம் எப்போதும் அசைந்து கொண்டுள்ளது. அதனால் தேகத்தில் பிராண இயக்கம் நடைபெற்றுக் கொண்டுள்ளது. சூக்கும தேகம் தூல தேகத்தின் நின்று பிரிந்தவுடன் சூக்கும அசைவினால் தொழிற்படும் பிராண இயக்கம் தேகத்தில் நின்று போய் விடும்.

*நல்வினையும் தீவினையும் உண்டு திரிதரும்*
*செய்வினைக்கு வித்தாம் உடம்பு என்றும்*
*வாயுவினாலாய உடம்பின் பயனேதான்*
*ஆயுளின் எல்லை ஏது*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என ஔவையார் கூறியவற்றிலிருந்து மானிடர்களாகிய யாம் வாழ்வின் உடம்பின் நிலை உணரலாம். பாம்பு தன் உடற்செட்டையை காலத்திற்கு காலம் களற்றி மாற்றி வாழ்வது போல் உயிர் தேகமான சட்டையை காலத்திற்கு காலம் மாற்றி மாற்றி வினைக்கேற்ப வாழ்வதை பகவத் கீதை மெய்யுறப் பகர்கிறது.

புனித சேவையின் பிறப்பாக வாழ்ந்த சீனித்தம்பி ஐயாவின் வாழ்வு சேவையாளன் கற்றுக் கொள்ள வேண்டிய பாடம். ஐயாவின் உடல்தான் நம்மை விட்டு அகன்றதே தவிர அவர் செய்த பணி ஒவ்வொன்றும் நம்மை பணி செய்ய அழைக்கிறது. அன்னாரது சுத்தாத்மா அவர் உண்டாக்கிய ஊரையும், அவர் வாழ்வித்த மணமக்களையும் வாழ்த்தும்.

சித்த சுத்தியோடு அவரது ஆத்மா காளி கோவிலை சுற்றி வட்டமிட்டுக் கொண்டே இருக்கும். அதர்வண பத்ரகாளியை இதயத்தால் பூசித்த அவரை அவளே அறிந்தாள், அவளே அறிவாள், அவளோடு ஒன்றினார் அவளுள் ஒளிர்ந்தார். தலைத் தெய்வமாய் சன்னமாடி தக்கபடி தேவாதிகள் எப்படி இருக்க வேண்டும். வாழ வேண்டுமென்பதை வாழ்ந்து காட்டினார். காளியே நின் வழிக்கொள்கை கொண்டு நிகழ்த்துக என்றும் இன்பம் என மன்றாடியவர் சதா காளியின் சிந்தனையோடேயே வாழ்ந்தார்.

மாசற்று வாழ்தவரை மன்றாடி வாழ்த்தவரை காளிகாம்பாள் விடுவாளா? தனது பிரம்மோற்சவ நாளிலே ஏற்றாள் எவருக்குகினிக் கிடைக்கும் அந்தப் பேறு.

*ஓங்காரக் காளி நீயாய்*
*உட்பொருளுணர்வாய் அன்பாய்*
*ஆங்காரக் காளி தாயே*
*அற்புதச் சக்தி நீயே*
*நீங்காத ப்ருத்திங்க காளி*
*நின் பெயர் சொல்லல் வாழ்வு*
*ஏங்கவே இல்லை என் தன்*
*இன்னுயிர் உனக்கே அம்மா.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனத்துளிப் போதும் அவள் நினைவாக வாழ்ந்தவரை அவளருளே அவள் தாள் அளித்துள்ளது மானிடம் பெற்ற மாண்பு.

உடம்பினிற்குள்ளே விளங்குகின்ற பரம் சுடரை உன்னுள்ளும் பிறர் உள்ளும் வேறுபாடற்ற அன்பால் காணில் மோட்சமானது உள்ளங்கை நெல்லிக் கனி போற் கிடைக்கத் தக்கதாகும். ஆனந்தமே வடிவாகி நிற்கின்ற அருள் ஒளியைப் பார்த்த மாத்திரத்திலே அந்த அருள் ஒளியானது பார்த்த சாதகர்களுக்கு முடிவாகிய வீடு பேறு நல்கும் என்பதில் ஐயமே இல்லை. சீனித்தம்பி ஐயாவின் சுத்தாத்மா சிவ சாயுச்சம் பெற சிவத்தோடு ஆத்மாவைச் சேர்க்கும் அன்னை கால காளியின் காலைப் பிடித்து பிராத்திக்கின்றேன். அம்மா பரிபூரணி தாயே காளி நின்சேய் உலகவாழ்வில் அறியாது செய்த பிழைகளை மன்னித்து நின்மணாளன் மலர் பதத்தில் சாந்யுற (சாந்தி பெற) வைப்பாயாக!

*எண்பத்தெட்டாண்டு சத்திய ஏணியில்*
*கண் வைத்துக் கவனமாக - பண்போடு*
*தேனி போலருள் சேர்த்து தரணியில்*
*சீனித்தம்பி சார்ந்தார் மோட்சம்*

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**வை. இ. எஸ். காந்தன் குருக்கள்**
(கண்மணிதாசன் - ஏரூரான்)

# அன்னை திருவடியில் உன் ஆத்மா அமர்ந்திடட்டும்

முன்னைத் தவத்தால்
வாழும் வகை கண்டான்
மண்ணுலகில் வந்துதவம்
வையகத்தில் நிலைகொண்டான்
பின்னைப் பிறப்பில்
ஆழும் தகைமெய் எல்லாம்
பிறந்துழலும் நம் ஆத்மா
அணி மணியால் நிதம் சூடி
தன்னை உணர்ந்து என்றும்
சூழும் இளையோர்க்கு சூடலியே
தவமினித்தால்
சூக்வழி நோக்கி ஆத்மா
பின்னைப் பிறவி ஆண்டு
சூலம் பிடித்தவளின் தூய அடியில்
பேரின்பம் துய்க்குமே
துணையாகி இணைத்ததுவே

வளம் கண்ட வாழை நகர்
மண்ணுக்கு தொண்டாற்ற
வற்றாத குடியிருப்பு
மக்களை ஈந்தளித்தாய்
தளம் கண்ட மக்கள் குலம்
கண்ணுக்குள் மணியாகி
தலம் கொண்ட மாகாளி
காத்தாய் குடும்ப நலம்
உளம் பற்றி உவந்தாடி
விண்ணுக்குள் உன் ஆத்மா
உரிமை உற்ற இம்மண்ணில்
வீரசக்தி திருமடியில்
இள மனத்தாயான் இனிய மகன்
தன்னார் அமுதாகி
இனிது வந்து பிறப்புற்றான்
சாந்தி நிலை கண்டிடட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீனித்தம்பி என்னும்
சிறப்பு மிகு பேராளா
ஆனித் தரமானாய்
அடல் ஆண்மை பெற்றவனே
காணிக்கை ஆனாயே
காளி அன்னை திருமடியில்
சீனித்தம்பி உன் ஆத்மா
தேவிக்கு உறவன்றோ

தந்தை மகற் காற்றும்
தலைபெறு தத்துவத்தால்
தந்தை நிலை நின்று
தனையற்கு துணையானை
விந்தை உன் செல்வமெல்லாம்
வீணாக போனதில்லை
சந்ததமும் உன் பெயரை
சரித்திரத்தில் பதித்து வைத்தார்.

குடியிருப்பு மண்ணில்
குடியிருக்கும் மாகாளி
அடிமலரில் நின்று இனிது
ஆற்றல் மிகு சேவை செய்தாய்
படிந்தாய் அவள் பாதம்
பற்று உறுதி கொண்டவனே
முடித்தாய் உன் வாழ்வு
மூழ்கினாய் காளியிடம்

உன் ஆத்மா அன்னையிடம்
உறவாகி வாழட்டும்
உன் ஆத்மா அன்னையிடம்
ஒளியாகி மிளிரட்டும்
உன் ஆத்மா அன்னையிடம்
உறங்கி தழுவட்டும்
உன் ஆத்மா அன்னையிடம்
ஊர் நிறைந்து பேசட்டும்

*அருட்கவியரசு பண்டிட். ஆச்சாரிய விஸ்வபிரம்மம்*

**வை. இ. எஸ். காந்தன் குருக்கள்**

பெரியபோரதீவு

ஸ்ரீ காளிபுரம், பெரியபோரதீவு, மட்டக்களப்பு, இலங்கை.
311/1, Jubilee Mawatha, Mattakkuliya, Colombo - 15, Sri Lanka.
நாண்டும் அன்னையாக் மீண்டும் சந்திப்போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் சீனித்தம்பி தனது மனைவி நாகரெத்தினம் தனது மகள்களான மகேஸ்வரி, லோகேஸ்வரி சந்திரவதனி மகன்களான காளிதாசன், யோகேஸ்வரன், நாகராசா, தனது மூத்த மகன் பூமணிதேவியின் புதல்வி விக்கினேஸ்வரி ஆகியோருடன் நின்று அடுத்துக் கொண்ட படம்



அமரர் சீனித்தம்பி அவர்கள் தனது இளையமகன் நாகராசாவுடனும் தனது பேரன்களான ஷர்மிலன் தஸ்நிஜன் ஆகியோருடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் சீனித்தம்பி, நாகரெத்தினம் தம்பதியினர் 60வது ஆண்டு திருமண நினைவு நாளில் அவர்களின் மூத்தமகளான அமரர் திருமதி பூமணிதேவி சதாசிவம் அவர்களுடனும் மகனான யோகேஸ்வரனுடனும் நின்று எடுத்த புகைப்படம்



அமரர் சீனித்தம்பி தனது 80வது பிறந்ததின நிகழ்வில் தனது மனைவி நாகரெத்தினம் தனது புத்திரிகளான பூமணிதேவி, மகேஸ்வரி, லோகேஸ்வரி, சந்திரவதனி ஆகியோருடன் தனது பேரன் ஷர்மிலன் அடங்கலாக கலந்து கொண்டபோது எடுக்கப்பட்ட படம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் சீனித்தம்பி காளிகோவிலில் தெய்வம் ஆடும்போது அவரது தம்பி அமரர் சுப்பிரமணியம் பிடித்துக் கொண்டிருக்கும் படம்



அமரர் சீனித்தம்பி தனது மகளான மகேஸ்வரி அவர்கட்கு சிவநேசன் என்பவரை திருமணம் முடித்து வைத்த திருமண நன்நாளில் தமது மனைவி நாகரெத்தினத்துடன் நின்று எடுத்துக் கொண்ட படம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அமரர் சீனித்தம்பி தனது மனைவி நாகரெட்ணத்துடன் தனது மகள் லோகேஸ்வரியின் பட்டமளிப்பு விழாவில் எடுத்த படம்

அமரர் சீனித்தம்பி தமது 60வது வருட திருமண நினைவு நாளில் மனைவி நாகரெட்ணத்துடன் நின்று எடுத்த படம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் சீனித்தம்பி அடியார்களுடன் நடையாக காட்டுவழியாக கதிர்காமம் செல்லும் போது எடுக்கப்பட்ட படம்



அமரர் சீனித்தம்பி அவர்கள் தமது பேரன் ஷர்மிலனின் பிறந்த தின நிகழ்வில் பேரனுடனும், பேத்தி ஆகியோருடன் நின்று எடுத்துக் கொண்ட படம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் சீனித்தம்பி அவர்கள் வாழைச்சேனை புதுக்குடியிருப்பு ஸ்ரீ பத்திர காளி அம்மன் ஆலயத்தில் சடங்கு நடாத்தப்படும் கால வேளையில் நடைபெற்ற கேதார ஈஸ்வர விரத நிகழ்வில் தனது மகள்களான மகேஸ்வரி, லோகேஸ்வரி, மகனான யோகேஸ்வரன், நாகராசா ஆகியோருடன் காளிகோயிலில் வைத்து எடுக்கப்பட்ட படம்



அமரர் சீனித்தம்பி தமது மனைவி நாகரெட்ணத்துடன் தமது இளைய மகன் நாகராசா ஞானவதி திருமண நிகழ்வில் நின்று எடுக்கப்பட்ட படம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் சீனித்தம்பி தமது உறவினர்களுடன் கதிர்காமத்தின்
முருகன் ஆலயத்தில் அமர்ந்திருக்கும் காட்சி



அமரர் சீனித்தம்பி காளி கோவில்
சடங்குவேளை கன்னிமார்பூசையில்
தெய்வம் ஆடும் போது
எடுக்கப்பட்ட படம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவாகம ரத்னம், சிவாச்சார்ய திலகம், கிரியாக்ரமஜோதி, கிரியாசாகரம்
**ப்ரம்மஸ்ரீ.இலஷ்மீகாந்த ஜெகதீசக்குருக்கள்** (M.Com, BCA,DIT) JP
ஆதீனகர்த்தா - ஸ்ரீசாயி விஷ்ணு கோவில், தெகிவளை, பிரதமகுரு - கந்தசுவாமி கோவில், பாணந்துறை
ஆலோசகர் - சேவாலங்கா, மனித உரிமைகள் சபை, செயலாளர் - சர்வமதங்களின் ஒன்றியம்
இல.10/4, வாத்தியா மாவத்தை, தெகிவளை — No.10/4, Bhathiya Mawatha, Dehiwala


# இரங்கலுரை

வாழ்க்கை என்பது ஓர் தவம். அத்தவம் இரண்டு வகையாக அமைகின்றது. அதாவது ப்ரமச்சாரியத்தில் இருந்து சன்னியாசம் பெற்று முக்தியடைதல் முறையாக, நான்கு மார்க்கங்களின் மூலமாக வீடுபேறு அடைவதற்கு (ப்ரமச்சாரியம், க்ருஹஸ்தம், வானப்பிரஸ்தம், சன்னியாசம்) என வகையாகிறது. இதனை சுலபமாக வாழ்க்கையில் வாழ்வது, வாழ்க்கையை வாழ்வது என முறையே கூறலாம்.

இரண்டாவது தவ வாழ்வான இல்லறம் மூலம் வீடுபேறு அடைவது. அது அத்தனை சுலபமான காரியமாகாது. அமரர் இரத்தினம் சீனித்தம்பி அவர்கள் வாழைச்சேனை புதுக்குடியிருப்பு கிராமத்தை உருவாக்குவதற்கு பெரும் துணை கொடுத்து வாழ்ந்தவர். இவர் 1950ம் ஆண்டில் நாகரெத்தினம் அம்மையார் அவர்களை கரம்பற்றி தனது இல்லறத்தினை ஆரம்பித்து நல்லறமாக வாழ்ந்து ஏழு குழந்தைச் செல்வங்களைப் பெற்று உரிய காலங்களில் வேண்டுவன செய்து பரிபாலித்த பெருந்தகையாளர்.

சமூக சேவை, ஆலய சேவை என பெருமளவில் பணியாற்றியவர், வாழைச்சேனை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தை உருவாக்கியவர்களில் முதன்மையானவர். அத்தோடு பல ஆலயங்களின் தலைவர், உபதலைவர் போன்ற பல பதவிகளைப் பெற்று கடமை புரிந்துள்ளார். மேலும் சமூக அமைப்புக்களின் முக்கிய பங்காளராக, தலைவராக, பொருளாளராக மிளிர்ந்துள்ளார்.

இவ் நற்பணியாலும், எம் பெருமாட்டியின் மேல் உள்ள ஆழ்ந்த பற்றுதலாலும் அம்பிகையின் துவகாரோகண தினத்தின் மாலை வேளை அவள் பாதம் பற்றினார். அன்னாரின் பணியை நினைவுகூரும் இந்தவேளையில் அவர் தம் ஆத்மா என்றும் இறையடியிருக்க எல்லோரும் பிரார்த்திப்போமாக.....!



சிவாகம ரத்னம், சிவாச்சார்ய திலகம்,
கிரியாக்ரமஜோதி, கிரியாசாகரம்
**ப்ரம்மஸ்ரீ. இலஷ்மீகாந்த ஜெகதீசக்குருக்கள்**
(M.Com, BCA, DIT) JP


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேரிய வழி நின்ற நிறைமாந்தர்



இலங்கைத் தமிழரசுக் கட்சியினதும், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினதும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரனின் தந்தையார் இரத்தினம் சீனித்தம்பி 88 ஆண்டுகள் இந்த அவனியில் நம் எல்லோருக்கும் முன்மாதிரியாய் நிறை வாழ்வு வாழ்ந்து இறைவனடி ஏகியிருக்கின்றார்.

வாழைச்சேனை புதுக்குடியிருப்பில் தம் வாழ்வை நெறிப்படுத்திக் கொண்ட பெரியார் சீனித்தம்பி அவர்கள் சுமார் நாற்பது வருட காலம் வாழைச்சேனை கடதாசி ஆலையில் நல்லூழியராய்ப் பணியாற்றி, ஏழு பிள்ளைகளுடனும், குடும்பத்தினருடனும் ஒரு சீரிய வாழ்வை முன்னெடுத்து, நேரிய நிறைமாந்தராய் திகழ்ந்தார்.

புதுக்குடியிருப்பு காளி கோவிலுடன் தமது சமய வாழ்வை முழுதாகப் பிணைத்து கொண்ட அவர், நீண்ட காலமாக கோயில் தொண்டுகளிலும், சிரத்தையுடன் ஈடுபட்டு வந்தார்.

சமய, சமூக செயற்பாடுகளில் அவர் எப்போதும் ஆத்மாத்தமான தமது பங்களிப்பை வழங்கி வந்தவர் என்பதால் சமூகத்தினால் பெரிதும் மதிக்கப்பட்டவர்.

ஆரம்ப காலம் தொட்டே இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியவற்றுக்கு தமது சிந்தையாலும், செயலாலும் பங்களித்த அரசியல் செயற்பாட்டாளர் அவர்.

அவரது ஆத்மா அவர் வணங்கும் காளித்தாயுடன் இரண்டறக் கலந்து பேரின்பம் பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**இரா. சம்பந்தன்.**

நாடாளுமன்ற உறுப்பினர் – திருகோணமலை மாவட்டம்.

தலைவர் – தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

පාර්ලිමේන්තුව
பாராளுமன்றம்
PARLIAMENT

# இரங்கற் செய்தி

*"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்*
*பெருமையுடைத்து இவ்வுலகு"*

வாழ்க்கை வட்டத்தில் உயர்நிலை உடம்பு கொண்டு உலாவரும் ஜீவன்களில் மனித உடலே பிரிவு என்னும் வேதனையைத் தருகின்றது. அதிலும் நற்பிரஜையாக, நல்ல குடும்பத்தவராக வாழ்ந்த ஜீவன் மனிதக்கூட்டினைப் பிரியும்போது ஏற்படுகின்ற துயர் தாளமுடியாததொன்றாகும்.

இந்த வகையில் எனது நண்பராகிய பாராளுமன்ற உறுப்பினர் திரு. யோகேஸ்வரனின் தந்தையாகிய திருவாளர் இரத்தினம் சீனித்தம்பி அவர்கள் இவ்வுலகை விட்டு நீங்கிய துயரச்செய்தியைக் கேள்வியுற்று ஆழ்ந்த கவலையடைந்தேன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் திரு யோகேஸ்வரனுடன் இணைந்து பணியாற்றும் இக்காலப்பகுதியில் அவரது தந்தையார் பற்றி என்னால் ஓரளவு புரிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது.

இவர் வாழைச்சேனையில் உள்ள தேசிய கடதாசிக் கம்பனியில் இயந்திர இயக்குனராகப் பணியாற்றியது மட்டுமின்றி வாழைச்சேனை ஐக்கிய நாணய சங்கத்தின் பொருளாளர், புதுக்குடியிருப்பு பத்திரகாளி கோயில் தலைவர், கண்ணகிபுரம் நாகதம்பிரான் கோயில் தலைவர், வாழைச்சேனை கைலாயப்பிள்ளையார் கோயில் உபதலைவர் போன்ற பலபதவிகளையும் வகித்தவர். மேலும் இவரே வாழைச்சேனை புதுக்குடியிருப்புக் கிராமம் மற்றும் வாழைச்சேனை பத்திரகாளியம்மன் கோயில் போன்றவை உருவாகக் காரணமானவர்களில் முதன்மையானவர். அதுமட்டுமின்றி இலங்கைத் தமிழரசுக்கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியவற்றின் விசுவாசியாக 1952ம் ஆண்டு தொடக்கம் செயற்பட்டு வந்தவர். மேலும் சித்த வைத்தியம், மாந்திரீகம் போன்ற துறைகளிலும் கைதேர்ந்தவர்.

எனினும் இவ்வுலகில் பிறப்பவர்கள் அனைவரும் ஒரு நாள் இறப்பது நிச்சயம். இருப்பினும் அவர் குடும்பத்தில் வகித்த அன்பான கணவன் மற்றும் பாசமிக்க தந்தை போன்ற பாத்திரங்களை எவராலும் ஈடுசெய்ய முடியாது. எனவே அவரது குடும்ப அங்கத்தவர் அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களையும் ஆறுதலையும் இச்சந்தர்ப்பத்தினில் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.



**திரு. பொன். செல்வராசா**
**பாராளுமன்ற உறுப்பினர்**
**தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு**
**மட்டக்களப்பு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

M.Ed.,B.A.,PGBE(Me).,Sp.Tr.(Ag)
882.
: +94 21 3207584. +94 21 2280024
: +94 21 2221595. +94 21 2280024
: +94 77 6913244
: shritharan08@hotmail.com
: www.shritharan.com

பாராளுமன்றம்
PARLIAMENT

SIVAGNANAM SHRITHARAN M.P
M.Ed.,B.A.,PGDE(Me)., Sp.Tr.(Ag)
Jaffna Electoral District.
882, Arumugam Road,
Vaddakachchi, Kilinochchi, Srilanka.
Tel : +94 21 3207584, +94 21 2280024
Fax. : +94 21 2221595, +94 21 2280024
Mob. : +94 77 6913244
E.mail : shritharan08@hotmail.com
Web : www.shritharan.com

# மாண்புறு மனிதரின் பிரிவின் நினைவுகள்.

மண்ணில் வாழ்வாங்கு வாழ்ந்த மனிதர் ஒருவரின் நினைவுகளை மீட்டுவது எமக்கு கிடைத்த பாக்கியம். அமரர் இரத்தினம் சீனித்தம்பி அவர்களின் இந்த மண்ணுலக வாழ்வும் மனிதர்களுக்கு சீரிய வாழ்வொழுக்கத்தை காட்டிச் செல்கின்றது. இனம் தேசியம் என்று வருகின்ற போது அமரர் சீனித்தம்பி தாம் பிறந்த மண்ணில் பற்றுள்ள வாழ்வினூடாக தன் மக்கட் செல்வத்துக்கும் அதை கடத்திச் சென்றிருக்கின்றார். அதற்கு சாட்சியாக ஒரு ஆசாரசீலராக சைவசமயியாக அன்பே சிவம் தத்துவத்தின் பால் ஒழுகும் இரக்கமுள்ள யோகேஸ்வரன் என்ற பாராளுமன்ற உறுப்பினராக நம் முன்னே ஒருவர் நிமிர்ந்து நிற்கின்றார். இந்த ஒழுக்கம் அவரின் தந்தை அவருக்கு கொடுத்தது என நினைக்கின்றோம். மட்டுநகருக்குரிய பாரம்பரிய மண்மணம் கமழும் அடையாளங்கள் அமரர் சீனித்தம்பி அவர்களில் வாழ்வில் இறுகப்பிணைந்ததாக இருந்திருக்கின்றது. மந்திரமும் இறை பக்தியும் கூடிய வாழ்க்கையை அவர் வாழ்ந்து முடித்திருக்கின்றார். சமுக நோக்குள்ள பக்திமானாக புதுக்குடியிருப்பு காளிகோவில் கண்ணகிபுரம் நாகதம்பிரான் வாழைச்சேனை கைலாய பிள்ளையார் போன்றவற்றின் தோற்றுவாய், வளர்ச்சி என்பவற்றில் இரத்தினம் சீனித்தம்பி என்ற மனிதரின் தொண்டும் முயற்சியும் அப்பிரதேச சூழலால் என்றும் நினைவு கொள்ளப்படும். புகழ்பூத்த வாழைச்சேனை கடதாசி தொழிற்சாலையில் ஒரு இயந்திர இயக்குநராக சிறந்த கொத்தனாராக, ஒரு தொழிலறிந்த மனிதராக, வாழ்ந்து முடித்திருக்கும் அமரர் இரத்தினம் சீனித்தம்பி அவர்களின் தமிழ் தேசியம் மீதான பற்றுக்கும், அர்ப்பணிப்புக்கும், விசுவாசத்துக்கும், தலைசாய்க்கும் வேளையில் இயல்பான வாழ்வியலில் பாசத்தின் பிணைப்பால் பிரிவுத்துயரில் உழலும் அன்னாரின் குடும்பத்துக்கும் சுற்றத்துக்கும் அன்னாரின் குலதெய்வமான பத்திரகாளி தாய், சாந்தியையும், அமைதியையும் ஆத்ம ஈடேற்றத்தையும் தர பிரார்த்திக்கின்றோம்.

நன்றி

சி. சிறீதரன்
பாராளுமன்ற உறுப்பினர்
யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம்
கிளிநொச்சி.
2013.08.13



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்குடா வலயக்கல்விப் பணிப்பாளரின் அனுதாபச் செய்தி

21. 07. 2014ல் அமரத்துவம் அடைந்த அமரர் இரத்தினம் சீனித்தம்பி அவர்களின் மறைவு வாழைச்சேனைப் பிரதேசத்துக்கு ஏற்பட்ட இழப்பாகும்.

இவர் காகித ஆலையில் கடமை புரிந்தாலும், சமூக சேவையில் தன்னை இணைத்துக் கொண்டு கல்வி, சமயம், மொழி என்பவற்றுக்காக சேவை புரிந்தமையை மறக்க முடியாது.

ஒரு மனிதன் எவ்வளவு காலம் வாழ்ந்தான் என்பது முககியமல்ல. அவன் தன் வாழ் நாளில் தன்னை விடச் சமூகத்துக்கு எதனைச் செய்தான் என்பதே மிக முக்கியமாகும். இவ்வாறானவர்களே இன்று மறைந்தாலும் மறையாதார் போல் மக்கள் முன் வாழ்கிறார்கள்.

எனவே வாழைச்சேனைப் பிரதேசத்தில் பல சைவ ஆலயங்கள் உருவாக காரண கர்த்தாவாக விளங்கியவர். குறிப்பாக புதுக்குடியிருப்பு பத்திரகாளி அம்மன் ஆலயத்தை உருவாக்கியதில் இவரது பங்களிப்பு இருந்ததாக அறியக் கூடியதாக உள்ளது.

இன்று சமயம் விட்டு சமயம் தாவும் மனநிலையில் மக்கள் செயற்படும்போது இவ்வாறானவர்களின் இழப்பு எமது சமூகத்துக்கு ஈடு செய்ய முடியாத இழப்பாகும்.

அன்னாரது இழப்பு குறித்து குடும்பத்தினருக்கு எனது ஆழந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**செ. ஶ்ரீகிருஷ்ணராஜா**
வலயக்கல்விப் பணிப்பாளர்
கல்குடா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Message from the Competent Authority of National Paper Company Limited.

*I take this opportunity to reminder late Mr. Seenithamby who worked an employee of National Paper Company limited, Valaichchenai When I assumed the duties as Competent Authority in April 2012, I had many discussions and meetings with our senior staff to upgrade standard of the National Paper Company. During that time, I Come to know that Late Mr. Seenithamby was a remarkable Person and this juncture I like to point out another thing that is I had met Hon Yoheswaran member of parliament for Batticaloa district in many occasions at the Parliment. Since he is being a member of the cope I was able to understand his thoughts about our Paper Mills. I wish to say Hon Yoheswaran Loves the people in this area. He also strees not to close the Paper factory due to many reasons His main reason is the Paper factory is the location of this area. Also he raise a big Vioce at the parliament when participating for meetings at the cope as he too have positive thoughts that this mill could be restructure back and run with the present Government support and help the poor employees who are working at present and having hopes to generate more employment opportunities in this rural area.*

*Hon Yoheswaran behaves Politely and demand his requests in a good manner. From this behavior I can come to the conclusion that late seenithamby, that is the father of Hon. Yoheswaran should be a gentle man. Further I understand that the children of Late Mr. Seenithamby are in good Position. Due to this I am sure Late Mr, Seenithamby was a good father for his children.*

***I pray the god for his all rest in peace***

***Dashanaaniya mangala senarath the competetent Authority.***


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கல் உரை

வாழைச்சேனையை பிறப்பிடமாகவும், புதுக்குடியிருப்பை வசிப்பிடமாகவும் கொண்ட இறைபதமடைந்த அமரர். இரத்தினம் சீனித்தம்பி அவர்களின் மறைவு அன்னாரின் குடும்பத்தினருக்கும், பிரதேச மக்களுக்கும் பேரிழப்பாகும்.

தன் இளமைக் காலம் முதல் புதுக்குடியிருப்பு கிராமத்தை உருவாக்கு வதிலும், அதன் வளர்ச்சியிலும் பிரதான பங்காற்றியுள்ளார். குறிப்பாக பாடசாலைகள், இந்து ஆலயங்கள் ஆரம்ப காலகட்டத்தில் நிர்மாணிக்கப்படுவதற்கு முன்னின்றுழைத்த ஒருவர்.

புதுக்குடியிருப்பு ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலய திருப்பணிகளில் தன்னை முழுமையாக அர்ப்பணித்து பணியாற்றியவர். அமரர் தன் வாழ்நாளில் தமிழ் உணர்வு மிக்கவராகவும், சமயப் பற்றுள்ளவராகவும் வாழ்ந்து காட்டியுள்ளதுடன், தன் பிள்ளைகளையும், அதே வழியில் பணி புரிவதற்கும், உயர் பதவிகளை வகிப்பதற்கும் வழியமைத்துக் கொடுத்த பெருமையும் அவரையே சாரும்.

நோயுற்றிருந்த தனது இறுதிக் கால கட்டத்திலும், தினமும் நெற்றியில் விபூதியுடனே காணப்பட்டார். "நீறற்ற நெற்றி பாழ்" என்ற முது மொழியை தன் வாழ்நாளில் இறுதிவரை மறக்காத ஆசார சீலராகவும், அமைதியின் உருவமாகவும், நல்ல பண்பாளனாகவும், சிறந்த குடும்பத் தலைவனாகவும், வாழ்ந்து அமரத்துவமடைந்துள்ள அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதுடன், அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!



**கலைச்சுடர். கதிர் பாரதிதாசன்,**
செயலாளர், கிழக்கு இந்து ஒன்றியம்
செயலாளர், மங்கையர்கரசியர் மகளிர் இல்லம்,
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை
**FEDERATION OF YOUNG MEN'S HINDU ASSOCIATION**
BATTICALOA DISTRICT – SRI LANKA
BT/D.Y.M.H.A

Regd No. HA/04/BT/216 | Bank No. 190-10018000518, SWIFT CODE: PSBKLKLX | 1105040264, SWIFT CODE : CCEYLKLX, Bank Code : 7056-105,

Tel: 0776034559, 0718049439 | Tel: 0774445128 | Tel: 0653654473

Date / திகதி: 04/08/2014



# கிராமிய வளர்ச்சியில் ஒரு கலங்கரை விளக்கு
## (அமரர் இ. சீனித்தம்பி ஐயா)

மனிதப் பிறவி என்பது இயற்கையின் நியதியாகும். ஆனால் அவன் எப்படி வாழ்ந்தான், அவன் எப்படி இறந்தான் என்பதுதான் வரலாறுகளில் இடம்பெறுவது. இந்தவகையில் வாழைச்சேனை புதுக்குடியிருப்பைச் சேர்ந்த சீனித்தம்பி ஐயா அவர்கள் ஒரு கிராமப் புறத்தில் பிறந்து வளர்ந்து மக்கள் மத்தியில் பெருமை பெற்றவர்.

இவர் சிறுவயது தொடக்கம் காளியம்மன் மீது மேற்கொண்ட பக்தியின் நிமிர்த்தமும், தம் பிள்ளைகள் மேற்கொண்ட கல்வி வளர்ச்சியின் காரணமாகவும், சமயத்தையும், கல்வியையும் இரு கண்களைப் போன்று மதித்த ஒரு மனிதன். திடமான உடற்கட்டும், உறுதியான உள்ளமும், பிறரை மதித்து நடக்கும் பண்பும், பிறருக்கு உதவும் மனோபாவமும், வாழ்க்கையில் முன்னேற்ற வேண்டும் என்ற தனித்துவமான பண்பும் இவரிடம் காணப்பட்ட சிறந்த பண்புகளாகும்.

"இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென் இல்லவள் மாணாக் கடை" என்ற வள்ளுவர் வாக்கிற்கு அமைய நல்ல பண்புடைய மனைவியை வாழ்க்கையில் அமைத்து தனது குடும்பம் ஒளி விட்டுப் பிரகாசித்து இறைவன் அருளால் நன்மக்கள் ஏழு பேரை ஈந்தான்.

"பெறுமவற்றுள் யாமறிவதில்லை அறிவந்த மக்கட் பேறல்ல பிற" என்னும் வள்ளுவர் கூற்றுக்கமைய சிறந்த மக்களைப் பெற்று பெருமை பூத்த பெருமகன் சீனித்தம்பி ஐயா, தமது மக்கள் அனைவருமே பட்டதாரிகளாவதுடன், அனைவரும் சிறந்த அரச சேவையும், மகன் யோகேஸ்வரன் அவர்கள் பாராளுமன்ற உறுப்பினராக்கியமையும் அவர் செய்த நற்பணியின் பிரதிபலிப்பே எனலாம்.

இத்தகைய பெருமகன் மரணத்தால் மடிந்து போனாலும், அவருடைய உயரந்த மனித நேயமும், விழுமியங்களும் என்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் என்பதில் ஐயமில்லை.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

..........................
ந.புவனசுந்தரம் (JP),
பொருளாளர்,
மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை
புலவர் வீதி, தேத்தாத்தீவு

மாவட்ட காரியாலயம் : இல.84, பார் வீதி, மட்டக்களப்பு.
தொலைபேசி இல : 0776034559, 0718049439, 0653656608, 0652228018, 0652228273
தொலைநகல் : 0652228273 E-Mail: btdymha@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதிரவெளி மக்களின் மனதை விட்டு நீங்காது இடம்பெற்ற அமரர் இரத்தினம் சீனித்தம்பி அவர்களின் நினைவு பதிவுகள்

2014.07.21ம் திகதி அன்று இயற்கை எய்திய அமரர் இரத்தினம் சீனித்தம்பி ஐயா அவர்கள் எமது கிராம மக்களால் மிக எளிதில் மறக்கப்பட முடியாத ஒரு மாமனிதராவார். அவரைப் பற்றிய சில தடயங்களை அன்னாரது 31ம் நாள் அஞ்சலி புத்தகத்தில் பதிவு செய்வதில் மிக மகிழ்ச்சி அடைகின்றோம்.

அமரர் இரத்தினம் சீனித்தம்பி அவர்கள் எங்களது கதிரவெளி கிராமத்தின் தாய் வயிற்றுப் பிள்ளையாவார். அன்னாரது அம்மம்மா கதிரவெளியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அத்தோடு கதிரவெளியில் பிரபலமாக விளங்கும் முக்கிய குடியாகிய சைவ வேளாளர் குலத்தின் பூசாரி குடியைச் சேர்ந்தவர். அதன் காரணமாகத்தான் அன்னாருக்கும், அன்னாரின் புத்திரனாகிய கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் திரு. சீ. யோகேஸ்வரன் ஐயா அவர்களுக்கும் இக்கிராம மக்கள் விஷேட மதிப்பும், மரியாதையும் வைத்திருக்கின்றார்கள்.

முக்கியமாக அமரர் இரத்தினம் சீனித்தம்பி அவர்கள் தன்னுடைய வாழ்நாளில் கதிரவெளியில் நடைபெறுகின்ற மரண வீடாகினும் சரி, திருமண வீடாகினும் சரி, கோயில் விழாக்களாயினும் சரி இங்கே வந்து நின்று தனது நிகழ்வு போல நடாத்திச் செல்வார்.

அதுமட்டுமில்லாமல் சுனாமிக்கு முந்திய காலங்களில் எமது கிராமத்தில் மேசன் தட்டுப்பாடு நிலவி வந்தது. அவ்வேளையில் எல்லாம் கதிரவெளியில் அநேகமான வீடுகள், கிணறுகள் எல்லாம் இவரது கை வண்ணத்தால் உருவாகின. என்ன வேலைகள் இருந்தாலும் கதிரவெளி மக்களுக்கு ஓடோடி வந்து பணிகளைச் செய்து கொடுப்பதற்கு மிகவும் ஆர்வமுள்ளவராய் எப்பொழுதும் இருந்தார்.

மேலும் யுத்தகாலப் பகுதியிலே போக்குவரத்துக் குறைபாடு இருந்த நேரத்தில் பொருட் கொள்வனவு செய்வதற்கு வாழைச்சேனைக்கு செல்லும் கதிரவெளி மக்களுக்கு புகலிடம் அளிக்கின்ற இடமாக அமரர். இ. சீனித்தம்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் வீடு விளங்கியது. சொந்தக்காரரோ சொந்தமில்லாதவரோ யாவரையும் அன்புடன் அரவணைத்து அவர்களுக்கு உணவு தங்குமிடம் அளித்து அந்த ஆபத்தான காலத்தில் அடைக்கலம் அளித்து உதவிய ஒரு உத்தமராவார்.

அத்தோடு கதிரவெளி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயம் அமைக்கப்பட்டு 25 வருடகாலமாக விழாக் கால பிரதமகுருவாக கடைமையாற்றுகின்ற அவரது மகன் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் திரு. சீ. யோகேஸ்வரன் ஐயா அவர்களுடன் உதவியாளராக நின்று கிரியைகளை மேற்கொண்டதோடு, தீ மூட்டும் திறமையான பணியினையும் சிறப்பாக செய்து விழா முடியும் வரை நின்று எந்தவித வேதனமும் பெறாது செய்த பணியினை இக்கிராம மக்கள் இன்றும் நினைவு கூருகின்றனர்.

இவ்வாறு எம்மோடு இரண்டறக் கலந்து இன்ப துன்பங்களிலும் பங்கு கொண்டு தனது 88வது வயதில் இறைபதம் எய்திய அமரர். இ. **சீனித்தம்பி** அவர்களின் ஆத்மா சாந்தியடைய வேண்டும் என்று கிராம மக்களின் சார்பாக பரமனின் பாதார விந்தங்களை பணிந்து வேண்டுகின்றோம்.

இவ்வேளையில் அன்னாரது பிரிவுத் துயரில் மனம் வருந்தி வாழ்ந்து கொண்டிருக்கும் அன்னாரது மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவருக்கும் மன ஆறுதலையும், சாந்தியையும் ஆண்டவன் கொடுக்க வேண்டும் என்று இறைவனை மன்றாடுகின்றோம்.



**இவ்வண்ணம்**

**கதிரவெளி பொதுமக்கள் சார்பாக**

**திரு. சீ. கிருஷ்ணபிள்ளை.**

பூசகர், (தலைவர், பூசாரி குடியினர்),

கதிரவெளி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சீனி அண்ணன்" என்று எங்கள் குடும்பத்தவரினால் அழைக்கப்படும் அமரர் சீனித்தம்பி அவர்கள் நாங்கள் இவ்வுலகில் தோன்றுவதற்கு முன்பே எங்கள் தாய் தந்தையருடன் மிக நெருங்கி பழகியவர் என்பதை எங்கள் குடும்ப நிழல் படங்கள் வெளிப்படுத்துகின்றன. இவர் காகித ஆலையில் பணியாற்றியதுடன் எங்களது கிராம கோயிலாகிய காளி கோயிலின் முன்னேற்றத்திற்காக பாடுபட்டவர். வேலையில் நின்று ஓய்வு பெற்றபின் இக்கோயிலுக்காக தன்னை அர்ப்பணித்தவர். அத்துடன் எங்கள் கிராம பாடசாலையின் (வாணி வித்தியாலயம்) முன்னேற்றத்திற்காகவும் எங்களது தாயாருடன் சேர்ந்து பணியாற்றியவர். சீவிய காலம் முழுவதும் இவர்கள் இலங்கை தமிழ் அரசு கட்சியில் இருந்ததன் பொருட்டு தனது தமிழ் உணர்வை வெளிப்படுத்தியவர். எந்த ஒரு மரண வீட்டிலும் முன்னின்று உதவி செய்ததன் மூலம் பொதுநல சேவையையும் ஊருக்கு வெளிப்படுத்தியவர். அன்னாரின் மறைவுக்கு எங்கள் குடும்பத்தாரின் ஆழ்ந்த அனுதாபங்கள்.



**இப்படிக்கு**

**த. விபுலானந்தன்**

அமரர்களான திருமதி. சி. தங்கத்துரை

குடும்பத்தினர் சார்பாக

அவுஸ்ரேலியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேதாரேச்வர (கௌரி விரதம்) நோன்பு கணபதி பூஜை

கணாநாம் த்வா கணபதிகும் ஹவாமஹே
கவிம் கவீநாம் உபமஸ்ரவஸ்தமம்
ஜ்யேஷ்டராஜம் ப்ரஹ்மணாம் ப்ரஹ்மணஸ்பத
ஆந: ச் ருண்வந்நூதிபிஸ்ஸீத ஸாதநம்!!
அஸ்மிந் ஹரித்ராம்பிம்பே ஸுமுகம் மஹாகணபதிம்
த்யாயாமி!
மஹா கணபதிம் ஆவாஹயாமி!

ஓம் ஸ்ரீ மஹாகணபதயே நம : ஆஸநம் ஸமர்ப்பயாமி
ஓம் ஸ்ரீ மஹாகணபதயே நம : அர்க்யம் ஸமர்ப்பயாமி
ஓம் ஸ்ரீ மஹாகணபதயே நம : பாத்யம் ஸமர்ப்பயாமி
ஓம் ஸ்ரீ மஹாகணபதயே நம : ஆசமநீயம் ஸமர்ப்பயாமி
ஓம் ஸ்ரீ மஹாகணபதயே நம : ஔபசாரிகஸ்நாநம் ஸமர்ப்பயாமி
ஓம் ஸ்ரீ மஹாகணபதயே நம : ஸ்நாநாநந்தரம் ஆசமநீயம் ஸமர்ப்பயாமி
ஓம் ஸ்ரீ மஹாகணபதயே நம : வஸ்த்ரார்த்தம்அக்ஷதாந் ஸமர்ப்பயாமி
ஓம் ஸ்ரீ மஹாகணபதயே நம : யக்ஞோபவீதார்த்தம் அக்ஷதாந் ஸமர்ப்பயாமி
ஓம் ஸ்ரீ மஹாகணபதயே நம : திவ்ய பரிமள கந்தாந் தாரயாமி
ஓம் ஸ்ரீ மஹாகணபதயே நம : கந்தஸ்யோபரி அக்ஷதாந் ஸமர்ப்பயாமி
ஓம் ஸ்ரீ மஹாகணபதயே நம : அலங்கரணார்த்தம் அக்ஷதாந் ஸமர்ப்பயாமி
ஓம் ஸ்ரீ மஹாகணபதயே நம : ஹரித்ரா குங்கும் ஸமர்ப்பயாமி

புஷ்பை : பூஜயாமி (என்று புஷ்பம் அக்ஷதைகளால் மஞ்சள் பிள்ளையாருக்கு பூஜை செய்யவும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஓம் | ஸுமுகாய | நம : | ஓம் | கணாத்யக்ஷாய | நம : |
| ஓம் | ஏகதந்தாய | நம : | ஓம் | பாலசந்த்ராய | நம : |
| ஓம் | கபிலாய | நம : | ஓம் | கஜாநநாய | நம : |
| ஓம் | கஜகர்ணகாய | நம : | ஓம் | வக்ரதுண்டாய | நம : |
| ஓம் | லம்போதராய | நம : | ஓம் | சூர்ப்பகர்ணாய | நம : |
| ஓம் | விகடாய | நம : | ஓம் | ஹேரம்பாய | நம : |
| ஓம் | விக்நராஜாய | நம : | ஓம் | ஸ்கந்த பூர்வஜாய | நம : |
| ஓம் | கணாதிபாய | நம : | ஓம் | சித்தி விநாயகாய | நம: |
| ஓம் | தூமகேதவே | நம : | ஓம் | மஹாகணபதயே | நம : |

நாநாவித பத்ர பரிமள புஷ்பாணி ஸமர்ப்பயாமி

# ப்ரதான பூஜை

## பூஜை ஆரம்பம்

**சுக்லாம் பரதம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்ப்புஜம்!**
**ப்ரஸன்ன வதனம் த்யாயேத் ஸர்வ விக்நோப சாந்தயே!!**

### ப்ரணாயாமம்

**ஓம் பூ – ஓம் புவ : ஓம் ஸுவ :– ஓம் மஹ – ஓம் ஜன ஓம்**
**தப ஓகும் ஸத்யம் – ஓம் தத்ஸவிதுர்வரேண்யம் – பர்கோ**
**தேவஸ்ய தீமஹி தியோ யோ ந : ப்ரசோதயாத் – ஓமாப**
**ஜ்யோதீரஸ அம்ருதம் ப்ரஹ்ம பூர்ப்புவஸ்ஸுவரோம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸங்கல்பம்

மமோபாத்த, ஸமஸ்த துரிதக்ஷயத்வாரா, ஸ்ரீ பரமேச்வர ப்ரீத்யர்த்தம் சுபே சோபநே முஹூர்த்தே, ஆத்ய ப்ரஹ்மண த்விதீய ப்ரார்த்தே, ச்வேத வராஹ கல்பே, வைவஸ்வத மன்வந்தரே, அஷ்டாவிம்சதிதமே, கலியுகே, ப்ரதமே பாதே, ஜம்பூத்வீபே, பாரத வர்ஷே பரத கண்டே மேரோ தக்ஷிணே பார்ச்வே சகாப்தே, அஸ்மிந் வர்த்தமாநே வ்யாவஹாரிகே, ப்ரபவாதீநாம், ஷஷ்டி ஸம்வத் ஸராணாம் மத்யே ... நாம ஸம்வத்ஸரே, ருதௌ... மாஸே... பக்ஷே.... சுபதிதௌ..... வாஸர.... யுக்தாயாம்... நக்ஷத்ர யுக்தாயாம்... சுபயோக சுபகரண, ஏவங்குண, விசேஷண விசிஷ்டாயாம். சுபதிதௌ, அஸ்மாகம், ஸஹ குடும்பாநாம், க்ஷேமஸ்த்தைர்ய, வீர்ய, விஜய ஆயுராரோக்யைச் வர்யாபி வ்ருத்யர்த்தம், தர்மார்த்த காம மோக்ஷ சதுர்வித பல புருஷார்த்த ஸித்த்யர்த்தம், புத்ர பௌத்ராபி வ்ருத்யர்த்தம் இஷ்டகாம்யார்த்த ஸித்யர்த்தம், மனோவாஞ்சாபல ஸித்யர்த்தம் கேதாரேச்வர விரத பூஜாம் கரிஷ்யே என்று ஸங்கல்பம் செய்க.

### அங்க பூஜை

| | | | |
|---|---|---|---|
| மஹேச்வராய | நம: | பாதௌ | பூஜயாமி |
| ஈச்வராய | நம: | ஜங்கே | பூஜயாமி |
| காமரூபாய | நம: | ஜானுநீ | பூஜயாமி |
| ஹராய | நம: | ஊரு | பூஜயாமி |
| த்ரிபுராந்தகாய | நம: | குஹ்யம் | பூஜயாமி |
| பவாய | நம: | கடிம் | பூஜயாமி |
| கங்காதராய | நம: | நாபிம் | பூஜயாமி |
| மஹாதேவாய | நம: | உதரம் | பூஜயாமி |
| பசுபதயே | நம: | ஹ்ருதயம் | பூஜயாமி |
| பீநாகினே | நம: | ஹஸ்தான் | பூஜயாமி |
| சிவாய | நம: | புஜௌ | பூஜயாமி |
| சிதிகண்ட்டாய | நம: | கண்ட்டம் | பூஜயாமி |
| விரூபாக்ஷாய | நம: | முகம் | பூஜயாமி |
| த்ரிநேத்ராய | நம: | நேத்ராணாமி | பூஜயாமி |
| ருத்ராய | நம: | லலாடம் | பூஜயாமி |
| சர்வாய | நம: | சிர | பூஜயாமி |
| சந்த்ர மௌளயே | நம: | மௌளிம் | பூஜயாமி |
| பசுபதயே | நம: | ஸர்வாண்யங்காணி | பூஜயாமி |

பிறகு சிவாஷ்டோத்தர சத நாமாவளி சொல்லி அர்ச்சனை செய்யவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவாஷ்டோத்திர சத நாமாவளி

ஓம் சிவாய நம:
ஓம் மஹேச்வராய நம:
ஓம் சம்பவே நம:
ஓம் பிநாகினே நம:
ஓம் சசிசேகராய நம:
ஓம் சூலபாணயே நம:
ஓம் கட்வாங்கினே நம :
ஓம் விஷ்ணுவல்லபாய நம :
ஓம் ஸ்வரமயாய நம :
ஓம் த்ரயீ மூர்த்தியே நம :
ஓம் அநீச்வராய நம :
ஓம் ஸர்வஜ்ஞாய நம :
ஓம் பரமாத்மனே நம :
ஓம் ஸோம சூர்யாக்னி நம :
ஓம் ஹவிஷே நம :
ஓம் யஜ்ஞமயாய நம :
ஓம் ஸோமாய நம :
ஓம் பஞ்ச வக்த்ராய நம :
ஓம் காமாரயே நம :
ஓம் அந்தகாஸுர நம :
ஓம் கங்காதராய நம :
ஓம் லலாடாசக்ஷாய நம :
ஓம் கால காலாய நம :
ஓம் க்ருபா நிதயே நம :
ஓம் பீமாய நம :
ஓம் பரசுஹஸ்தாய நம :
ஓம் அனகாய நம :
ஓம் கிரீசாய நம :
ஓம் புஜங்க பூஷணாய நம :
ஓம் பர்க்காய நம :

ஓம் வாமதேவாய நம:
ஓம் விரூபாக்ஷாய நம:
ஓம் கபர்தினே நம:
ஓம் நீலலோஹிதாய நம:
ஓம் சங்கராய நம:
ஓம் பஸ்மோத்தூளித விக்ரஹாய நம:
ஓம் ஸாம ப்ரியாய நம :
ஓம் சிபிவிஷ்டாய நம :
ஓம் அம்பிகாயநாதாய நம :
ஓம் ஸ்ரீ கண்டாய நம :
ஓம் பக்தவத்ஸலாய நம :
ஓம் பவாய நம :
ஓம் சர்வாய நம :
ஓம் த்ரிலோகேசாய லோசனாய நம :
ஓம் சிதிகண்டாய நம :
ஓம் சிவ ப்ரியாய நம :
ஓம் உக்ராய நம :
ஓம் கபர்தினே நம :
ஓம் ஸதாசிவாய நம :
ஓம் விக்நேச்வராய ஸூதநாய நம :
ஓம் வீரபத்ராய நம :
ஓம் கணநாதாய நம :
ஓம் ப்ரஜாபதயே நம :
ஓம் ஹிரண்யரேதஸே நம :
ஓம் துர்தர்ஷாய நம :
ஓம் கிரிசாய நம :
ஓம் ம்ருகபாணயே நம :
ஓம் ஜடாதராய நம :
ஓம் கைலாஸ வாஸினே நம :
ஓம் கவசினே நம :


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஓம் | கிரிதந்வனே | நம : | ஓம் | கடோராய | நம : |
| ஓம் | கிரிப்ரியாய | நம : | ஓம் | த்ரிபுராந்தகாய | நம : |
| ஓம் | க்ருத்திவாஸஸே | நம : | ஓம் | வ்ருஷாங்காய | நம : |
| ஓம் | புராராதயே | நம : | ஓம் | வ்ருஷபாரூடாய | நம : |
| ஓம் | பகவதே | நம : | ஓம் | ப்ரமதாதிபாய | நம : |
| ஓம் | ம்ருடாய | நம : | ஓம் | ம்ருத்யுஞ்ஜயாய | நம : |
| ஓம் | பசுபதயே | நம : | ஓம் | ஸூக்ஷ்மதனவே | நம : |
| ஓம் | தேவாய | நம : | ஓம் | ஜகத் வ்யாபினே | நம : |
| ஓம் | மஹா தேவாய | நம : | ஓம் | ஜகத் குரவே | நம : |
| ஓம் | அவ்யயாய | நம : | ஓம் | வ்யோம கேசாய | நம : |
| ஓம் | ஹரயே | நம : | ஓம் | மஹாஸேந ஜநகாய | நம : |
| ஓம் | பகநேத்ரபிதே | நம : | ஓம் | சாரு விக்ரமாய | நம : |
| ஓம் | அவ்யக்தாய | நம : | ஓம் | ருத்ராய | நம : |
| ஓம் | தக்ஷாத்வரஹராய | நம : | ஓம் | பூத பதயே | நம : |
| ஓம் | ஹராய | நம : | ஓம் | ஸ்தாணவே | நம : |
| ஓம் | பூஷதந்தபிதே | நம : | ஓம் | அஹிர்புத்ந்யாய | நம : |
| ஓம் | அவ்யக்ராய | நம : | ஓம் | திகம்பராய | நம : |
| ஓம் | ஸஹஸ்ராக்ஷாய | நம : | ஓம் | அஷ்டமூர்த்தயே | நம : |
| ஓம் | ஸஹஸ்ரபதே | நம : | ஓம் | அனோகாத்மனே | நம : |
| ஓம் | அபவர்க்க ப்ரதாய | நம : | ஓம் | ஸாத்விகாய | நம : |
| ஓம் | அனந்தாய | நம : | ஓம் | சுத்த விக்ரஹாய | நம : |
| ஓம் | தாரகாய | நம : | ஓம் | சாச்வதாய | நம : |
| ஓம் | பரமேச்வராய | நம : | ஓம் | கண்ட பரசவே | நம : |
| ஓம் | அஜாய | நம : | ஓம் | பாபவிமோச நாய | நம : |

ஓம் ஸாம்ப பரமேச்வராய நம:

**ஓம் நாநாவித பரிமளபத்ர பரிமள புஷ்பாணி ஸமர்ப்பயாமி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோரக்ரந்தி பூஜை
## நோன்பு சரட்டிற்கு பூஜை செய்யவும்
## (கௌரி காப்புக்கு)

| | | | |
|---|---|---|---|
| சிவாய | நம: | ப்ரதமக்ரந்திம் | பூஜயாமி |
| வாஹாய | நம: | த்விதீயக்ரந்திம் | பூஜயாமி |
| மஹாதேவாய | நம: | த்ருதீயக்ரந்திம் | பூஜயாமி |
| வ்ருஷபத்வஜாய | நம: | சதுர்த்தக்ரந்திம் | பூஜயாமி |
| கௌரீசாய | நம: | பஞ்சமக்ரந்திம் | பூஜயாமி |
| ருத்ராய | நம: | ஷஷ்ட்க்ரந்திம் | பூஜயாமி |
| பசுபதயே | நம | ஸப்தமக்ரந்திம் | பூஜயாமி |
| பீமாய | நம: | அஷ்டமக்ரந்திம் | பூஜயாமி |
| த்ரியம்பகாய | நம: | நவமக்ரந்திம் | பூஜயாமி |
| நீலலோஹிதாய | நம: | தசமக்ரந்திம் | பூஜயாமி |
| ஹராய | நம: | ஏகாதசக்ரந்திம் | பூஜயாமி |
| ஸ்மரஹராய | நம: | த்வாதசக்ரந்திம் | பூஜயாமி |
| பவாய | நம: | த்ரயோதசக்ரந்திரம் | பூஜயாமி |
| சம்பவே | நம: | பஞ்சதசக்ரந்திம் | பூஜயாமி |
| சர்வாய | நம: | சதுர்தசக்ரந்திரம் | பூஜயாமி |
| ஸதாசிவாய | நம: | ஷோடசக்ரந்திம் | பூஜயாமி |
| ஈச்வராய | நம: | ஸப்ததசக்ரந்திம் | பூஜயாமி |
| உக்ராய | நம: | அஷ்டாதசக்ரந்திம் | பூஜயாமி |
| ஸ்ரீ கண்டாய | நம: | ஏகோநவிம்ச க்ரந்திம் | பூஜயாமி |
| நீலகண்டாய | நம: | விம்சதிதமக்ரந்திம் | பூஜயாமி |
| கேதாரேச்வராய | நம: | ஏகவிம்சதிதமக்ரந்திம் | பூஜயாமி |
| கேதாரேச்வராய | நம: | | |

நாநாவித பரிமள புஷ்பாணி ஸமர்ப்பயாமி

தசாங்க தூபமுக்யச்ச அங்கார விநிவேசித:
தூபஸ் ஸுகந்தை : ருத்பன்ன : த்வாம் ப்ரீணயது சங்கர
கேதாரேச்வராய நம : தூபமாக்ராபயாமி
தூபாநந்தரம் ஆசமனீயம் ஸமர்ப்பயாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ கௌரி தேவியின் இருபத்தொரு பெயர்களைக் கொண்ட அர்ச்சனை.

| | | |
|---|---|---|
| ஓம் | காத்யாயன்யை | நம: |
| ஓம் | உமாயை | நம: |
| ஓம் | பத்ராயை | நம: |
| ஓம் | ஹைமவத்யை | நம: |
| ஓம் | ஈச்வர்யை | நம: |
| ஓம் | பவான்யை | நம: |
| ஓம் | ஸர்வபாபஹராயை | நம: |
| ஓம் | ம்ருடான்யை | நம: |
| ஓம் | சண்டிகாயை | நம: |
| ஓம் | கிரிஜாயை | நம: |
| ஓம் | பராஹ்ம்யை | நம: |
| ஓம் | மாஹேச்வர்யை | நம: |
| ஓம் | கௌமார்யை | நம: |
| ஓம் | வைஷ்ணவ்யை | நம: |
| ஓம் | வராஹ்யை | நம: |
| ஓம் | இந்த்ராண்யை | நம: |
| ஓம் | சாமுண்டாயை | நம: |
| ஓம் | தாக்ஷாயண்யை | நம: |
| ஓம் | பர்வதராஜபுத்ர்யை | நம |
| ஓம் | சந்த்ரசேகரபத்ன்யை | நம: |
| ஓம் | ஸர்வோபத்ரவ நாசின்யை | நம: |

ஓம் ஸ்ரீ மஹாகேதார கௌர்யை நம:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# கேதாரேச்வர நோன்புக் கதை

**காப்பு**

தாரனையே கூந்தற்கவுரியியற்றியதே
தார விரதத்தை யான்படிக்க சீரிலகும்
ஐந்து கரத்தந்தி முகத் தண்ணலடி யார்க்கருளுங்
கந்தமலர்ச்செஞ்சரணே காப்பு

## கேதாரேச்வரர் பூஜா விதி (சுலபமாக செய்ய)

பூஜாரம்பத்தில் மஞ்சளால் விநாயகரைச் செய்வித்துக் கந்தம் பூஷ்பம் அறுகுசாத்தி நோன்பு நோற்பவர்கள் கையில் புஷ்பம் கொடுத்து விநாயகரை அர்ச்சனை செய்விக்க வேண்டியது அதற்கு மந்திரங்களாவன.

| | | | |
|---|---|---|---|
| 01. | ஓம் | சுமுகாய | நம: |
| 02. | ஓம் | ஏகதந்தாய | நம: |
| 03. | ஓம் | கபிலாய | நம: |
| 04. | ஓம் | கஜகர்ணகாய | நம: |
| 05. | ஓம் | லம்போதராய | நம: |
| 06. | ஓம் | விகடாய | நம: |
| 07. | ஓம் | விக்நராஜாய | நம: |
| 08. | ஓம் | விநாயகாய | நம: |
| 09. | ஓம் | தூமகேதவே | நம: |
| 10. | ஓம் | கணாத்யக்ஷாய | நம: |
| 11. | ஓம் | பாலச்சந்திராய | நம: |
| 12. | ஓம் | வக்ர துண்டாய | நம: |
| 13. | ஓம் | சூர்ப்பகர்ணாய | நம: |
| 14. | ஓம் | ஹேரம்பாய | நம: |
| 15. | ஓம் | ஸ்கந்த பூர்வஜாய | நம: |
| 16. | ஓம் | மகாகணாதிபதயே | நம: |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் சோடச நாமங்களை ஓதி நானாவித பத்திர புஷ்பமிட்டு தூபம் ஆக்ராபயாமி, தீபம் தர்சயாமி, என்று சொல்லி, தூப தீபம் காண்பித்து தக்ஷிணை தாம்பூலம் நைவேத்தியம் வைத்து தீபாராதனையான பிறகு ஸ்ரீ கேதாரீஸ்வரரை ஆவாகனஞ் செய்ய வேண்டியது அதாவது அம்மியையும் குழவியையும் அலங்கரித்து அம்மியின் மேல் குழவியை நிறுத்தி குங்குமம், கந்தம் முதலிய பரிமள திரவியங்களை அணிவித்து பருத்தி மாலையிட்டு, புஷ்பஞ்சார்த்தி அதனெதிரில் கலசம் நிறுத்தி அதற்கும் பருத்தி மாலை, புஷ்பஞ்சார்த்தி நோன்பு விரதமனுஷ்டிப்பவரை அங்கே அமரச் செய்து கேதாரீஸ்வரரை மனதிலே தியானம் செய்து கொள்ளச் சொல்லி காசி கங்கா தீர்த்த திருமஞ்சனமாடியது போலும் பட்டு பீதாம்பரம் ஆபரணாதிகளிலலங்கரித்தது போலும் மனதில் ஸங்கல்யம் செய்து கொள்ளச் சொல்லி வில்வம் தும்பை, கொன்றையாகிய மலர்களால் ஈஸ்வரரைக் கீழ்க்கண்ட மந்திரங்களைச் சொல்லி அர்ச்சனை செய்விக்க வேண்டும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஓம் | சிவாய | நம: | ஓம் | கைலாசவாசாய | நம: |
| ஓம் | கேசவாய | நம: | ஓம் | திரிசூலாய | நம: |
| ஓம் | ருத்ராய | நம: | ஓம் | மழுவேந்திராய | நம: |
| ஓம் | சங்கராய | நம: | ஓம் | மானந்திராய | நம: |
| ஓம் | நீலகண்டாய | நம: | ஓம் | சிவாய | நம: |
| ஓம் | நாராயணாய | நம: | ஓம் | சதாசிவாய | நம: |
| ஓம் | க்ருஷ்ணாய | நம: | ஓம் | அச்யுதாய | நம: |
| ஓம் | பத்மநாபாய | நம: | ஓம் | நிர்மலயா | நம: |
| ஓம் | கங்காதராய | நம: | ஓம் | அருபரூபாய | நம: |
| ஓம் | ஆனந்த ரூபாய | நம: | ஓம் | சாந்தருத்ராய | நம: |
| ஓம் | கோவிந்தாய | நம: | ஓம் | மார்க்கண்டாய | நம: |
| ஓம் | சூலபாணயே | நம: | ஓம் | திரிபுரதஹனாய | நம: |
| ஓம் | ஈசான்யாய | நம: | ஓம் | தாமோதராய | நம: |
| ஓம் | சிவ பூஜாய | நம: | ஓம் | பார்வதீ பிராணேசாய | நம: |
| ஓம் | காலகண்டாய | நம: | ஓம் | சற்குருவே | நம: |
| ஓம் | கபாலமூர்த்தியே | நம: | ஓம் | நந்திகேஸ்வராய | நம: |
| ஓம் | பரமகுருவே | நம: | ஓம் | கேதாரீஸ்வராய | நம: |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று அர்ச்சனை செய்வித்து அவர்கள் கையில் புஷ்பம் அக்ஷதை கொடுத்து மும்முறை ப்ரதக்ஷிணம் செய்வித்து கையிலுள்ள புஷ்ப அக்ஷதையை ஸ்வாமியின் மேல் போடச் செய்த தூப தீபங்காட்டி நைவேத்தியம் தாம்பூலம் சமர்ப்பித்து கற்பூர தீபராதனை காண்பித்து அவர்களுக்கு நோன்புக் கயிறும் புஷ்பம் அக்ஷதையும் கொடுத்து ஆசீர்வாதம் செய்யவும். அவர்கள் அக்ஷதையை சிரசின்மேல் போட்டுக் கொண்டு நோன்புக் கயிற்றைக் கட்டிக்கொள்ள வேண்டும்.

## நூல்

ஆதிகாலத்தில் ஸ்ரீ கைலாயத்திலே நவரத்தினங்களினால் இழைத்த சிங்காசனத்தின் மீது பரமேஸ்வரரும் பார்வதி தேவியும் கொலுவீற்றிருக்கையில் பிரம்மா, விஷ்ணு, தேவேந்திரன் முதலான முப்பத்துமுக்கோடி தேவர்கள் நாற்பத்து ஒண்ணாயிரம், ரிஷிகள், அஷ்ட வஸுக்கள், கின்னரர், கிம்புருடர் கருடகந்தர்வர், சித்த வித்யாதரர், ஜனகஜனனாதரி, ஸனத்குமாரர், தும்புருநாரதர் மற்றுமுண்டான தேவரிஷிகளும் பிரதி தினம் வந்து பரமசிவனையும் பார்வதி தேவியையும் பிரதக்ஷிண நமஸ்காரம் செய்து கொண்டு போவார்கள். இப்படியிருக்க ஒரு நாள் ஸமஸ்த தேவர்களும், ரிக்ஷிகளும் வந்து ஈஸ்வரனையும், ஈஸ்வரியையும் பிரதக்ஷிண நமஸ்காரம் தோத்திரம் செய்து விடை பெற்றுக் கொண்டு தங்கள் எதாஸ்தானங்களுக்கு போகின்ற சமயத்தில் பிருங்கியென்கின்ற ரிஷி ஒருவர் மாத்திரம் அம்மனைப் புறம்பாகத்தள்ளி ஈஸ்வரரை மாத்திரம் பிரதக்ஷண நமஸ்காரம் செய்து ஆனந்தக் கூத்தாடினார். அப்பொழுது பார்வதியம்மனுக்கு மஹா கோபமுண்டாகிய பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், தேவேந்திரன் முதலான முப்பத்து முக்கோடி தேவர்களும், நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும், கின்னரர், கிம்புருடர், கருடகாந்தவர், சித்த வித்யாதரர், ஜனகஜனாதரர் ஜனத்குமாரர், தும்புருநாரதர், கௌதமர், அகஸ்தியர் மற்றுமுண்டான தேவர்களும் வந்து ஈஸ்வரனையும் நம்மையும் கண்டு வணங்கிப் போகின்றனர். இந்த பிருங்கி மஹரிஷி நம்மை புறம்பாகத்தள்ளி ஈஸ்வரரை மாத்திரம் நமஸ்கரித்து நின்று விட்டானே என்று கோபத்துடனே பரமேஸ்வரி கேட்கப் பரமேஸ்வரன் சொல்லுகிறார். "பர்வதராஜ குமாரியே பிருங்கிரிஷி பாக்கியத்தை கோரினவனல்ல. மோக்ஷத்தை கோரினவனான படியால் எம்மை மாத்திரம் பிரதக்ஷிண நமஸ்காரம் செய்தான்." என்று சொல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரமேஸ்வரி, பிருங்கி ரிஷியைப் பார்த்து ஓ! பிருங்கி ரிஷியே உன் தேகத்திலே இருக்கிற இரத்த மாமிசம் நம்முடைய கூறாச்சுதே! அவைகளை நீ கொடுத்து விடு என்று சொல்ல அப்பொழுது பிருங்கிரிஷி தன் சரீரத்திலிருந்து இரத்த மாமிசத்தை அன்னை உதறி விட, பின்பு தன்னுடைய கூறாகிய இரத்த மாமிசத்தை, எடுத்துக்கொள்ள பிறகு பிருங்கி மஹரிஷி நிற்க முடியாமல், அசக்தனாயிருப்பதைப் பார்த்த பரமேஸ்வரர் "ஏ பிருங்கி மஹரிஷியே ஏன் அசக்தனானாய்" என்று கேட்க பிருங்கி பரமனை வணங்கி "பரமேஸ்வரா! அம்பிகையை நீக்கி தங்களை மட்டும் வணங்கியதால் அம்பிகை கோபித்து அடியேனுக்கு அளித்த தண்டனை இது" என்று கூற பரமேஸ்வரன் மனமிரங்கி ஒரு தண்டைக்கொடுக்க பிருங்கி மஹரிஷி தண்டை ஊன்றிக்கொண்டு மறுபடியும் பரமேஸ்வரரை நமஸ்கரித்து விட்டு ஆச்சிரமத்திற்கு எழுந்தருளினார். பிறகு பரமேஸ்வரி பரமேஸ்வரரைப் பார்த்து "நீ என்னை உபேக்ஷை செய்யலாமோ? இனி எனக்கு காரியமென்னவென்று கைலாயத்தை விட்டு பூலோகத்தில் வால்மீகி மஹரிஷி சஞ்சரிக்க நின்ற பூங்காவனத்தில் ஒரு விருக்ஷத்தின் அடியில் எழுந்தருளியிருந்தாள்.

அத்திசையில் பன்னிரெண்டு ஆண்டு மழையின்றி விருக்ஷங்கள், செடிகள் உலந்து வாடியிருக்க அவைகளெல்லாம் துளிர்த்துத் தழைத்து புஷ்பித்துக் காய்த்து பழுத்து இன்னும் அனேக பூச்செடிகளெல்லாம் மல்லிகை, முல்லை, கோங்கு, இருவாக்ஷீ, மந்தாரை, பாரிஜாதம், சண்பகம், சிறுமுல்லை, புன்னை, பாதிரி, வில்வம், பத்திரி, துளபம் மற்றுமுண்டான சகல ஜாதி புஷ்பங்கள் விஸ்தாரமாய்ப் புஷ்பித்து பரிமளித்து சுற்றிலும் நாலு யோசனை விஸ்தீரணம் பரிமளம் வீசினது. அந்த சமயத்தில் வால்மீகி மஹரிஷி தம் பூங்காவனத்தைப் பார்த்து அதிசயப்பட்டு பன்னிரெண்டு வருஷம் மழையில்லாமல் உலந்திருந்த விருக்ஷங்களெல்லாம் இப்பொழுது துளிர்த்துப் புஷ்பித்து காய்த்துப் பழுத்திருக்கின்ற ஆச்சரியம் என்னவோ தெரியவில்லையென்று மனதில் நினைத்துக் கொண்டு பூங்காவனத்திற்கு வந்தார்.

வந்தவர் சகல புவன கர்த்தாவாகிய பரமேஸ்வரன், பரமேஸ்வரி, பிரம்மா, விஷ்ணு வந்திருக்கிறார்களோ, அவர்களைக் காணவேண்டுமென்று அந்த வனமெல்லாம் சுற்றி ஆராய்ந்து பார்க்கையில் ஸ்ரீ பார்வதி தேவி வில்வ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருக்ஷத்தின் அடியில் எழுந்தருளியிருக்கக் கண்டு "மூவருக்கு முதன்மையான தாயே! முப்பத்து முக்கோடி தேவர்களுக்கும் நாற்பத்தெண்ணாயிர முனிவர்களுக்கும் ஒப்பற்ற தெய்வமாய் நின்ற பராசக்தியான ஈஸ்வரியே! இந்த பூங்காவனத்திலே எனக்கு காட்சி கொடுக்கக் கைலாயத்தை விட்டு பூலோகத்திற்கு நீ எழுந்தருளின தென்னவோ என்று வால்மீகி முனிவர் கேட்க பார்வதி தேவியார் "வால்மீகி முனிவரே ஸ்ரீ கைலாயத்திலே பரமேஸ்வரரும் நாமும் ஒரு நவரத்தின சிம்மாசனத்தில் வீற்றிருக்கையில் பிரம்மா, விஷ்ணு, தேவேந்திரன் முதலான தேவர்களும் மற்றுமுண்டான மஹரிஷிகளும் வந்து இருவரையும் நமஸ்கரித்துப் போனார்கள். பிருங்கி முனிவர் சுவாமியை மாத்திரம் நமஸ்கரித்து என்னைப் புறம்பாகத்தள்ளினான். அப்பொழுது இவனா நம்மைப் புறம்பாகத் தள்ளுகிறவனென்று கோபத்துடன் என் கூறான இரத்த மாமிசத்தை வாங்கிக் கொண்டேன். அப்பொழுது பரமேஸ்வரர் அவனுக்கு ஒரு தண்டு கொடுத்தார். இப்படி செய்யலாமோ என்று கேட்டதற்கு அவர் மறுமொழி சொல்லவில்லை. ஆகையால் நமக்குக் கோபம் பிறந்து பூலோகத்திற்கு வருகிற பொழுது இந்தப் பூங்காவனத்தைக் கண்டு இங்கே தங்கினோம்" என்று பார்வதியம்மையார் வால்மீகருக்கு உரைக்க அவரும் அம்பிகையைத் தன் ஆச்சிரமத்திற்கு எழுந்தருளும்படி வேண்ட அம்பிகையும் அவரிஷ்டப்படியே எழுந்தருள முனிவர் அம்மனிதருக்கு ஒரு ஆச்சிரமும் ஒரு நவரத்தின சிம்மாசனமும் உண்டுபண்ணி அந்த சிம்மாசனத்தின் மீது எழுந்தருளின பின் பரமேஸ்வரி வால்மீகி முனிவரைப் பார்த்து! ஓ தபசியே இந்த பூலோகத்தில் நான் ஒரு விரதம் அனுஷ்டிக்க வேண்டும். நூதனமும் மேலான தூய்மையான விரதம் ஒன்றிருக்குமாயின் அதை எனக்குச் சொல்ல வேண்டும். என்று கேட்க வால்மீகி முனிவர் தொழுது "தாயே லோக மாதாவே! அபிராமியே! திரிபுரசம்மாரி! சிவகாமி! கௌரி கைலாஸ வாசகி! விபூதி, ருத்ராக்ஷி! கிருபாசமுத்ரி! கிருபாநந்தி! தேவஸ்வரூபி உம்முடைய சன்னிதானத்தில் அடியேன் ஒரு விண்ணப்பம் செய்கிறேன். கோபமில்லாமல் கேட்டு திருவுள்ளம் பற்ற வேண்டும். என்று சொல்ல அதென்னவென்ற அம்பிகை கேட்க! ஜெகத்ரக்ஷகியே! இந்தப் பூலோகத்தில் ஒருவருக்கும் தெரியாத ஒரு விரதமுண்டு. அந்த விரதத்திற்கு கேதாரேச்வரர் நோன்பென்று பெயர். அதை இதுவரையில் யாரும் அனுஷ்டிக்கவில்லை. நீர் இந்த விரதத்தை அனுஷ்டித்தால் இஷ்ட சித்தியாகும்" என்று சொன்னார். அதை பரமேஸ்வரி கேட்டு அந்த விரதம் எக்காலத்தில் எவ்விதமாக அனுஷ்டிக்க வேண்டும். என்பதை விபரமாகச் சொல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்று கேட்க வால்மீகி சொல்லுகிறார். புரட்டாதி மாதம் சுக்கில பட்ச தசமி தொடங்கி ஐப்பசி மாதம் கிருஷ்ண பட்சம் தீபாவளி அமாவாசை வரைக்கும் இருபத்தொரு நாள் பிரதி தினம் ஸ்நானம் செய்து சுத்த வஸ்த்ரமணிந்து ஆலவிருட்க்ஷத்தின் கீழ் சிவலிங்கப் பிரதிக்ஷ்டை செய்து அபிஷேகம் செய்து விபூதி சந்தனாக்ஷதை புஷ்பஞ்சாத்தி வெல்ல உருண்டை. சந்தன உருண்டை, மஞ்சளுருண்டை, அதிரசம், வாழைப்பழம், தேங்காய், பாக்கு, வெற்றிலை இவைகளை வகைக்கு ஒன்றாக வைத்து வில்வார்ச்சனை தூப தீபம் நைவேத்தியம் செய்து நமஸ்கரித்து இருபத்தோரிழையிலே ஒரு கயிறு முறுக்கி அதைத் தினம் தினம் ஒரு முடியாக இருபத்தொரு நாள் முடிந்து தினமும் உபவாசமிருந்து நைவேத்தியம் செய்து அதிரசத்தையுண்டு இருபத்தொரு நாளும் கிரமமாக இவ்விரதத்தை அனுஷ்டித்தால் இருபத்தோராம் நாள் தீபாவளி அமாவாசை தினம் பரமன் ரிஷப வாகன புருஷராய் காட்சியளித்து கேட்ட வரத்தையும் கொடுப்பார். வால்மீகி சொல்லக் கேட்டு அம்பிகை மகிழ்ந்து அதே பிரகாரம் ஐப்பசி மாதம் சுக்கிலபட்சம் தசமி முதல் அமரபட்சம் சதுர்த்தி அமாவாசை வரை இருபத்தொரு நாளும் வால்மீகி தெரிவித்தபடி நியம நிஷ்டையுடன் உபவாசமிருந்து விரதம் அனுஷ்டிக்க பரமேஸ்வரியின் விரதத்திற்கு மகிழ்ந்து பரமன் தேவ கணங்கள் புடை சூழ காட்சியளித்து இடப்பாகத்தைப் பரமேஸ்வரிக்குக் கொடுத்து அர்த்தநாரீஸ்வரராக கைலாயத்திற்கு எழுந்தருளி வீற்றிருந்தார்.

இவ்விரதத்தின் மேன்மையைக் கண்ட தேவர்கள், ரிஷிகள் முதலானவர்களும் அன்று முதல் இந்த விரதத்தை அனுட்டித்து வரலாயினர். தேவ கன்னியர்கள் இவ்விரதத்தை கங்கைக் கரையில் அனுஷ்டிப்பதை பூலோகத்திலே ஓர் அரசனுடைய குமாரத்திகளான புண்ணியவதி, பாக்கியவதி என்னும் இருபெண்கள் தன் தகப்பன் நாடு நகரிழந்ததன் பயனாக விவாகமாகாத கன்னியர் கங்கைக் கரை வர அச்சமயம் தேவகன்னியரியற்றும் பூஜையைக் கண்டு அதன் விபரமறிந்து தேவ மங்கையர் கொடுத்த நோன்புக் கயிற்றையும் பெற்று வீட்டிற்குப்போக வீடு அடையாளம் தெரியாமல் குச்சு வீடு மாட மாளிகையாக மாறி அஷ்ட ஐஸ்வரியம் பெருகியிருக்கும் புதுமையைக் கண்டு ஆச்சரியமடைந்து நிற்கையில் தகப்பன் தனது குமாரத்திகளை அழைத்துச் சென்று சுகமாக வாழ்ந்து வரும் நாளில் இராஜகிரி அரசன் புண்ணியவதியையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளகாபுரியரசன் பாக்கியவதியையும், மணந்து தத்தம் ஊர்களுக்குச் சென்று புத்திர பாக்கியத்துடன் வாழ்த்து வந்தனர்.

இங்ஙனம் வாழ்ந்து வரும் நாளில் பாக்கியவதி தன் கையில் அணிந்திருந்த நோன்புக் கயிற்றை அவரை பந்தலின் மேல் போட்டு மறந்து போனதன் விளைவாக பாக்கியவதியின் நாட்டை வேற்றரசன் கைப்பற்றிக் கொண்டு இவர்களை ஊரை விட்டுத் துரத்தி விட்டான். பாக்கியவதியும் அவள் புருஷனும் நித்திய தரித்திரர்களாகி உண்ண உணவும் உடுக்க உடையும் இன்றி இருக்கையில், நோன்புக்கயிறு அவரைப் பந்தலிலிருந்ததால் அவரைக்காய் மிகுதியாகக் காய்க பாக்கியவதி அந்த அவரைக்காய்களை சமைத்து புசித்து ஜீவித்து வந்தனர்.

இப்படியிருக்கையில் ஒரு நாள் பாக்கியவதி தன் குமாரரை அழைத்து "அப்பா நாம் நாடு நகரமிழந்து உண்ண உணவுக்கும் உடுக்க ஆடைக்கும் கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கின்றோம். ஆகையால் நீ இராஜகிரிக்குப் போய் உன் பெரிய தாயான புண்ணியவதி சகல ஐஸ்வரியத்துடன் வாழ்வதால் அவர்களிடத்தில் நம்முடைய தற்கால நிர்வாகத்தை தெரிவித்துக் கொஞ்சம் திரவியம் கேட்டு, வாங்கிக் கொண்டு வா" என்று சொல்லி கட்டமுது கட்டிக் கொடுத்து வழியனுப்பினாள். அந்தப்பிள்ளை இராஜகிரிக்குப் போய் தன் பெரிய தாயாரைக் கண்டு தங்கள் வர்த்தமானங்களைச் சொல்ல தாய் வருத்தப்பட்டு பிள்ளையை நாலுநாள் வைத்திருந்து சில வஸ்திரங்களும் ஆபரணமும் திரவிய முடிப்பும் கட்டமுதும் கட்டிக் கொடுத்து வழியனுப்பினாள். அதை வாங்கிக் கொண்டு சிலதூரம் வந்து ஒரு குளக்கரையில் மூட்டையை வைத்து விட்டு கட்டமுது சாப்பிடுகின்ற வேளையில் மூட்டையை கருடன் எடுத்துக் கொண்டு போய் விட்டது. அது கண்ட சிறுவன் மனஸ்தாபப்பட்டு மீண்டும் பெரிய தாயாரிடம் சென்று நடந்ததைச் சொல்ல அவள் விசனப்பட்டு மறுபடியும் சில திரவியம் கட்டிக் கொடுத்து அனுப்பினாள்.

அதையெடுத்துக் கொண்டு வரும்பொழுது வழியிலே திருடன் வந்து சிறுவனிடமிருந்து மூட்டையைப் பறித்துக்கொண்டு போய் விட சிறுவன் துக்கப்பட்டு கொண்டே மறுபடியும் பெரிய தாயிடம் சென்று 'அம்மா நாங்கள் செய்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவமோ என்னவோ தெரியவில்லை இரண்டாவதாகக் கொடுத்த திரவியங்களையும் திருடன் பறித்துக் கொண்டு போய் விட்டான்.' என்று சொல்லி வருந்தும் சிறுவனைத் தேற்றி குழந்தாய் உன் தாயான கேதாரேச்வரர் நோன்பு விரதத்தை அனுஷ்டித்து வருகின்றாளா? என்று கேட்க அந்த நோன்பு விரதத்தை அனுஷ்டிப்பதில்லை. முன்னே நோன்புக் கயிற்றை அவரைப்பந்தலின் மேல் போட்டு விட்டாள் அன்று முதல் இவ்வித கஸ்டங்களெல்லாம் வந்தது என்று தெரிகிறது என்று கூறினான்.

இதைக்கேட்ட புண்ணியவதி மிகவும் மனம் வருந்தி ஐப்பசி மாதம் வரும் தனிலும் சகோதரி குமாரனை தன்னிடமே நிறுத்திக் கொண்டு ஐப்பசி மாதம் தான் நோற்கிற நோன்போடு கூட பாக்கியவதிக்கும் ஒரு பங்கு நோன்பு வைத்து நோற்று அந்த நோன்புக்கயிறு பலகாரமும் பாக்கு, வெற்றிலை, மஞ்சளும் இன்னும் சில ஆடை ஆபரணங்களும் திரவியமும் கொடுத்து காவலராக சில சேவகரையும் கூட்டி இனிமேலாவது இந்த நோன்பை விடாமல் நோற்கச் சொல்லி சில புத்திமதிகளையும் சொல்லி அனுப்பினாள்.

பெரிய தாயாரிடம் விடை பெற்று வரும் போது முன்னே வழியில் பறித்துப் போன திருடன் திரவியத்தை கொடுத்துச் சென்றான். கருடன் மூட்டையை கொண்டு வந்து போட்டு விட்டு 'உன் தாய் கேதாரேச்வர விரதத்தை விட்டு விட்டதினாலேயே இவ்விதம் வந்தது இனிமேல் பயபக்தியுடன் நோன்பு நோற்கச் சொல்' என்று சாந்தமுண்டாக்கிக்கூற சிறுவன் ஆச்சரியப்பட்டு பயபக்தியோடும் சந்தோசத்தோடும் தன் வீட்டிற்கு வந்து தாயின் கையில் பெரிய தாயாரால் கொடுக்கப்பட்ட நோன்புக்கயிற்றையும் பலகாரத்தையும் முன்னே கொடுத்த பிறதனத்தையும் கொடுத்து நடந்த விஸ்தாரங்களையும் சொல்லக் கேட்ட பாக்கியவதி 'மெய்தான் என் ஆங்காரத்தினால் கெட்டேன்' என்று சொல்லி ஸ்நானஞ்செய்து கேதாரேச்வரரை நமஸ்காரஞ்செய்து கயிற்றை வாங்கி கட்டிக்கொண்டாள். அந்தநாளிகைக்கே தங்கள் பட்டணத்தை பிடுங்கிக் கொண்ட அரசன் பட்டணத்தையும், யானை, சேனை, பரிவாரங்களையும் பகுதியையும் கொடுத்து விட்டு போய் விட்டான்.

பிறகு முன் போலவே பாக்கியவதிக்கு அஷ்டஐஸ்வரியம் உண்டாகவே தான் முன் நோற்கத் தவறின படியினாலே கேதாரேச்வரர் வறுமையைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தாரென்று அறிந்து அன்று முதல் நோன்பைக் கைப்பற்றியதால் சகல சம்பந்தும் பெருகி சுகபோகத்தோடு வாழ்ந்து வந்தாள்.

ஆதலால் இப்பூலோகத்தில் கௌரி விரதத்தை மனப்பூர்வமாக செய்பவர்களுக்கு பரமேஸ்வரன் சகல செல்வங்களையும் அனுக்கிரஹிப்பார். அன்பர்கள் இந்த நோன்பை பக்தி நயத்தோடு செய்து சுக க்ஷேமங்களை அடைந்து மேன்மையாக வாழ்வார்களாக.

## இந்த விரதத்தை அனுஷ்டிப்போரின் தகமை.

ஐந்து மாதத்திற்கும் மேல் கர்ப்பிணியாக இல்லாத பெண்களும் மாதவிலக்கு நீங்கப் பெற்ற பெண்களும் இருபத்தொரு நாட்களும் விரதமிருக்கலாம். மற்றப் பெண்கள் மாதவிலக்கு அம்முறை வந்தபின் அமாவாசை திதிக்கு முன்னுள்ள ஒன்பது நாட்களோ ஏழு நாட்களோ மூன்று நாட்களோ அல்லது அன்றாவதோ இவ்விரதத்தை அனுஷ்டித்து இருபத்தொரு முடிச்சிப்பட்ட கயிற்றை இடது புயத்திலோ அல்லது இடது மணிக்கட்டிலோ கட்டிக்கொள்ளலாம்.

ஆண்கள் இவ்விரதத்தைப் பின்பற்றுவது தவறாகாது.

இக் கேதாரஈஸ்வர விரதத்தை மேற்சொன்னபடி வீட்டிலும் அனுட்டிக்கலாம்.

## இவ்விரதப் பலன்கள்.

தம்பதிகளாக க்ஷேமமாக இருத்தலும் பிணி நீங்கலும் வறுமை நீங்கி செல்வம் பெறுவதற்கும் கன்னியர்களுக்கு திருமணம் விரைவில் நடைபெறவும் சிவனருளை பரிபூரணமாக பெறுவதற்குமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரி காப்பின்போது படிப்பவை

முன் நின்று செய்யுள் முறையாய் புனைதற்கு
என் நின்ற ருள்க செய் எலியூர்தி – மன்னவா
சொற்குற்றம் ஏனைப்பொருள் சேர் தொடைக்குற்றம்
எக்குற்றம் வாராமலோகார்
காப்பெடுக்க வந்தேனே கௌரி அம்மாள் தாயாளே
காத்தென்னை தேற்றிடுவாய் காளி மகா தேவியாரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோல் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிருக்கு உயிராக
என்றும் இருந்தே எனை காத்து வந்திடுவாய்
காடும் கடந்து வந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளி மகா தேவியரே காப்பெனக்கு தந்திடுவாய்
சூலம் கைக்கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மா காளித்தாயே
கொடிய மகிஷா சுரனை கூறு முன்னே போட்டவளே
அசுரம் குலம்யாவும் அழிக்கும் சுடர் கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீ இருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீ இருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மா நீ நோன்பு இருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரி நீ நோன்பு இருந்தாய்
ஐங்கரனை பெற்றவளே அன்று நீ நோன்பு இருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உனை அணைத்தே அருள் மாரி பொழிந்தானே
வகையாற்று படலமிதை வழிவழியாய் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிவிடு
காப்பை புனைந்துவிடு கால பயம் ஓட்டிவிடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழை காப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நற்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நாம் விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்கு கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்கு திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடை தலைவியரே பராசக்தி தாயவளே
ஏட்டுடைத் தேவியரே எல்லாம் மிகு வல்லமையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடன் பாருமம்மா
பால் பழங்கள் வெற்றிலைகள் பல வகை திரவியங்க
நானுனக்குத் தாரேனம்மா நயந்தென்னை காருமம்மா
காளிமகா தேவியரே காசினுக்கும் வந்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
என் தாயே வாழ்ந்திடுவோம் எல்லாம் உனதருளே
காசினியில் வேற்றுமையை கணப்பொழுதில் மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏந்திழையே தாயாரே
காப்பெனக்கு போட்டுவிட்டாள் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்து வரும்
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோருக்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோருக்கு நல்லதெல்லாம் பெருகிவிடும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாள்கள் கோள் இவையெல்லாம் நலமுடனே இணைந்து வரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக் கொழுந்தே கௌரி அம்மா
காப்பினைக் கட்டிவிட்டு கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிக விட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதெல்லாம் நறும் காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டு போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுது எழுந்து காப்பதில் விழித்திடுவேன்
ஞானக் கொழுஞ் சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையில் பூண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் ஏரி போல் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமுகு காப்பதனை
இருபத்தொரு நாள் வரையில் இசையும் விரதமொடு
பக்தி மனதோடு பரவி அணிவோருக்கு
சித்தி எல்லாம் தருவாள் சீர்பெருகு கௌரி அவள்
முத்திக்கு வழியுண்டு முக்கால முணர்வுண்டு
இச்சகத்தில் உள்ளோர்கள் எல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவார்
சொற்சத்தி பொருட்சக்தி துலக்கமொடு வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாய் கௌரியவள்
கௌரி காப்பதனை காலம் தவறாமல்
முறையாய் அணிந்து வர முன்வினைகள் நீங்கி விட
ஞானம் கிளர்ந்து வர நல்லருளைச் செய்திடுவாய்
தெவிட்டாத தீங்கனியே தேவிபராசக்தியம்மா
காளியாய் வந்தமர்ந்த கௌரியம்மா காப்பருள்வாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசௌச விளக்கங்கள்.

*"சம்ஸ்கார பராமரிசம் உண்மை யானும்*
*அதன் இன்மை கூறப்பட லானும்"*

(பிரம்ம சூத்திரம் 10)

*"புறத்தூய்மை நீரான் அமையும்; அகத்தூய்மை*
*வாய்மையால் காணப்படும்"*

(குற 298)

முனிமொழி என ஔவையார் பாராட்டிய பிரம்மசூத்திரம் சம்ஸ்காரங்கள் மூலமே ஒருவன் ஞானம் பெறத்தக்க பக்குவம் பெறுவான் என்பதை வலியுறுத்துகிறது. தரும சாத்திரங்களிலே நாற்பது சம்ஸ்காரங்கள் பேசப்படுகின்றன. சைவ ஆகமங்கள் அவற்றுள் பதினாறை வலியுறுத்தும். (சம்ஸ் + காரம் = தூய்மைப்படுத்தும் கிரியை)

அவை ஏன்? ஆன்மீக வாழ்வுக்கு உயிர்நாடியான அவை இன்றைய லௌகிகப் போக்குக்கு வேண்டியவை தானா? இவ்வித ஐயவினாக்கள் சைவ மக்களிடையே எழுகின்றன. முக்கியமாக மரண வீட்டுக்குச் சென்று வருவோர் தூய்மை செய்யப்படுவது அவசியம் என்று பழமை பேணுவோர் கருதுகிறார்கள். 'இது விஞ்ஞான அடிப்படையில் தோன்றியது' என்று விளக்கம் அளித்துத் திருப்தியடைகிறார்கள். சுகாதார பரமான தூய்மைக்கும் கிரியா பரமான தூய்மைக்கும் வேறுபாடு உண்டு என்பதை அவர்கள் உணர்வதில்லை. இருவேறு திசையில் போகும் நாகரிகங்களின் மோதுதலில் சிக்கித் தவிப்பவர்களின் சந்தேகங்களைப் போக்கி 'துவந்துவங்கள் தூய்மை செய்வதே' இத்தொகுப்பின் நோக்கம்.

சைவசமயிகளிடையே கோவிலுக்குப் போதல் விவாகம் போன்ற நற்கருமங்களின்போது, 'எனக்கு ஆசூசம்' என்ற பேச்சு இடம்பெறும். அதை எதிர்த்தும், விஞ்ஞான விளக்கம் கொடுத்து ஆதரித்தும் பேசுவோர். அதிகம் ஆசௌசம் என்ற சொல் திரிந்து பேச்சு வழக்கில் ஆசூசம் என்று ஆயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சுசி' என்றால் சுத்தம் சௌசம் சுத்தம் உடையது. அசுசி = அழுக்கு ஆசௌசம் (கிரியாபரமான) சுத்தம் இன்மை. ஆன்ம ஈடேற்றத்தின் பொருட்டுக் கிரியைகளைச் செய்கிறவனுக்கு, அவைகளைச் செய்ய அதிகாரம் இல்லாமற் செய்யும் ஓர் அசுத்தி ஆசௌசம் எனப்படும். தீட்டு, தொடக்கு என்ற சொற்களும் மக்கள் பேச்சில் வரும் துடக்கு நீங்கிய பின்னரே நற்காரியங்கள் செய்யலாம். இல்லாவிட்டால், உளரீதியான ஓர் அருவருப்பு உள்ளே இருந்து கொண்டே இருக்கும். மனம் ஆன்மீக நற்கருமத்தில் படியாது.

அசுத்தியை (அழுக்கை)ப் போக்க 1) காலம் 2) ஸ்நானம் (நீராடல்) இரண்டும் ஆக மூன்று வழிகள் இருக்கின்றன.

ஊரில் ஒரு இறப்பு நிகழ்கிறது. அழுகை, மேள ஒலி, ஒலிபெருக்கி மூலம் மரணம் பற்றி ஊரார் அறிகின்றனர். கோவிற் பூசை நிறுத்தப்படும். நற்காரியங்கள் நடைபெறா. ஊர்த்துடக்கு பிரேதம் ஊருக்குள் இருக்கும் காலம் வரை அவ்வூர் மக்களைப் பீடிக்கும். பிரேதம் ஊரிலிருந்து அகற்றப்பட்டதும் துடக்கு நீங்கிவிடும்.

இறப்பு நிகழ்ந்த வீட்டுக்குச் சென்று, மரணச்சடங்குகளில் பங்கு பற்றிய அயலவர், உறவினரின் ஆசௌசம் ஸ்நானத்தால் நீங்கும். இரத்த உரித்துக்காரர் (ஆண்வழி) ஆகிய துடக்குக்காப்போர் உறவு பற்றி, மனத்தில் துக்கம் நிலைத்திருக்கும். இறந்தோரை நினைத்து இடையில் அழுகை வரலாம். துன்பம் தோய்ந்த உள்ளத்துடன் ஆன்மீக முயற்சிகளில் ஈடுபட முடியாது. அதனால் ஒரு குறித்த கால எல்லை வைத்து அதன் முடிவில் நீராடி, ஆசௌசத்தை நீக்கலாம். இங்கு காலம், ஸ்நானம் ஆகிய இரண்டும் வேண்டியதாகிறது.

ஆசௌசம் பத்துவகையாக ஏற்படலாம் : 1) பிறப்பு, 2) இறப்பு 3) சுடுதல், 4) பிரேதத்துக்குப் பின்னே செல்லல். 5) காவுதல் 6) அழுதல் 7) ஆசௌசிகளிடம் சாப்பிடுதல், 8) கலத்தல். 9) குறித்த கால எல்லையில் தலைமயிரை அகற்றாமை, 10) இறந்தவருடைய உரிமைக்காரர். (மகன் அல்லது கொள்ளி வைத்தவர்). இறந்தவரது பிரேதத்தன்மையை நீக்கி விடும் கிரியை ஆகிய சபிண்டீகரணம் செய்யாமை. (மயிர் முழுவதையும் களைதல் ஆசௌச நீக்கத்தின் பொருட்டு இன்றும் பல கிராமங்களில் வழக்கம்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிறப்பு

ஒரு வீட்டில் குழந்தை பிறத்தல் தொடர்பாக உண்டாகும் துடக்கு நான்கு வகையானது : 1) கருச்சிதைவு நான்கு மாதத்துக்குள் நிகழ்தல் 2) 5 ஆம் 6 ஆம் மாதங்களில் நிகழ்தல் 3) 7 ஆம் 8 ஆம் 9 ஆம் மாதங்களில் நிகழ்தல் 4) பத்தாம் மாதத்தொடக்கத்தில் நிகழும் இயற்கையான பிறப்பு. முதலிரு நிகழ்ச்சிகளிலும் எத்தனை மாதச்சிசு வெளிப்பட்டதோ அத்தனை நாட்கள் துடக்கு. உதாரணம் 6ஆம் மாதத்தில் கருச் சிதைந்தால் 6 நாள் துடக்கு. அதன் பிறகு நிகழ்ந்தால், இயற்கையாகக் குழந்தை பிறக்கும்போது துடக்குக்காக்கும் நாள் அளவு, பிள்ளைப் பேற்றில் பெண் பிறந்தால் 40 நாளும், ஆண் பிறந்தால் 30 நாளும் பிதா மாதா இருவருக்கும் துடக்கு. முதல் ஆறு மாதத்துள் சிசு அழிதலில் தந்தை முழுகத் துடக்குப்போம். துடக்குக்காக்கும் உறவினர் (ஞாதிகள்) 5 ஆம் மாத நிகழ்விலிருந்து முழுகி ஆசௌசத்தைப் போக்கலாம். பூரணகருச் சிதைவிலும், பிள்ளை பிறந்தவுடன் இறந்தாலும், தந்தை 10 நாள் துடக்குக் காக்க வேண்டும். 10 நாட்களுள் குழந்தை இறந்தால், மரணத்துடக்குக் கொள்ளத் தேவையில்லை. இயற்கையான பிறப்பில் 30 நாள் துடக்குக் காப்பது வழக்கம். (தாய்க்கு 40 நாள் என்ற முறையில் குழந்தையைக் கோவிலுக்கு 40ம் நாள் கொண்டு போகும் வழக்கம் இருந்து வருகிறது.)

சைவக்குரு (ஆசாரிய அபிஷேகம் பெற்றவர்) ஆசௌச நிகழ்வில் உடன் சுத்தியாகிறார். தீட்சை பெற்ற சைவசமயத்தவருள் நியமங்களில் வழுவாது சந்தியாவந்தனம் செய்வோர் 25 நாளும், ஒழுங்காகக் கோயில் தொண்டு செய்வோர் 20 நாளும் துடக்குக்காக்க வேண்டும். பிரமசாரிக்குத் துடக்கில்லை என்பது குருகுலத்தில் வசித்து ஞான நூல்களைக் கற்றலில் காலம் கழிப்பவர்க்கே பொருந்தும். உறவினருடன் வசிக்கும் பிரமசாரி அர்ச்சகர் இவ்விதியில் அடைக்கலம் புகமுடியாது. மூன்றாம் தீட்சையாகிய நிர்வாணதீட்சை பெற்றுச் சிவபூசை தவறாது செய்கிறவருக்கு மூன்று நாள் துடக்கும் கோவில்களில் ஓதுவார்களாகப் பணிபுரிவோர் 15 நாளும், ஆடல், பாடல் வாத்திய வழிபாடு செய்வோர் 14 நாளும் காக்க வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறப்பு

மரண ஆசௌசமே பிரதானமாகப் பேணப்படுவது நம் நாட்டு வழக்கம் அதனால் இப்பகுதி விரிவாக எழுதப்படுகிறது. குழந்தை பிறந்து பெயர் இடுவதற்கு முன் ஒரு மாதத்தினுள் இறந்தால் உடன் சுத்தியாம். பல் முளைக்குமுன் (6 மாதத்துள்) ஆயின், ஒரு நாள் துடக்கு. 11ம் ஆண்டுக்குப் பின் முழுத் துடக்கு. பெண்மகவு - விவாகம் செய்யுமுன் இறந்தால் பெற்றோருக்கு 3 நாள் துடக்கு. விவாகம் நிச்சயித்த பெண் மணவிழாவுக்கு முன் இறந்தால் கணவனும் அவன் உறவினரும் 3 நாள் துடக்குக் காப்பர். பிற ஆத்மா சாந்திக் கிரியைகளும் கணவன் வீட்டாரே செய்யவேண்டும். ஒரு மாதத்தின் பின் இறக்கும் சிசுவைச் சுடலாம். அன்றி புதைக்கலாம். 11 வயதுக்குப் பின் சுடுவதே நல்லது.

ஆண் மரணித்தால் ஆண் வழியில் ஏழுதலை முறை வரை துடக்குக் காக்கவேண்டும். குரு சீட தொடர்பு பற்றி 3 நாள் காக்க. தாய்வழிப்பாட்டன் பாட்டி, மாமன், மாமி, மருமகன், மகள் வயிற்றுப்பேரன் ஆகியோருக்கு 3 அல்லது 6 நாள் துடக்கு. தானம், வேள்வி, விவாகம் போன்ற நற்கருமங்களுக்கு இடையிலும், போர் உள் நாட்டுக்குழப்பம் மலைச்சரிவு, மரம் விழுதல் பூகம்பம் போன்ற பெரும் ஆபத்துக்களின் மத்தியிலும், வரும் துடக்கு உடனே நீங்கும். ஒரு வரம் கேட்டு அநுட்டிக்கும் உபவாச விரதத்தின் இடையில் துடக்கு ஏற்பட்டால், தானம் அருச்சனை இரண்டையும் நீக்கி விரதத்தை அநுட்டிக்கலாம். விவாகம் செய்யும் மாப்பிள்ளை, கன்னியைத்தானம் செய்பவர், கோவில் திருவிழாவோ பிரதிஷ்டையோ செய்யும் ஆசாரியர், செய்விப்பவர் (எஜமானர்) துணைப்பணிகள் செய்வோர். ஆகியவர்களுக்கு உடன் சுத்தியாம். சிரார்த்தம், யாத்திரை ஆகிய புண்ணிய கருமங்களைச் செய்யும்போது துடக்குண்டானால் உடன் சுத்தியாம்.

## வீர மரணம்.

அரசசேவகர் போரில் இறந்தால் சுற்றத்தாருக்கு உடன்சுத்தி, அவ்விதம் இறந்தவர்களுக்கு அபரக்கிரியையும் உடன் செய்யலாம். (துர்மரணத்திற்போல, குறித்தகாலத்தின் பின்செய்ய வேண்டும். என்ற விதியில்லை)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துர் மரணம்.

இது இருவகை (1) புத்திபூர்வமானது (2) அபுத்திபூர்வமானது. முதல் வகையில் சாதாரண (மந்திரமின்றி) மரணக்கிரியை (சுடுதல்) செய்யலாம். பின்னர் உரியகாலத்தில் செய்யும்போது, மந்திரத்துடன் கிரியை செய்யலாம். இதில் சபிண்டருக்குத் துடக்கு இல்லை. ஸ + பிண்டர் = தென்புலத்தாருக்குப் பிண்டம் இடும் கடன் உள்ள உறவுமுறைக்குள் அடங்குவோர். தன்னையும் சேர்த்து ஏழுதலைமுறை (ஆண்வழியில்) பின்னர் ஆறுமாதம் அல்லது ஒரு வருடம் கழித்துக் கிரியை செய்யும்போது ஒருநாள் காக்கவேண்டும். (மூளைப் பிசகினால் தற்கொலை செய்தவருக்கு நீர்க்கடன் செய்து, துடக்குக் காக்கலாம் என்பர்). இரண்டாவது வகையான துர்மரணம் இடி, தீ, ஆற்றுப்பெருக்கு, விஷக்கடி போன்ற திடீர் விபத்துக்களால் நிகழ்வது. இதில் கிரியையும் ஆசௌசமும் கொள்ளலாம்.

## பொருள்கள் சுத்தி.

துடக்கு உடையவர் உபயோகித்த பொருள்கள் குற்றம் உடையன. அவர் துடக்கு முடியும்போது நீர்தெளித்தல், கழுவுதல் போன்றவற்றால் குற்றம் நீங்கும். துடக்கு ஆரம்பிக்குமுன் சில நற்கருமங்களுக்கு எனக் குறித்து எடுத்துவைத்த பொருள்களுக்குக் குற்றமில்லை (தானம், பூசை) முதலியவற்றுக்கு உபயோகிக்கலாம்.) பொன், தானியம், வெல்லம், உப்பு, பால், நெய் முதலியவற்றைத் துடக்கு வீட்டில் இருந்து பெறலாம்.

## கிராம ஆசௌசம்

ஓர் ஊரில் பிரேதம் இருக்கும் வரை சகலருக்கும் துடக்கு இருப்பதால் கோவிற்பூசை முதலியன செய்யக்கூடாது. சிவபூசை, அநுட்டானம், போன்றவையும் விலக்கப்பட்டுள்ளன. பிரேதம் கிராமத்தை விட்டு அகற்றப்பட்ட பின் பிராயச்சித்தம் செய்து கர்மானுட்டானங்களைச் செய்யலாம். இது சிற்றூர்களுக்குப் பொருந்தும். பல வீதிகளுள்ள பெரிய ஊர் ஆனால், தூரத்தில் பிரேதம் இருந்தால், ஓர் எல்லைக்கு அப்பால் வசிப்பவர்களுக்குத் துடக்கு இல்லை. எல்லை கணிக்கும் போது (பூசைக்குரிய) கைமணி அடிக்கும் ஓசை கேட்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூரம் அல்லது) 11 முழம் ஆகிய (விற்) கோல் (நில அளவு) 11 (சுமார் 55 யார்) கொண்ட தூரம் ஆசௌச எல்லையாக எடுத்துக் கொள்ளலாம். அடுத்த வீதியில் பிரேதம் இருந்தாலும் இந்தக்கணிப்பின்படி வரும் இடைவெளிக்குள் துடக்குக் காக்கலாம். அப்பால் இருந்தால் ஆசௌசம் இல்லை.

கோவிற் பிரதிஷ்டை முதலிய கிரியைகளுக்கு நடுவில் கிராமத்தில் ஒரு மரணம் நிகழ்ந்தால் இறந்த பிரேதத்தை மயானத்திற் சேர்த்த பின் தொடர்ந்து கிரியை செய்யலாம். பட்டணம், இராசதானி முதலிய பெருநகர்களில் துடக்கு இல்லை. பிரேதத்தைத் தொட்டவர் தூக்கியவர், பின்னே சென்றவர்கள் துடக்கு உடையர்.

துடக்கு நாட்கள் வைதிக முறையில் முத்தீ வளர்க்காதவர்களுக்கு இறந்த நாள்முதல் கணிக்கப்படல் வேண்டும். (சிவபூசையோடு தீ வேட்கும் குருமாருக்குத் தகனம் செய்த நாள் முதல், கணிக்குக) இரவில் பிறப்பு, இறப்பு நிகழ்ந்தால் அடுத்துச் சூரியன் உதிக்குமுன் உள்ள நாளே கொள்க. (மேலை நாட்டு முறையில், இரவு 12 மணிக்குப்பின் அடுத்த நாள் எனக் கொள்ளக்கூடாது.)

பிறப்புத் துடக்குக்கு இடையில் இறப்பவரின், இறப்புக் கணக்கின் பின்னரே துடக்கு கழியும். இறப்புத் துடக்குக்கு நடுவில் பிறப்பு வந்தால் மரணத்துடக்குடன் அது நீங்கும். ஒரு மரணத் துடக்கு முடியுமுன் மற்றொரு மரணம் வந்தால் பிந்திய துடக்கு முடிவிலேதான் இரண்டு துடக்கும் நீங்கும் முந்தியதற்குரிய கிரியைகளும் பிந்தியதன் முடிவிலேயே செய்ய வேண்டும்.

சபிண்டருள் ஒரு துடக்கு வந்த செய்தி தூர இடத்தில் நிகழ்ந்ததை ஒரு துடக்குக் கழியும் நாளில் கேட்டால் மேலும் இரண்டு நாள் துடக்குக் காக்க அச்செய்தி - உதாரணமாக, அந்நிய தேசத்தில் இறப்பு நிகழ்ந்த செய்தி - மூன்று மாதத்துள் கிடைத்தால் மூன்று இராத்திரி துடக்குக்காக்க ஒருவருஷத்துக்குள் கிடைத்தால் ஒரு நாள் காக்க. ஒருவர் இறந்த செய்தி துடக்கு எல்லைக்குள் கிடைத்தால் மீதி நாட்கள் மட்டும் கொள்க; உ + ம் அயல் நாட்டில் ஒருவர் இறந்த செய்தி சகோதரருக்கு 20 ஆம் நாள் கிடைத்தால் மீதி 10 ஆம் நாள் ஆசௌசம் காக்க. துடக்கு எல்லை கழிந்து ஒருவருடத்துள் பெற்றோரின் மரணத்தைக் கேள்விப்பட்டால் மகன் முழுத் துடக்கும் காலமும் காக்க வேண்டும். அவர்களுக்கு உரிய கிரியை அங்கு செய்யப்பட்டிருந்தால், 3 நாள் காத்தால் போதும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடக்குக் காலத்தில் சந்தியாவந்தனம் செய்யலாம். (மானஸீகமாயேனும் செய்க) ஞான நூல்களை ஓதுவதைச் சமய தீட்சை பெற்றோர் ஒரு நாள் விலக்கலாம். விசேட தீட்சை பெற்றோர் ஆசௌசத்திலும் சிவபூசை செய்யலாம். தாமரை இலையில் நீர் போல் அவர் மனத்தில் துடக்குப்பற்றாது. பக்தி, வைராக்கியம், ஞானம் இல்லாதோர் அகப் பூசை செய்க. அப்போது குரு அன்றேல் ஒத்த தீட்சையுடையவர் அவருடைய புறப்பூசையைச் செய்யவேண்டும். ஆனால் எத்தகுதி உடையவரும் பரார்த்த பூசை (பர + அர்த்தம் = பிறர் . பொருட்டு கோவில் முதலியவற்றில்) செய்யக்கூடாது. ஆசௌசம் உடையவர் கோவில் வெளிவீதியில் நின்று வழிபடலாம். உயர்தீட்சை பெற்றோர் மண்டபத்துள் நிற்கலாம். துடக்குக் காலத்தில் கோவிலுக்குப் பூ எடுத்துக் கொடுக்கக்கூடாது. உருத்திராட்ச மாலை தரிக்கக்கூடாது.

## பூப்பு

பெண்கள் முதற்பூப்பு, மாதவிலக்குக் காலத்தில் மூன்று நாள் துடக்குக் கொள். 18 நாட்களுள் மீண்டும் அடையாளம் கண்டால் ஒரு துடக்கு. 19 நாளில் ஆயின் 2 நாளும், 20 நாள் ஆயின் 3 நாளும் கொள்க. ஆன்மீக வாழ்வில் நம்பிக்கையுள்ளோர் 3 நாளும் முழுகுதல் செய்யார். இக்காலத்தில் அகப்பூசை வழிபாடு செய்யலாம். அவர்களை அறிந்தோ அறியாமலோ தொடுவோர் முழுகி, உரிய மந்திர ஜபம் செய்து சுத்திபெறுகின்றனர்.

## மயிர் களைதல்

துடக்கு நீங்கும்போது மயிர்களைதல் அவசியம் என முன்னர் கூறப்பட்டது. சில கிராமங்களில் சவக்கிரியை தொடங்குமுன் மழித்தல் வழக்கமாய் உள்ளது. துடக்குக் கழியும் தினத்தில் கிரியைகளுக்கு முன்களைதலே சாத்திர சம்பிரதாயம். மத்தியானத்துக்குப் பின்மயிர் களைதல் விலக்கப்பட்டுள்ளது. தலைமுதல் மயிர் நீக்கப்படுவதால் முண்டிதம் எனப்படும். மகன் கடமை செய்ய முடியாமல், இன்னொருவர் தீக்கடன் முதலியன செய்தால் அவரும் அதனைச் செய்யலாம்.

நன்றி : ஆசௌச விளக்கம் ஆ. சபாரத்தினம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துக்களின் வாழ்க்கையில் ஏற்படும் பிறப்பு மரண ஆசௌச காலங்கள்.

## ஆசௌசம் என்பது என்ன?

பிறப்பு, மரணம், ருதுவாதல் ஆகிய காலங்களில் தீட்டுக் கவனிக்கப் படுகிறது. இதில் சூதகம் எனப்படும் ருதுவாதலே மிக அதிகமான தீட்டு என சாஸ்திரங்கள் கூறியிருப்பினும் அந்தத் தீட்டு குடும்பத்தவர்களையோ உறவினர்களையோ பாதிப்பதில்லை. பருவமடையும் போதும் பின்னர் மாத விலக்காகும் போதும் அப்பெண் தனித்து இருக்குமாறு வைக்கப்பட்டு குடும்பத்தின் ஏனைய அங்கத்தவர்கள் அவருடன் தொடர்பின்றி இருந்தால் அவர்களுக்கு தீட்டு இல்லை. ஆனால் அதிகமான குடும்பங்களில் அப்பெண் வீட்டின் சகல பகுதிகளிலும் நடமாடுவதாலும் மற்றவர்கள் அவளோடு தொட்டுப் பழகுவதாலும் ஆடைகள் ஒன்றோடொன்று தொடர்புபடுவதாலும் துடக்கு ஏனையோருக்கும் காக்கப்பட வேண்டி நேர்கிறது.

பிறப்பு, இறப்பு சம்பந்தப்பட்ட துடக்குகள் கடல் கடந்து வாழ்ந்தாலும் இரத்த உரித்தாளர்களால் காக்கப்பட வேண்டும். உறவு என்பதும், உரிமை என்பதும் உடல் சம்பந்தப்பட்டவை அன்று, உளம் சம்பந்தப்பட்டவை. அதனால் இடைவெளி இதனால் பாதிக்காது.

மஹோற்சவம் முதலிய ஆலய பெருவிழாக்களின் போது இல்லங்களில் திருமணம் முதலிய எவ்வித விசேட கிரியைகளையும் செய்யாமல் தவிர்த்துக் கொள்வது எம்மை முழுமையாக ஆலய விழாக்களில் இணைத்துக் கொள்வதற்காகவே. இதே போல இல்லத்தில் நமது உறவுகளின் மிக முக்கியமான சில இன்ப துன்ப நிகழ்வுகளின் போது நாம் ஆலயத்திற்கும் போகாமல் அச் செயற்பாடுகளில் எம்மை முழுமையாக ஈடுபடுத்த வேண்டும் என்பது ஆசௌசம் காத்தலில் உள்ள ஒரு சிறப்பான அம்சம். இன்னும் பல நுணுக்கமான காரணங்கள் இருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர்ம சாஸ்திரங்கள் வர்ணாசிரம தர்மத்தின் அடிப்படையிலேயே ஆசார ஒழுக்கங்களை வகுத்துக் கூறுகின்றன. அதனால் அந்தணர்களுக்கும் அந்தணர் அல்லாதோர்க்கும் ஆசௌச தினங்கள் வேறுபடுகின்றன. அதனைக் காத்தல் பிதிர்க்கடன் முதலிய அபரக்கிரியைகளைச் செய்தல் முதலியவற்றிலும் சில வேறுபாடுகள் உண்டு. எனினும் அந்தணர்க்கும், ஏனையோருக்குரிய ஆசாரம் பற்றிய கோட்பாடுகளில் நிறைய ஒற்றுமைகள் உண்டு.

*காமிகாமத்தில்.*

*விப்ரே சுத்திர் தசாஹஸ்யாத்*
*க்ஷத்ரியே த்வாதசாஹ் நிகாத்*
*தச பஞ்சாஹ்நிகாத் சுத்தி*
*வைஸ்யே. சூத்ரே ச மாசிகாத்*

என ஆசௌச நியமம் கூறுகின்றது.

அந்தணர்களுக்குப் பத்து நாட்களிலும், க்ஷத்திரியர்களுக்கு 12 நாட்களிலும், வைஸ்யர்களுக்கு 15 நாட்களிலும், ஏனையோருக்கு 31ம் நாளிலும் துடக்கு நீங்குகிறது என்பது பொருள். இதே கருத்தை சுவாயம்புவ ஆகமமும் கூறுகிறது.

இந்நாளில் க்ஷத்திரியர், வைசியர் என்ற வகுப்பினர் உரிய முறைப்படி காண்டலரிது. மாமிச போசனம் நீங்கிச் சமய, விசேட தீட்சைகளைப் பெற்று நித்திய சிவபூசை வழிபாட்டுடன் இருக்கும் சைவக் குருமாரும் வேறு சிலரும் வைசிய வகுப்பார் போல் நோக்கப்படலாம். ஏனையோர் யாவரும் அந்தணர், அந்தணர் அல்லாதோர் என இரு வகுப்பில் அடங்குவர்.

## ஆசௌசம் எத்தனை நாட்கள்?

பூரண ஆசௌசம் என்பது அந்தணர்களுக்குப் பத்து நாள். மச்ச மாமிச போசனமின்றி சைவசமய ஆசாரப்படி ஒழுகும் நற்சூத்திரருக்கு 15 நாளும் ஏனையோருக்கு 30 நாளும் ஆசௌசம் என்பது யாவரும் ஒப்புக் கொள்ளும் நியதிகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயங்களில் தொண்டு புரியும் சிவகன்மருக்கு 20 நாளும் திராவிட கானம் பாடவல்லாருக்கு 15 நாளும் ஆசௌசம் காக்கப்பட வேண்டும் என்ற ஒரு குறிப்பும் உண்டு. இது அவர்கள் சுத்த சைவர்களாக ஒழுகுவதால் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

பாரதத்தின் சில பிரதேசங்களில் 21ம் நாள் துடக்குக் கழிக்கும் வழக்கம் மரபு வழி நிலவுகிறது. யாழ்ப்பாணத்தில் சிலர் 16ம் நாள் துடக்குக் கழிக்கின்றனர். மேலே குறிப்பிட்ட விதிவிலக்கைத் தமக்கு சாதகமாக இவர்கள் எடுத்துக் கொள்கின்றனரேயன்றி இதற்குச் சாஸ்திரப்பிரமாணம் இல்லை.

## ஆசிரம அடிப்படையில் ஆசௌசம்.

வருணாசிரம அடிப்படை என முன்னர் குறிப்பிட்டவாறு வருணம் பற்றி விளக்கத்தை மேலே கண்டோம். ஆச்சிரமம் என்பது பிரமசரியம் (மாணவப் பருவம்), கிருஹஸ்தம் (இல்லற நிலை), வானப்பிரஸ்தம் (துறவுக்கு ஆயத்த நிலை), சந்நியாசம் (துறவு) என்ற நான்கு வாழ்க்கைப் படிநிலைகளைக் குறிக்கும். ஆசௌசமானது இல்லறத்தோருக்கு மட்டுமே உண்டு. பிரமச்சாரிகள் தாய், தந்தையருடன் சேர்ந்து வாழ்வதால் அவர்களுக்கும் ஆசௌசம் ஏற்படும். (முற்காலத்தில் குருகுல வாசத்திலிருந்து தீட்டு இல்லை) ஆனால் தாய் தந்தையரை விட்டு விலகித் தனித்திருந்தால் பிரமச்சாரிகளுக்குத் துடக்கு இல்லை.

## ஒருவருடைய துடக்கு அவர் சார்ந்த யார் யாருக்கு வரும்?

இதற்கான விளக்கத்தை விழிநாதர் இயற்றிய அகபஞ்ச சஷ்டி நூல் தெளிவாக வரையறுக்கிறது. வைத்ய நாத தீட்சிதீயம், ஆசௌச தீபிகை முதலிய நூல்களும் 'அண்ணா' என்பார். உரைவகுத்த 'யஜுர்வேதிய ஆபஸ்தம்ப அபரப் பிரயோகம்' என்ற நூலும் இந்த விபரங்களைத் தருகின்றன. இவற்றை ஆராய்ந்து தொகுத்த பிரம்மஸ்ரீ. நடன சபாபதிசர்மா அவர்கள் தமது தகன சமஸ்காரம் எனும் நூலின் அநுபந்தத்தில் சில விபரங்களைத் தந்துள்ளார். அவற்றை இக்கட்டுரை பெரிதும் எடுத்தாளுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் ஆண் மகனுக்கு அவனுடைய பிதா (தந்தை), பிதாமகன் (தந்தையின் தந்தை), ப்ரபிதாமகன் (தந்தையின் தாத்தா), விருத்தப் பிதாமகன் (தந்தையின் தாத்தாவின் தந்தை), ப்ரவிருத்தப் பிதாமகன் (தந்தையின் தாத்தாவின் தாத்தா), அதிப்ரவிருத்தப் பிதாமகன் (அவரின் தந்தை) என்னும் அறுவரும் அவ்வறுவருடைய புத்திரர் (மகன்), பௌத்திரர் (மகனின் மகன்), ப்ரபௌத்திரர் (பௌத்திரனின் மகன்), பிருத்தப் ப்ரபௌத்திரர் (பௌத்திரனின் பௌத்திரன்), ப்ரவிருத்தப் ப்ரபௌத்திரர் (பூட்டானின் மகன்), அதிப் ப்ரவிருத்தப் ப்ரபௌத்திரர் (பூட்டானின் பேரன்) ஆகிய அறுவரும் அவர்களுடைய புத்திரர்களும் ஆகிய ஏழு தலைமுறையினர் ஆசௌச உரிமையாளர் ஆவார். இவர்கள் சபிண்டர் எனவும் ஞாதிகள் எனவும் அழைக்கப்படுவர். சுற்றத்தவர் என இங்கே அவர்கள் சுட்டப்படுகின்றனர்.

## ஆசௌசம் எத்தனை நாள் எனக் கணிப்பது எப்படி?

பூரண ஆசௌசம் என்பது அந்தணரும் 10 நாள். ஏனையோருக்கு 30 நாள் எனும்போது மூன்று மடங்காக அமைவது போலவே அதற்குக் குறைந்த நாட்கணக்குகள் கூறப்படும் போதும் அந்தணர்க்குரிய நாளில் மூன்று மடங்காக ஏனையோருக்குக் கொள்ள வேண்டும்.

## ஆசௌசம் எவ்வகைகளில் ஏற்படலாம்?

ஆசௌசம் 10 வகையாக ஏற்படலாம். என நூல்கள் விதிக்கின்றன.

பிறத்தல், இறத்தல், சுடுதல், பிரேதத்தின் பின் செல்லல், சுடுதல், அழுதல், ஆசௌசியின் அன்னம் புசித்தல், ஆசௌசிகளுடன் கலத்தல், வபனம் (முகச்சவரம்) செய்யாமை, சபீண்டிகரணம் முதலியன செய்யாமை என்பவையே அவை.

பிறப்புத் தீட்டிலும் இறப்புத் தீட்டு இரு மடங்கு வலிவுடையது. பூப்படைதல் அதைவிட இருமடங்கு. மரணத்தினால் ஏற்படும் தீட்டை விட இறந்தவரைத் தகனம் செய்வதால் ஏற்படும் தீட்டு இருமடங்கு வலிமையுடையது எனக் காமிகம் கூறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசௌச விபரங்கள்

## 01. ஜனன ஆசௌசம் (பிறப்பு சம்பந்தமான துடக்குகள்)

❋ ஆண் குழந்தை பிறந்தால் 30 நாளும் பெண் குழந்தை பிறந்தால் 40 நாளும் தாய்க்கு ஆசௌசம் உண்டு.

❋ ஆண் குழந்தை பிறந்தால் தந்தைக்கும், உறவினர்க்கும் (முன்னாள் காட்டிய -வாறு 7 தலைமுறையினர்க்கு) பூரண ஆசௌசம்.

❋ பெண் குழந்தை பிறந்தால் குழந்தையின் சகோதரர், தந்தை, தந்தையின் உடன் பிறந்தோர், அவர்களது புதல்வர்கள், தந்தையின் தந்தை, அவருடன் பிறந்தோர் ஆகியோருக்கு பூரண ஆசௌசம்.

❋ நிறைமாதத்தில் குழந்தை இறந்து பிறந்தாலும், பிறந்து இறந்தாலும் மரண ஆசௌசம் இல்லையெனினும் ஜனன ஆசௌசம் பூரணமாக ஞாதிகள் யாவருக்கும் (உறவுகளுக்கு) உண்டு.

❋ 7ம், 8ம், 9ம் மாதங்களில் குழந்தை பிறந்து இறந்தாலும் தாய் தந்தையார்க்கு பூரணை ஆசௌசம், சகோதரர் முதலியோர்க்கு கேள்விப்பட்டதும் ஸ்நான -த்துடன் சுத்தமாகும்.

❋ கர்ப்பம் கரைந்தால் (கருச்சிதைவு ஏற்பட்டால்) எத்தனை மாதத்தில் அது நிகழ்ந்ததோ அத்தனை நாள் துடக்குத் தாய்க்கு மட்டும் உண்டு (உ + ம் :- 4ம் மாதத்திலாயின் 4 நாள் பிராமணர்க்கு ஏனையோர்க்கு 12 நாள்)

❋ ஒரு குழந்தை பிறந்து ஆசௌச நீக்க தினத்தின் பின் அந்தச் செய்தி கேள்விப் பட்டால் தந்தை ஸ்நானத்தால் சுத்தமடைகிறார். ஏனையோர்க்கு ஆசௌசம் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 02. மரண ஆசௌசம் (இறப்புப் பற்றிய தீட்டுக்கள்)

※ பொதுவான மரணத் துடக்குகள் உறவினர்க்கு பூரணமாக உண்டு. (அந்தணர்க்கு 10 நாள். ஏனையோர்க்கு 30 நாள்).

### ஆண் குழந்தை

※ குழந்தை பிறந்து துடக்கு கழியுமுன் இறந்தால் பெற்றோருக்கு மட்டும் பூரண ஆசௌசம். ஏனையோருக்கு ஸ்நானத்தால் சுத்தம்.

※ 3 வயதுக்குட்பட்ட குழந்தை இறந்தால் சகோதரர் பெற்றோருக்கு பூரண ஆசௌசம். ஏனையோருக்கு அந்தணராயின் ஒரு நாளும் ஏனையோராயின் 3 நாளும் ஆசௌசம்.

※ 3 வயதுக்கு மேல் உபநயனம் செய்யுமுன் இறந்தால் அல்லது ஏழு வயதுக்கு முன் இறந்தால் அந்தணர்க்கு 3 நாள், ஏனையோருக்கு 9 நாள் (பெற்றோருக்கு, சகோதரர்களுக்கு பூரண ஆசௌசம்).

※ ஏழு வயதுக்குமேல் ஒரு பிள்ளை இறந்தால் பெற்றோருக்கும், சகோதரர்களுக்கும் பூரண ஆசௌசம்.

### பெண் பிள்ளை.

※ மூன்று வயதுக்குட்பட்ட பெண் குழந்தை இறந்தால் பெற்றோருக்கும் சகோதரருக்கும் மட்டும் ஆசௌசம். உறவினர்க்கு ஸ்நானத்துடன் நீங்கும்.

※ மூன்று முதல் எட்டு வயது வரையான பெண் பிள்ளை இறந்தால் அந்தணர் ஆயின் ஒரு நாளும் ஏனையோர் 3 நாளும் காக்க வேண்டும். பெற்றோருக்கும் சகோதரர்களுக்கும் பூரண ஆசௌசம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✲ எட்டு வயதின் மேல் திருமணத்திற்கு முன் இறந்தால் அந்தணர் 3 நாளும் ஏனையோர் 9 நாளும் காக்க வேண்டும். (உறவினர்) பெற்றோருக்கும் சகோதரர்க்கும் பூரண ஆசௌசம்.

✲ திருமணமான ஒரு பெண் இறந்தால் அவளது தந்தை வழி உறவினர்க்கு ஆசௌசம் இல்லை. கணவனுக்கும் அவனது உறவுகளுக்கும் பூரண ஆசௌசம்.

## 03. விசேட விதிகள்.

✲ ஒருவர் இறந்தால் அவரது தாயின் தந்தை, தந்தையின் தாய், தாய் மாமன் மனைவி, பெண் கொடுத்த மாமனார், பெண் கொடுத்த மாமியார், தாயின் சகோதரிகள், தாயின் சகோதரர்கள் முதலியோர் அந்தணராயின் 3 நாளும் ஏனையோர் 9 நாளும் ஆசௌசம் காக்கவேண்டும்.

✲ ஒரு பிறப்புத் தீட்டை காத்துக் கொண்டிருக்கும்போது இன்னொரு பிறப்புத் தீட்டு வருமாயின்,

(1) பெற்றோர் முழுமையாக ஆசௌசம் (அதாவது 30 நாளும்) காக்க வேண்டும்.

(2) உறவுகளுக்கு முதலாவது ஆசௌசக் கழிவுடன் இரண்டாவது கழிந்து விடும்.

✲ ஒரு மரண ஆசௌசத்தின் நடுவில் ஒரு ஜனன ஆசௌசம் வந்தால் அது முந்திய மரண ஆசௌச முடிவில் கழிந்து விடும். ஆனால் குழந்தையின் பெற்றோருக்கு மட்டும் அவர்களது ஜனன ஆசௌசம் பூரணமாக உண்டு.

✲ ஓர் ஆசௌசம் காத்துக் கொண்டிருக்கும்போது இன்னொரு மரண ஆசௌசம் வந்தாலும் அது முந்திய தொடக்குடன் கழிந்து விடும். ஆனால் தாய் தந்தை, கணவன் அல்லது மனைவி, பிள்ளைகள் இறந்தால் புதிய தீட்டை முழுமை -யாகக் காக்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விசேட விதி விலக்குகள்.

* தற்கொலை மரணத்தினால் தகனம் செய்தவர்களுக்கு மட்டுமே தீட்டு மற்றையோருக்கு இல்லை.

* தற்கொலை செய்து இறந்தவருக்கு மந்திரமில்லாமல் தகனம் செய்து ஆறு மாதம் கழிந்த பின்பே கிரியைகள் செய்ய வேண்டும்.

* யுத்தத்தில் வீரமரணம் அடைந்தோர்க்கு உடனே கிரியைகள் செய்யலாம். இம்மரணத்தினால் உறவினர்க்கு ஆசௌசமில்லை.

## 04. பொது விஷயங்கள்.

* ஜனன, மரண ஆசௌசம் மற்றும் சூதகம் என்பன ஒன்றரை மணிக்கு முன்பானால் முதல் நாள் என்றும் ஒன்றரை மணிக்கு பின்பானால் அடுத்த நாள் என்றும் கணக்கு எடுக்கவேண்டும்.

* ஆசௌச காலத்தில் நித்திய கர்மாநுஷ்டானங்களை மந்திரம் உச்சரிக்காது மானசீகமாகச் செய்யலாம். நித்திய விரதங்களை அனுஷ்டிக்கலாம்.

* தமது தலைமுறையிலுள்ளோரை குறித்து சிராத்தம் மாசிகம் முதலியன செய்யும் தினம் ஆசௌச காலத்தில் வரின் ஆசௌசம் நீங்கிய தினத்தில் அதனைச் செய்யலாம். சிராத்தம் முதலியன ஆரம்பித்த பின் கேள்விப்படின் சிரார்த்தம் நிறைவு பெறும் வரை ஆசௌசம் இல்லை.

* ஆசௌசியின் பொருட்கள், அன்னம் முதலியனவும் ஆசௌசம் என்பதால் அவருடன் பிறர் கலத்தலாகாது.

* தானியம், பொன், பசு, ஆடு, வெல்லம், நெய், எள்ளு, கரும்பு, காய்கறி, தண்ணீர், உப்பு, விறகு, எண்ணெய், மருந்து, அரிசி இவற்றுக்கு ஆசௌசம் இல்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசௌசியின் அன்னம் புசித்தவனுக்கும் ஆசௌசம் நேரும். அறியாது புசித்தால் அவ்வுணவு ஜீரணிக்கும் வரை ஆசௌசம் அறிந்து புசித்தால் ஆசௌசியின் ஆசௌசக் கழிவு நாள் வரை அவ்வுணவு புசித்தவரும் ஆசௌசம் காக்க வேண்டும்.

## 05. பூப்பு ஆசௌசம்.

மாதவிலக்கு காலத்தில் ஒரு பெண் நான்கு நாட்களும் பூரணமாக விலக்கப்பட்டவளே. ஐந்தாம் நாள் எண்ணெய் ஸ்நானத்தின் பின்னரே அவள் நற்காரியங்களில் கலந்து கொள்ளலாம்.

20 நாளில் மேல் பூப்பு வந்தால் மேற்கூறிய முறையில் கடைப் பிடிக்கலாம். 20 நாட்களின் முன் வந்தால் ஸ்நானத்தினால் சுத்தமாகும். அதை மாத விலக்காக கொள்வதில்லை.

முன்னர் குறிப்பிட்டவாறு பூப்புத்தீட்டு குடும்பத்தவரையோ, உறவினர் களையோ பாதிப்பதில்லை. பருவமடையும் போதும் பின்னர் மாதவிலக்காகும் போதும் அப்பெண் தனித்து இருக்குமாறு வைக்கப்பட்டு குடும்பத்தின் ஏனைய அங்கத்தவர்கள் அவளுடன் தொடர்பின்றி இருந்தால் அவர்களுக்கு தீட்டு இல்லை. ஆனால் அதிகமான குடும்பங்களில் அப்பெண் வீட்டின் சகல பகுதிகளிலும் நடமாடுவதாலும் மற்றவர்கள் அவளோடு தொட்டுப் பழகுவதாலும் ஆடைகள் ஒன்றோடொன்று, தொடர்படுவதாலும் துடக்கு ஏனையோருக்கும் காக்கப்பட வேண்டி நேர்கிறது.

**நன்றி :- இதுதான் இந்து மதம் (சர்வானந்தமய பீட வெளியீடு)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சம் தேடுதே....!

பண்பின் உறைவிடமாய்
பாசத்தின் குலவிளக்காய்
அன்பின் வழிநின்று அறிவுடன் வழி நடத்தி
இலட்சியக் கனவோடு எங்களை ஆளாக்கி
வழி நடத்திய எனது அன்புச் செல்வமே
விதி என்னும் சதி வந்து – வேரோடு
சாய்த்ததனால் கண்ணீருடன் ஏங்க விட்டு
நீண்ட தூரம் சென்றதேனோ.......?

நான் செய்த புண்ணியமாய்
உமைத் தந்தையாய் பெற்றேனே
அப்பா! எனும் போதினிலே
என்னுள்ளம் குளிருதிங்கே
நான் பெற்ற பெருஞ் செல்வம்
நீரென்று நினைத்தேனே
பரித விக்க விட்டு இன்று
விண்ணுலகம் எய்தினாயே!



சிங்கம் போல் கம்பீரமாய்
ராஜாவாய் வலம் வந்தாயே
ஒரு வாக்கு நீர் உரைக்க – அவ்வாக்கு
வேதவாக்காய் எதிரொலிக்க
எதிர்வாதம் புரியாமல் அடிபணிந்து
நின்றோமே – இன்று
தலையில்லா முண்டமாய் எங்களை
சிதைத்துச் சென்றாயே அன்னலே?

எத்தனை நெஞ்சங்கள் எனை
நாடி வந்தாலும் – நான்
தேடும் ஒரு நெஞ்சம் – என்றென்றும்
நீர் தானே என் அப்பா......!

சி. மகேஸ்வரி
அன்பு மகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பா

அப்பா என்றாலே நீங்கள் தான் என
அத்தனை பேரும் கூற
அன்பாலும் அரவணைப்பாலும்
அறநெறியுடன் கல்வி தந்து – எம்மை
அரச தொழில் செய்ய வைத்து
ஆனந்தம் கொண்டீரே – அப்பா

காடுவெட்டி சேனை செய்தீர்
காகித ஆலை தொழிலுடன் வயலிலும்
நெல் விதைத்து "போடியார்" – என போற்றப்பட்டீர்
ஆலயங்களை உருவாக்கி
அறப்பணி செய்தீர்
வீடமைத்தீர் வீட்டு வைத்தியம் செய்தீரே – அப்பா

நீதிக்கும், தமிழுக்கும், கல்விக்கும்
சமயத்துக்கும், சமூகத்துக்கும்
பணியாற்ற வழிகாட்டி
இணைபிரியா குடும்ப வாழ்வில்
இமையாகி – எம்மை எல்லாம்
இவ்வுலகில் விட்டு இறையடி சேந்தீர் – அப்பா

இவ்வுலகில் நான் வாழும் வரை
இதயத்தில் பதிந்திருப்பீர் – அப்பா
இறைவனிடம் இணைந்து விட்ட – அப்பா

சீ. லோகேஸ்வரி
மகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்திரர்களின் புலம்பல்

அவணி கொண்ட ஆகாயமாய்
நிறைந்து நின்ற தந்தையவர்
அகன்ற துயர் ஆராது
துவண்டு நின்ற
புத்திரர்களின் புலம்பல் இது

அன்பின் உறைவிடமாய்
அரவணைப்புக்கு ஒரே இடமாய்
பண்பின் தலைவிடமாய்
பார்கொண்டு நின்றார் அன்றோ

பிள்ளைகளிடம் பிரியமானவர் - இவர்
பிள்ளைகளின் பிரியமானவர்
முல்லை முகம் பார்த்து விட்டார்
முழுப்பொழுதையும்கூடவே கழித்திடுவார்

தொட்டில் முதல் கட்டில் வரை
திட்டியதாய் அறிந்ததில்லை
கை நீட்டியதும் என்றுமில்லை
முட்டி வரும் சோகமதால் - நாம்
முற்று முழுதாய் சொல்லவில்லை

பாகுபாடு பார்த்ததில்லை - அங்கு
பாசத்திற்கு பஞ்சமில்லை
பேச்சிக்கேனும் வஞ்சியதில்லை
எவர் மீதும் கோபம் கொண்டு
வாரி மண் வார்த்ததில்லை

அயலவர் அன்புக்கு பாத்திரமானவர்
அவர்களுக்கெல்லாம் சாத்திரமானவர்
எதற்கும் அவர் சூத்திரமானவர்
செயலில் அவர் பவித்திரமானவர்

அறுபத்தினான்கு வருடமாம் மண வாழ்வில்
அன்னையின் மீது அன்பானவர்
அவர் கருமங்களின் துணையானவர்
பிணக்கு என்பது அண்டியதில்லை
பிரிவு என்பது கிட்டவுமில்லை

உன்னையும் பழிவாங்கியதில்லை
என்னையும் பழிவாங்கியதில்லை
போனால் போகட்டும் விடும் என்பது அவர்
வாக்கு
நல்ல வழி பார்த்து நட என்பதே ஒரே
வாக்கு

தம் நான்கு சகோதரர்களுக்கு
தருமர் ஆனார்
அவர்களுக்கு பணி செய்தே
நல்ல தருமி ஆனார் - இங்கு
தம்பணியாற்றி அவர்கள் இல்லை
என்பதே அவர் கவலை

இறைவனை மறந்ததில்லை
இறைபணியில் சோர்ந்ததில்லை
அதிகாலை எழுந்திடுவார்
மலருடன் காளி காம்பாள் தலம்
சென்றிடுவார்

காளி கோயில் கோபுரம் என்பது
அவரது கனவு
விரைவில் ஒரு நாள் அதுவே அங்கு
ஆகிடும் நனவு

இறுதியில்,
மோட்சம் வேண்டி
தியானமும் செய்து
இயல்பாய் தாமும்
இறைபதம் சென்றார்.

இல்லை என்ற இயலவில்லை
சொல்ல மனம் குமுறுதப்பா
இத்தனையும் வாழ்ந்து காட்டி
எங்கு சென்றார் எங்களப்பா
இனியும் நாம் எங்கு காண்போமோ....?

**புத்திரர்கள்**
**சீ. காளிதாசன், சீ. யோகேஸ்வரன்,**
**சீ. நாகராஜா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளத்திலிருந்து.....

மண்குளிர சித்திரையில் பிறந்து வளர்ந்து
மனம் குளிர இறைவனுக்குத் தொண்டாற்றி
பங்குனியிலே விட்டுப் பிரிந்த மகளுடன் – ஆடியிலே
சென்றீரோ வாழைச்சேனை கண்ட காளியின் மைந்தனே!
நின்னுயிர் இன்னுயிர் என்று
உலகம் பறைசாற்றுது இன்று
அவ்வுயிர் உடல் விட்டு பிரிந்து
சென்றது எங்கோ?

நண்பகல் இன்முகத்துடன்
விடைகொடுத்து அனுப்பிய பெரியம்மாவை
நள்ளிரவு உயிரில்லா உடலாய்
கண்டேன் அன்று – அதுபோல்
முதல் நாள் கண்ணசைவில் பேசி
கைகுலுக்கி அனுப்பிய நீங்கள்
மறுநாள் புலனற்ற ஊமையாகி
கண்ணீரை பொங்க வைத்தீரே இன்று.

உங்கள் உடல் மண்ணில்
புதையுண்டு போனாலும் – நீர்
தந்த இன்ப நினைவுகள் உங்களை
நினைவூட்டும் என்றும் – இருப்பினும்
கால ஓட்டத்தில் எத்தனை சிரிப்புக்களை
நான் கண்டாலும் – அன்று
Sugar Brother உங்கள் உதட்டருகில் நான் கண்ட
சிரிப்பினை மீண்டும் கானேனோ அம்மப்பா....!

கண்ணீருடன்
சி. ஷந்துஜா (நந்து)
பேத்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் அம்மப்பா

அன்பின் இருப்பிடமாய்
பண்பின் பிறப்பிடமாய்
பாசத்தின் ஊற்றாய் - எம்மை
பார்த்தாயே அம்மப்பா!

பாரினில் வாழ்ந்த காலங்களில்
பாசத்தோடு எமை எல்லாம்
பாராட்டி சீராட்டி வளர்த்தாயே
எங்கள் அம்மப்பா!

பாலர் பருவம் தண்ணில் - நாம்
பாடசாலை செல்ல
பாசத்தோடு அழைத்து சென்ற
எங்கள் அம்மப்பாவே!

காலம் கடந்தது. நீ எங்கு சென்றாய்
காரணமாய் உன்னை அழைத்தது காலனின் செயலோ
காலமெலாம் உனை நினைத்து
கண் கலங்க வைத்தாயே அம்மப்பா!

நாங்கள் பாலர்களாய் இருந்த போது
பாசத்தோடு அரவணைத்தாயே
பால்போல மனமுடைய நீ எம் வளர்ச்சிதனை பாராமல்
எங்கே சென்றாய் அம்மப்பா!

தாயை இழந்து தவித்த எங்களுக்கு
காவல் தெய்வமாய் எங்களோடு
சிலகாலம் இருந்தாயே
கதிரவனை கார்மேகம் சூழ்ந்தாலும்
உன் நினைவுகள் எமை விட்டு என்றுமே நீங்காது
எங்கள் அம்மப்பா!

**யோ. விக்னேஷ்வரி.**
**ச. கௌரி**
**(பேரப்பிள்ளைகள்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் கண்ட மனிதன்

உறவுகள் பலகோடி எனைச்
சூழ்ந்து நின்றாலும் - என்
உள்ளத்தில் முதலிடம் பெற்ற
என் நாயகன் நீர் தானே!

மாமா எனும் வார்த்தையின்
முழு உருவம் நீரென்று
அன்பு மழை தினம் பொழிந்து
எனை அணைத்த மன்னவனே!

வான் வெளியில் விண்மீன்கள்
பலநூறு நின்றாலும் - வாழையூரில்
நான் கண்ட முதல் விண்மீன்
என்றென்றும் நீர் மட்டுமே!

பல வண்ணக் கனவுகள் உங்களை
நினைவூட்டினாலும் - இனி
உங்கள் இன்முகம் காண
வழியில்லையே என் நெஞ்சமே!

ஞாலத்தில் நான் கண்ட
நியாயத்தின் பிறப்பிடமே
கலியுகத்தில் வாழ்ந்த
கர்ணனும் நீர் தானே....!

ச. சிவநேசன்
அன்பு மருமகன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகள்......

பாலனாய் இருக்கும் போது
பாடசாலை தன்னில் என்னுடன்
துணையாய் நீயும் இருப்பாயே
பாசமிகு எனது அம்மப்பா!

தோளிலும் மார்பிலும் எனை தூக்கி
பாராட்டி சீராட்டி சிறப்போடு எனை வளர்த்தாய்
நான் எத்தனை குறும்புகள் செய்தாலும்
நீ புண் சிரிப்புடன் எனை அரவணைப்பாயே!



பல்சுவை கதைகளையும், பற்பல பாடல்களையும்
பரிவுடன் கூறுவாயே!
பசுமை நிறைந்த செஞ்சமுள்ள
எனது அம்மப்பா!

காளிகோயில் ஆல மர விழுது தன்னில்
எனை நீயும் ஊஞ்சலாட்டி மகிழ்ந்தாயே!
உன் தோளில் எனை தூக்கி
ஊர்வலமும் வந்திடுவாய் என் அம்மப்பா!

பதினாறு வருடங்கள் எனை நீயும்
உனை நானும் என்றும் விட்டுப் பிரிவதில்லை
என் பிரிவுதனை நீ என்றும் ஏற்பதில்லை
எனது அம்மப்பா!

பொல்லூண்டும் வயதினிலும் என்னை
விட்டு நீ வேறு எங்கும் செல்லமாட்டாய்
இப்போது எனை தனியே தவிக்கவிட்டு
எங்கே சென்றாயோ என் அன்புள்ள அம்மப்பா!

நீ எங்கு சென்றாலும் என்
கனவலைகளும், நினைவொலிகளும்
என்றும் உன்னுடன் இருக்கும்
எனது அம்மப்பா!

சி. ஷர்மிலன்
பேரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவலைகள்

வாழைச்சேனை தனில்
மனவாழ்க்கையில் புகுந்த நான்
முத்தான மூன்றாண்டு உங்களுடன்
உறவாடி மகிழ்ந்திருந்தேன்.

பாசமாய் என்னையும் கட்டி அணைத்து
பரவசத்தில் ஆழ்த்தினீரே
உன் ஆதிகால சரித்திரத்தை
அன்போடு கூறுனீரே

பாசம் என்பதன் மறுவடிவம் நீயே தான்
அன்னை தந்தை போன்று அன்போடு
அறிவுரைகளும் கூறுவாயே
அதிலும் ஒரு அகம் கண்டேன் நானும்

அப்பப்பா என்று உரிமையோடு நானும்
உன்னுடன் இருந்தேனே
என் மனமோ கலங்குதையா
உன் குரலை கேட்பதற்கு!



**என். யோகானந்தம் (பாபு)**
**பேரன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடன் பிறவா சகோதரியின் ஏக்கம்....

உறவென உமை எண்ணி நாமிருக்க
உலகை விட்டுச் சென்றாயே
கண்ணீருடன் உறவெல்லாம் இங்கே
கலங்கி நிற்கின்றோம் அண்ணா

பாசமுடன் எம் குடும்பமதில்
ஆதரவு தந்து வாழ்ந்தாய்
எப்பிறப்பில் நாம் காண்போம்
ஏக்கமுடன் அழுகின்றேன் அண்ணா!

**திருமதி. சந்திரசேகரம் காளிப்பிள்ளை**
**பூநகர், ஈச்சிலம்பற்று.**



அமரர் இரத்தினம் சீனித்தம்பி தமது மனைவி நாகரெத்தினத்துடன் தமது இளைய மகள் சந்திரவதனி அவர்களுக்கு பாக்கியராசா என்பவரை திருமணம் செய்து வைத்த திருமண நன்நாளில் எடுக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி.....




காலம் கடந்துகொண்டேயிருக்கும்
நாடியவை. தேடியவை
தூர்ந்து கொண்டே போகும்
வாழ்கை
ஒரு வரையறைக்குள்
முடிந்துவிடும்.
நாளைவரும்.



யார் நிலைப்பார் ?
யார் மரிப்பார் ?
எப்போதென்று எதுவும் தெரியாது
தசாப்தங்கள் எட்டு கடந்து
நற்பல சேவை செய்து
வாழ்ந்திருந்தார்
நன் மக்களும் போற்றிடவே !
இட்ட பணி முடிந்ததென்று
எம்மை விட்டுச்
சென்றாரோ.........

**அமரர்**
**இரத்தினம் சீனித்தம்பி**

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1926.04.22 | 2014.07.21 |



எவருக்கென்று.
எவர் ஆறுதல் சொல்ல
மனம் ஆற்றி
வழி நடப்போம்

**கோறளைப்பற்று தமிழ்**
**வர்த்தக சங்கம்**
**பிரதான வீதி ,வாழைச்சேனை**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மலர்வு
22
04
1926



உதிர்வு
21
07
2014

அமரர்

## திரு.இரத்தினம் சீனித்தம்பி

**புதுக்குடியிருப்பு வாழைச்சேனையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் சீனித்தம்பி அவர்கள் 21.07.2014 அன்று காலமானார்.**

அன்னார் புதுக்குடியிருப்பு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானத்தின் ஆன்மீகச் சேவையாளரும், மட்டக்களப்பு மாவட்டத்தின் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினருமான கௌரவ சீ.யோகேஸ்வரன் ஐயா அவர்களின் அன்பு தந்தையுமான அமரர் திருவாளர் இரத்தினம் சீனித்தம்பி 88 வருட பூவுலக வாழ்வை நீர்த்து புகழுடம்பு பெற்றுள்ளார்.

**அன்னாரின் துயரத்தில் நாமும் எமது கதிரவெளி புதூர் புச்சாக்கேணி வாழ் பொதுமக்கள் அனைவரும் பங்கு கொள்கின்றோம்.**

துயரத்தில் மூழ்கியுள்ள அன்னாரின் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் மன ஆறுதலடையவும் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் கதிரவெளி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் துணை புரிவாராக!

இவ்வண்ணம்
ஸ்ரீ பத்திர காளியம்பாள் தேவஸ்தானம்
கதிரவெளி

ஸ்பீட் டிஜிடல், கிரான்-0652054811 / 0773348000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மண் மகிழ்ந்தது — கண் நெகிழ்ந்தது

1926 / 04 / 22 — 2014 / 07 / 21



## அமரர். இரத்தினம் சீனித்தம்பி அவர்கள்

புதுக்குடியிருப்பு, வாழைச்சேனை

குடும்பத்தின் தலைவா
எங்களைத் துயரில் ஆழ்த்தி விட்டு
எம்மை விட்டுப் பிரிந்து போனதேனோ!
நிரந்தரமாய் துயில் கொள்ளும்
உம்மைப் பார்த்து
எங்கள் துயரம் நின்று விடுமோ!
உன் மனைவி, பிள்ளைகள், உறவுகளும் இங்கு
உம் இழப்பை நினைத்து
துடிதுடிக்குது பாருமையா!
உங்களின் ஆத்மா இறைவனுடன்
இரண்டறக் கலக்கட்டும்!
அன்னாரின் ஆன்மா ஈடேற்றமடைய
பிரார்த்திக்கின்றோம் இறைவனையே...!

தங்கள் துயரில் இணைந்து கொள்ளும்
மத்தியஸ்த குழாம்,
கோறளைப்பற்று,
221-வாழைச்சேனை.

அக்ஷித்தா பதிப்பகம், வாழைச்சேனை : 065 – 2258108



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் இரத்தினம் சீனித்தம்பி அவர்களது

மறைவையொட்டி

மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையின்

## இதய அஞ்சலி

| அன்னை மடியில் | | ஆண்டவன் அடியில் |
|---|---|---|
| 22 | | 21 |
| 04 | | 07 |
| 1926 | | 2014 |



இரத்தினம் இராசம்மா
இயைபுற்று இப்புவியில்
வந்துதித்தவனே !

சீனித்தம்பி பேருடையாள்
நீவீர்,
வாழ்ந்தகாலம் போதுமென்று
காலவன் அழைத்தானோ?

கண்கலங்கி கதறுகிறோம்
விண்ணகம் கேட்கவில்லையா!

கண்கழன்று காரிகையாள்
அழுகின்றாள் - நாக
ரெத்தினம்மாவை ஒருதரம் பாராயோ !

நீங்கள் இல்லை என்ற சொல்லை
தாங்கமுடியவில்லை

பெற்ற பிள்ளைகள் ஏங்குகின்றார்கள்
ஆறாத்துயரில் மனம் புதைக்கின்றோம்
நாம்...

நீங்கள் இறந்தநாளும் எங்களுக்கு
இருண்ட நாளே!

கரகரத்த அந்த குரல்
தோள் தடவி விடும்
உங்களது பாசம்
இன்னுமின்னும் நீண்டுசெல்லும்
இந்த நேசம் கூட்டிச் செல்லும்
உங்களது நினைவோடு

உங்களது முகம்பார்க்க முடியாத
நாட்களை கடப்பது எப்படி
இனி....
எங்களுக்கு இவை
ரணகளப் பொழுதுகள் தான்

எந்த மரணச் செய்தி கேட்டாலும்
உங்களது இறப்பு
எங்களுக்குள் பேசப்படும்.
உங்களது
நினைவுகளோடு நாம் ...

உங்களது நீண்ட நித்திரை
நிம்மதிப்படுக....
உங்களது ஆத்மா
சாந்தி பெறுக.
கண்ணீர்ப்பூக்களை
அர்ச்சனைக்கின்றோம்

இதய அஞ்சலி

இந்து இளைஞர் பேரவை
மட்டக்களப்பு மாவட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மரண அறிவித்தல்

மண் மகிழ்ந்தது

1926

04

22



கண் நெகிழ்ந்தது

2014

07

21

# அமரர். இரத்தினம் சீனித்தம்பி (அவர்கள்)

வாழைச்சேனை புதுக்குடியிருப்பை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அமரர். இரத்தினம் சீனித்தம்பி அவர்கள் 2014.07.21ம் திகதி (திங்கட்கிழமை) அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம் இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இளையதம்பி நல்லம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகனும், திருமதி. நாகரத்தினத்தின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற பூமணிதேவி, மகேஸ்வரி (முன்னாள் வாழைச்சேனை நாகிந் ஆலை ஊழியர்), யோகேஸ்வரி (கல்குடா கல்வி வலய ஆசிரிய ஆலோசகர்), வாழைச்சேனை பிரதேச இணக்கசபை தவிசாளர்), காளிதாசன் (அதிபர், மட்டக்கு காயான்கேணி சரஸ்வதி வித்தியாலயம்), யோகேஸ்வரன் (தலைவர், மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை, பாராளுமன்ற உறுப்பினர்), நாகராஜா (ஆசிரியர், மட்டக்கு வாழைச்சேனை இந்துக்கல்லூரி), சந்திரவதனி (ஆசிரியை, மட்/வின்சன் மகளிர் உயர்தர பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும், சதாசிவம் (முன்னாள் தபால் ஊழியர், வாழைச்சேனை), சிவநேசன் (நீர்பாசனத் திணைக்களம், செங்கலடி), பாக்கியராசா (பிரதி அதிபர், திமு/கலைமகள் இந்துக்கல்லூரி, பள்ளிக்குடியிருப்பு), ஞானவதி ஆகியோரின் அன்பு மாமனாரும், பாக்கியம், செல்லமுத்து (வேவி), காலஞ்சென்றவர்களான காளிக்குட்டி, வேலுப்பிள்ளை, கணபதிப்பிள்ளை, சுப்பிரமணியம், சிவலிங்கம், பொன்னம்மா ஆகியோரின் அன்பு சகோதரனும், சின்னையா, பாக்கியம், நேசம்மா, விமலா, பரமேஸ்வரி, காலஞ்சென்றவர்களான விநாயகம், காளிக்குட்டி, சந்தியநாதன், முருகேசு ஆகியோரின் மைத்துனரும், தவமணி, புஸ்பராணி ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும், பூவேந்திரன், விக்கேஸ்வரி, (மட்/கல்குடா நாமகள் வித்தியாலயம்), சிவானந்தம், கௌரி, ஷந்துஜா, ஷர்மிலன், காலஞ்சென்ற நகுலராஜா ஆகியோரின் அம்மப்பாவும், யோகானந்தம் (சமுர்த்தி உத்தியோகத்தர்), தஸ்ஜிஸனி, கிருர்சிநன் ஆகியோரின் அப்பப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று, இன்று செவ்வாய்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் வாழைச்சேனை இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர், புதுக்குடியிருப்பு, வாழைச்சேனை.**

நல்லத்தை பதிப்பகம், வாழைச்சேனை. 2258103



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மண் மகிழ்ந்தது | கண் நெகிழ்ந்தது



1926 04 22 | 2014 07 21

## அமரர். இரத்தினம் சீனித்தம்பி அவர்கள்

புதுக்குடியிருப்பு, வாழைச்சேனை

புதுக்குடியிருப்பு வாழைச்சேனையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் சீனித்தம்பி அவர்கள் 21.07.2014 (திங்கட் கிழமை) அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற இரத்தினம் இராசம்மாவின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இளையதம்பி நல்லம்மாவின் பாசமிகு மருமகனும் திருமதி.நாகரெத்தினத்தின் பாசமிகு கணவனும் காலஞ்சென்ற பூமணிதேவி, மகேஸ்வரி,(முன்னாள் காதிநாலை ஊழியர்) லோகேஸ்வரி (ஆசிரிய ஆலோசகர்,கல்குடா வலயம்), காளிதாசன் (அதிபர், மட்/கது/காயான்கேணி சரஸ்வதி வித்தியாலயம்), யோகேஸ்வரன்(பாராளுமன்ற உறுப்பினர்), நாகராஜா(ஆசிரியர், மட்/கது/வாழைச்சேனை இந்துக்கல்லூரி), சந்திரவதனி(ஆசிரியை, மட்/வின்சன்ட் மகளிர் உயர்தர பாடசாலை, மட்டக்களப்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும் சதாசிவம்,(முன்னாள் தபால் ஊழியர்,வாழைச்சேனை) சிவனேசன், (நீர்ப்பாசனத் திணைக்களம்.செங்கலடி) பாக்கியராஜா(பிரதி அதிபர், தி/மூ/கலைமகள் இந்துக்கல்லூரி , பள்ளிக்குடியிருப்பு) ஞானவதி ஆகியோரின் அன்பு மாமனாரும் பாக்கியம், செல்லமுத்து (வேலி) காலஞ்சென்றவர்களான காளிக்குட்டி, வேலுப்பிள்ளை,கணபதிப்பிள்ளை, சுப்பிரமணியம், சிவலிங்கம், பொன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், சின்னையா, பாக்கியம், நேசம்மா, விமலா, பரமேஸ்வரி, காலஞ்சென்றவர்களான விநாயகம், காளிக்குட்டி, சத்தியநாதன், முருகேசு ஆகியோரின் மைத்துனரும் தவமணி, புஸ்பராணி, ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும் பூவேந்திரன், விக்னேஸ்வரி, (மட்/கது/நாமகள் வித்தியாலயம்) ஜீவானந்தம், கௌரி, ஷந்துஜா,ஷர்மிலன் ஆகியோரின் அம்மப்பாவும் , யோகானந்தம் (சமுர்த்தி உத்தியோகத்தர்) தர்சிகன், கிதர்சிதன் ஆகியோரின் அப்பப்பாவும் காலஞ்சென்றவர்களான வேல்முருகன், இளையதம்பி, புஸ்பராசா ஆகியோரின் மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று இன்று பிற்பகல் (22.07.2014 – செவ்வாய்க் கிழமை) 3.00 மணியளவில் வாழைச்சேனை இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்: விநாயகம் விக்னேஸ்வரராசா குடும்பத்தினர்,
திருமலை வீதி, புச்சாக்கேணி.


சக்தித்தா பதிப்பகம், வாழைச்சேனை : 065 – 2258108



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
22
04
1926



மறைவு
21
07
2014

வாழைச்சேனையை பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர். இரத்தினம் சீனித்தம்பி

(ஓய்வு பெற்ற காகிதஆலை ஊழியர்)

நெஞ்சமதில் நிலைத்து நின்று
எண்ணமதில் என்றும் நிலைத்து
வண்ண மலர் வாசமென
மனங்களிலே வீசி நின்றீர்
கண்ணிமைக்கும் காலத்துள்
காலனுடைக் கலந்து சென்ற
கொடுமையையெண்ணிக் கலங்குகின்றோம்
மனம் வெதும்பி வாடுகின்றோம்
வேண்டுகின்றோம் இறைவனிடம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர்கள்,மாணவர்கள், பழைய மாணவர்கள்
மட்/கல்/காயான்கேணி சரஸ்வதி வித்தியாலயம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 1926 |  | 2014 |
| 04 | | 07 |
| 22 | | 21 |

## அமரர். இரத்தினம் சீனித்தம்பி (அவர்கள்)

வாழைச்சேனை புதுக்குடியிருப்பை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அமரர். இரத்தினம் சீனித்தம்பி அவர்கள் 2014.07.21ம் திகதி (திங்கட்கிழமை) அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம் இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இளையதம்பி நல்லம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகனும், திருமதி. நாகரெத்தினத்தின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற பூமணிதேவி, மகேஸ்வரி (முன்னாள் வாழைச்சேனை காகித ஆலை ஊழியர்), லோகேஸ்வரி (கல்குடா வலய ஆசிரிய ஆலோசகர் வாழைச்சேனை பிரதேச இணக்கசபை தவிசாளர்) காளிதாசன் (அதிபர், மட்/ கசு/ காயங்கேணி சரஸ்வதி வித்தியாலயம்) யோகேஸ்வரன் (தலைவர். மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை, பாராளுமன்ற உறுப்பினர்) நாகராசா (ஆசிரியர், மட்/கசு/ வாழைச்சேனை இந்துக்கல்லூரி சந்திரவதனி (ஆசிரியை. மட்/வின்சன் மகளிர் உயர்தர பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கும் நாங்கள்

அதிபர், ஆசிரியர்கள்
கல்விசாரா ஊழியர்கள்
மட்/கசு/ வாழைச்சேனை
இந்துக்கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



மலர்வு 1948.05.24

உதிர்வு 2014.07.21

# அமரர்.இரத்தினம் சீனித்தம்பி அவர்கள்

பேர் சொல்லி வாழ்ந்த பெரு விருட்சம்
இன்று மாயமாய் மறைந்தது ஏனோ?
தாத்தில் தங்கம் எங்கள் அமரர்
இரத்தினம் சீனித்தம்பி ஐயா அவர்கள்.
தனியாகத் தாணியை விட்டேகிய செய்தி
தாங்க முடியவில்லை எமக்குக்- கேட்டதும்.
நன்றாக வாழ்ந்திருந்தார் அன்பு
நாகம்மாவைக் கரம்பற்றி புதுக்குடியிருப்பில்.
அன்புக்கு முறையாய் மூன்று ஆணும்,
ஆசைக்கு நன்றாய், நான்கு பெண்ணும்
ஏழு பிள்ளைகளை ஈன்றெடுத்து
எழுத்தறிவுக் கல்வியும் கற்பித்து
எப்பணிக்கும் முற்பணியாம்
ஆலய அறப்பணியில் முன்னின்று
வாழும் காலமதில் மண்ணில்
மகத்தாக வாழ்ந்திட்டார்.

சீனித்தம்பியின் சிந்தனையோட்டத்திற்கு
உயிர் கொடுத்து, உத்தமராய் வாழ்கின்றார்
யோகமாய் அவதரித்த யோகேஸ்வரன்
எம்பீ அவர்களுடன்,
அதிபரென்றும், ஆசிரியையென்றும்,
இல்லாள், நல்லாள் என்றும் ஏழு மக்களை
அறச் சேவை செய்ய வளப்படுத்தி,
அணைந்து வந்த மருமக்களையும் நெறிப்படுத்தி
எம்பீ யின் தந்தை என்று
பேர் சொல்லி வாழ்ந்த பெருவிருட்சம்
இன்று, மாயமாய் மறைந்தது- இந்த
இனிய ஆத்மா இறைவனடி சேர
பிரார்த்திக்கின்றோம்.
கலைமகள் கல்லூரிச் சமூகம்.

ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

அதிபர்,ஆசிரியர்கள்,ஊழியர்கள்.
தி/மூ/கலைமகள் இந்துக் கல்லூரி,
பள்ளிக்குடியிருப்பு, தோப்பூர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பே சிவம்

# ஆத்மார்த்த அஞ்சலிகள்



அன்னை மடியில்
22 - 04 - 1926

இறைவன் அடியில்
21 - 07 - 2014

எமது சபையின் புரவலராகிய சிவத்திரு சீ. யோகேஸ்வரன் ஐயா அவர்களின் அன்புத்தந்தையார் திரு. இரத்தினம் சீனித்தம்பி அவர்களின் ஆத்மா இறை சிவனின் பாதாரவிந்தங்களில் சாந்தி அடைய பிராத்திக்கின்றோம்.

யாழ்ப்பாணம், கிழக்கு மற்றும் வன்னிப்பிராந்திய
சிவதொண்டர்கள், சிவமகங்கையர்கள்

## சைவமகா சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எங்கள் குடும்பத்தின் தெய்வமாக இருந்து, இப்படித்தான் வாழ வேண்டும் என வாழ்ந்து காட்டி, தமது உறவுகளுக்கும் வழிகாட்டி, இறைபதம் அடையும் காலம் வந்ததும் எம்மை விட்டுப் பிரிந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் பிரிவுத் துயர் காரணமாக, நாங்கள் இச்செய்தியை அறிவிக்க தவறிய அனைத்து உள்ளங்களும், எங்களை மன்னித்து எங்கள் தெய்வத்தின் ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக்குமாறு வேண்டுகின்றோம்.

இவ்வேளை எங்கள் அன்புத் தந்தையின் இறுதி நல்லடக்க சடங்கில் கலந்து கொண்ட அரசியல் பிரதிநிதிகள், ஆன்மீகக் குருமார்கள், அதிகாரிகள், அமைப்புக்களின் பிரதிநிதிகள், உறவினர்கள், அன்பர்கள், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும், இறுதி நிகழ்வில் அஞ்சலி உரை வழங்கியவர்களுக்கும், அதனைத் தொடர்ந்து ஏனைய நாட்களிலும், இன்றைய 31ம் நாள் நினைவு நிகழ்விலும் கலந்து கொண்ட அனைவருக்கும், இறுதி நல்லடக்க நாளில் அனுதாப பதாதைகளை தொங்க விட்ட கதிரவெளி வீரகத்தி விநாயகர் ஆலயம், காயான்கேணி சரஸ்வதி வித்தியாலய மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், இலங்கை தமிழரசுக் கட்சி மட்டக்களப்பு மாவட்ட கிளை இளைஞர் அணி, காந்தி சேவா சங்கம், மட்டக்களப்பு மங்கையற்கரசியார் மகளீர் இல்லம், கிழக்கு இந்து ஒன்றியம், கண்ணகிபுரம் கிராம அபிவிருத்தி சங்கம், புதுக்குடியிருப்பு கலை வாணி கலா மன்றம், வாழைச்சேனை முச்சக்கரவண்டி சாரதி அமைப்பு, கோறளைப்பற்று வடக்கு அதிபர்கள், கல்விக் கோட்ட அதிகாரிகள், குருக்கள்மடம் இந்து இளைஞர் மன்றம், கல்குடா வலயக்கல்வி அலுவலக நலன்புரிச் சங்கம், வாழைச்சேனை தமிழ் வர்த்தக சங்கம், புதுக்குடியிருப்பு வாணி வித்தியாலயம், தேத்தாத்தீவு இந்து இளைஞர் மன்றம், புதுக்குடியிருப்பு சிவில் பாதுகாப்புக் குழு, மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை, கதிரவெளி பத்திரகாளி அம்மன் ஆலயம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுக்குடியிருப்பு, கிராம அபிவிருத்திச் சங்கம், யாழ் கிழக்கு மற்றும் வன்னிப் பிராந்திய சிவதொண்டர்கள், சிவமங்கையர்கள், சைவமகா சபை, அம்பாறை சைவநெறிக் கூடம் அனைவருக்கும் மேலும் எங்களுக்கு நேரடியாகவும், தொலைபேசி மூலமும், தந்தி மூலமும், கடிதம் மூலமும், குறுஞ்செய்தி மூலமும், மின்னஞ்சல் மூலமும், ஊடகங்கள் மூலமும், இணையத்தளங்கள் மூலமும் அனுதாபச் செய்தி வழங்கியோருக்கும் விசேடமாக அகில இலங்கை இந்து மாமன்றத்திற்கும், இரங்கல் பிரசுரம் வெளியிட்டவர்களுக்கும், மலர் மாலை சூட்டிய மட்டக்களப்பு மங்கையர்கரசியார் மகளீர் இல்லம் மற்றும் களுவாஞ்சிக்குடி சக்தி இல்லம், மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம் ஆகியோருக்கும், மலர் வளையம் வைத்த திருச் செந்தூர் முதியோர் சங்கம், மட்டக்களப்பு மங்கையர் கரசியார் மகளீர் இல்லம், மட்டக்களப்பு வின்சன்ட் மகளீர் உயர்தர பாடசாலையினர் ஆகியோருக்கும் புதுக்குடியிருப்பு மரண நலன்புரிச் சங்கத்தினருக்கும், உணவளித்தோர்க்கும், ஏனைய வகையில் உதவிகள் பல புரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், அயலவர்களுக்கும், இந்நூலுக்கு அனுதாபச் செய்திகள், கவிதைகள் வழங்கியோருக்கும், எங்களது துன்பியலில் பல வழிகளிலும் கலந்து உதவிய அனைவருக்கும் எங்கள் குடும்பம் சார்பாக நன்றிகளை தெரிவிக்கின்றோம்.



குடும்பத்தின் சார்பின்
திரு. சீ. காளிதாசன்
(மகன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ இரத்தினம் + ★ இராசம்மா + ★ கந்தப்பர்

சீனித்தம்பி + நாகரெத்தினம்  ★ காளிக்குட்டி  பாக்கியம்

- ரெட்ணசிங்கம் + மாக்கிரேட்
- கிருபைராணி + ★ இராசதுரை
- ★ கோணேசமூர்த்தி + ராணி
- சுதந்திரன் + ராஜேஸ்வரி
- ★ குணசுந்தரி + கதிர்காமத்தம்பி
- ருக்குமணி + சிவநேசன்
- ★ பேரானந்தம்

★ வேலுப்பிள்ளை + பாக்கியம்  ★ கணபதிப்பிள்

- கோபி + செல்வராணி
- லோகிதன் + ★ தேவி
- சுரேஸ் + அனுரா
- கலாரஜனி + குகன்
- ★ கமலேஸ்வரன்
- கலாநந்தினி + சிவசுந்தரம்

- மஞ்சுதன் + சசிகலா
- அகிலன் + கவிதா
- ★ ராகுலன்
- திலகா + பாலகிருஷ்ணன்
- கௌரி + ★ செல்வராசா
- ★ நந்தினி
- குமுதினி + ஜெயசீலன்
- குமுதன் + ராஜலட்சுமி
- தினோசினி + கண்ணன்

★ அமரர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காளிக்குட்டி இரத்தினம் சீனித்தம்பியின் சந்ததிகளின் விபரம்

\+ ★ காளிக்குட்டி

பிள்ளை + நேசம்
- தேவராணி + அன்ரனி
- மகேந்திரன் + வனிதா
- யவுனராணி + தங்கராசா
- யுவராணி + ஜெயக்குமார்
- இராஜேஸ்வரி + பிரபாகரன்
- ★ கிருபானந்தி

★ சுப்பிரமணியம் + விமலேஸ்வரி
- ★ ஜெயராஜ் + எலிசபேத்
- தவமேரி + வீல்கின்சன் கெல்
- யேசுதாசன் + ஜெஸ்மின்
- ஐய்சாயா + சுசிலா
- ஜோச் + செல்வி
- வனிதா றோஸ்பட் + பிரகாசநேசன்
- ஜெயரூபி + புஸ்பராசா
- ★ ஜெயநாதன்
- ஜெயருத் + பிரதீபன்

கிரேஸ் செல்லமுத்து + ★ சத்தியநாதன்
- கோமதி + லிங்கராசா
- இந்துமதி + கருணாநிதி
- சுகுணசுந்தரி
- பாமதி + ஆனந்தன்
- ★ ரவிச்சந்திரன்

★ பெ
(கண

- சு
- வ
- ஜெ
- பிர
- ம

- நாகரெத்தினம் +
- ★ வினாயகம் + த
- ★ சின்னையா +
  - துஜிதா + சிவானந்தன்
  - கோகுலராஜா + அனிதா
  - தர்மிளா ★ ஜெயசுதன்
  - கிருஸ்ணகாந்

- ★ பூமணிதேவி + சதாசிவம்
  - பூவேந்திரன்
  - விக்கினேஸ்வரி + லோகானந்தம்
  - ★ நகுலராசா
  - ஜீவானந்தம்
  - கௌரி
- மகேஸ்வரி + சிவநேசன்
  - சந்துஜா
  - ஷர்மிலன்
- லோகேஸ்வரி
- காளிதாசன்
- யோகேஸ்வரன்
- நாகராசா + ஞானவதி
  - தஸ்நிஜன்
  - கிதர்ஜிதன்
- சந்திரவதனி + பாக்கியராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ கதிர்காமர் + ★ வள்ளியம்மை

★ காசுபதி (சக்கையன் போடியார்)

★ கணபதி + ★ சின்னமுத்து (கோழிப் போடியார்)

→ ★ சின்னையா + ★ மாதம்மை

→ ★ இளையதம்பி + ★ நல்லம்மா

→ ★ நல்லதம்பி + ★ செல்லத்தங்கம்

பொன்னம்மா + ★ முருகேசு
கண்ணகை)

★ சிவலிங்கம் + பரமேஸ்வரி

சுபாஸ்சந்திரன் + ஜெயந்தி
வரதராஜன் + மஞ்சு
ஜெயக்காந்தன் + அருந்ததி
பிரபாகரன் + வக்சலா
மதியாழினி + லோகேந்திரன்

ம் + ★ சீனித்தம்பி

+ தவமணி

+ புஸ்பராணி

→ ★ சுலேந்திரமணி + ★ முருகப்பர்
→ ★ தங்கநாயகம் + ★ செல்லத்துரை
→ ★ பாக்கியம் + ★ ஆறுமுகம்
→ ★ மகேஸ்வரி + ★ சாமித்தம்பி
→ ★ ருக்மணி + ★ ஆறுமுகம்
→ ★ புவனேஸ்வரி + ★ சுப்பிரமணியம்

→ ★ கணேசமூர்த்தி + விசாலாட்சி
→ பவானிதேவி + கனகசிங்கம்
→ சுபத்திராதேவி + ★ லோகேந்திரா

→ ★ வேல்முருகன் + பரமேஸ்வரி
→ ★ இளையதம்பி
→ விக்கினேஸ்வரராசா + மங்களேஸ்வரி
→ ★ புஸ்பராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு
எதை நீ படைத்திருக்கிறாய்?
அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக்கொண்டாயோ
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடைய தாகின்றது.
மற்றொரு நாள் அது
வேறொருவருடையதாகின்றது.



"இதுவே உலக நியதியும் எனது படைப்பின்
சாராம்சமும் ஆகும்"

- பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் -

Evergreen Printers,185A, Trinco Road, Batticaloa. 065-2222607

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org